# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



## மலையகம் 200

ரூபா 250/=

ஜனவரி - மார்ச் 2023



வீரசாமி



வேலாயுதம்



சிவனு இலட்சுமணன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிமிர்வு

இந்த மலைகள் மேற் சேர்ந்து வாழ்ந்த நாம்
இந்த மலைகள் மேல் உழைத்து வேர்த்த பின்
இந்த மலைகள் மேற் சாய்ந்து ஓய்ந்து நல்
ஆடல் பாடலால் சோர்வு நீங்கினோம்
இந்த மலைகளின் வடிவை மாற்றியும்
இந்த மலைகள் மேல் அழகு போர்த்தியும்
இரண்டு நூறாண்டு காலமாய்
இந்த மலைகளோடு உறவு பூண்டுளோம்
இயற்கை சீறிய போதிலே எல்லாம்
பொறுமை காத்த எம் மலைகள் முறைமுறை
சரிவு காண்பதோ அழிவு சூழ்வதோ?
மழை பொழிவதால் மலைகள் சாய்வதோ
சரியு மண்ணிடை மனைகள் ஆழ்வதோ
மனிதர் வீழ்வதோ மாண்டு போவதோ?
உடைமை யாவையும் தேய்ந்து போனதால்
உழைத்து வாழ்வதிற் பெருமை கொண்ட பேர்
அகதி வாழ்வெனுஞ் சிறையில் மாய்வதோ?
மலைகள் சாய்வதன் உண்மை தேடுவோம்
உழைப்பவர் பலர் உழைப்பிலே உடல்
கொழுப்பவர் சிலர் கொடுமையாற் புவி
இயல்பு மாறியே அழிவு காண்பதோ?
மனிதர் சூழலின் பகைவர் யாரெனும்
உண்மை ஆய்ந்தினி உலகை மாற்றிடும்
பணியினில் இனி ஒன்று சேருவோம்
சரியும் நெஞ்சுகள் உறுதி பூணுக
சரியும் மலைகளும் நிமிர்வு காணுக

சி.சிவசேகரம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

THAYAKAM

Art, Literature and Social science Magazine

இதழ் 108 ஜனவரி-மார்ச், 2023



பிரதம ஆசிரியர் :
க. தணிகாசலம்

நிர்வாக ஆசிரியர் :
ச. சத்தியதேவன்

ஆசிரியர் குழு :
சி. சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
சோ. தேவராஜா
சிவ. இராஜேந்திரன்
அழ. பகீரதன்
தெ. ஞா. மீநிலங்கோ
வே. தினகரன்
ஆதித்தன்

வடிவமைப்பு :
எஸ். ரி. அனுஜன்
சிவ. பரதன்

ஓவியங்கள் :
இணையத்திலிருந்து



அச்சுப் பதிவு :
ஜே. எஸ். பிறின்ரேஸ்,
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு



தொடர்பு :
ஆசிரியர்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தொலைபேசி : +94 76 528 3003
மின்னஞ்சல் : thajaham@gmail.com
வலைப்பூ : thajaham.blogspot.com



வெளியீடு :

தேசிய கலை இலக்கியப் பேரவை
62, கே.கே. எஸ் வீதி
கொக்குவில் சந்தி
கொக்குவில்
இலங்கை


மலையகம் - 200

## உள்ளடக்கம்

### கவிதைகள்


| | |
|---|---|
| சந்திரலேகா கிங்ஸ்லி | 04 |
| ஜெப்ரி தங்கராஜ் | 08 |
| அலெக்ஸ் பரந்தாமன் | 14 |
| அஸ்க்வெளியூர் ரட்னஜோதி | 15 |
| மலையூரான் | 21 |
| ராசாத்தோட்டம் ராமஜெயம் | 38 |
| அலெக்ஸ்பரந்தாமன் | 47 |
| சி.சசிகாந்த் | 48 |
| கி.தினால் பீட்டர் | 48 |
| விஜயகுமார் சுதர்சன் | 60 |
| மா.ஜீவன் | 72 |


### சிறுகதைகள்


| | |
|---|---|
| சை.கிங்ஸ்லி கோமஸ் | 17 |
| செம்மலர் மோகன் | 57 |


### கட்டுரைகள்


| | |
|---|---|
| இரா. சடகோபன் | 05 |
| எம். எம். ஜெயசீலன் | 09 |
| சை.கி. கோமஸ் | 20 |
| சிவ. இராஜேந்திரன் | 23 |
| தலவாக்கலை யுவராஜன் | 33 |
| ஜெ. மு. புவனேஸ் | 39 |
| இரா. ஹிர்சான் | 43 |
| ஜெ. சற்குருநாதன் | 49 |
| மொழிவரதன் | 61 |
| சி.சிங்கராயர் | 63 |
| எம்.முத்துவேல் | 65 |
| சு.முரளிதரன் | 69 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

இதழ் 108
ஜனவரி- மார்ச், 2023


## விரிந்த தேசிய உணர்வும் பரந்த விடுதலைக்கான ஒன்றிணைதலும்

'மலையகம் 200' எனும் மீள் நோக்கில் விரிகின்ற மலையக மக்களின் வாழ்க்கை வரலாறு வெறுமனே உழைப்புச் சுரண்டலும், ஒடுக்குமுறைகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்த இழப்புக்களும், துயரங்களும் தொடரும் சோக வரலாறு மட்டும் அல்ல. மலையகம் இருநூறு ஆண்டுகால வரலாற்றில் பெற்ற அரசியல், பொருளாதார, கல்வி, மத பண்பாட்டு வாழ்வின் முன்நோக்கிய அனுபவமும், அடைவிடமும், அத்துயர்களை தமது அடுத்த சந்ததிகளுக்கும் விட்டுச் செல்லாமல் விடுவித்துக் கொள்ள, கற்றுத் தந்த பாடங்கள் நிறைந்த வரலாறாகவும் உள்ளது. அவற்றின் அனுபவங்களில் இருந்து மலையக மக்கள் மட்டுமல்ல, இலங்கையின் ஏனைய ஒடுக்கப்படும் தேசிய இனங்களும், அனைத்து உழைக்கும் மக்களும் தமது விடுதலைக்கான வழித்தடங்களை செழுமைப்படுத்திக் கொள்ள முடியும்.

பிரித்தானிய கொலனித்துவ ஆட்சி மண்ணில் இருந்து மக்களைப் பிரித்த அவலங்கள் நிறைந்த வாழ்வு மலையக மக்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. கொலனித்துவ ஆட்சியாளர்கள் மூலதனத் திரட்டலுக்கான பெருலாப போட்டி வெறியுடன், தமது ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட நாடுகளின் வளங்களைக் கொள்ளை கொண்டதும், மக்களை அவர்களது மண்ணிலிருந்து பெயர்த்து அவல வாழ்வு வாழவைத்ததும், அவர்களது மண்ணில் வைத்தே அந்த மக்கள் மீது உழைப்புச் சுரண்டலை தொடர்ந்ததும், உலகெங்கும் நடைபெற்ற நிகழ்வுகள்தான். இன்றும் அவை 'ஜனநாயக'ப் போர்வை போர்த்திய நவகொலனித்துவ வடிவில் தாராளமயம், தனியார்மயம், உலகமயமாக தொடர்ந்தும் உலகெங்கும் மக்களைப் பிளவுபடுத்திச் சுரண்டும், முதலாளித்துவ அரசமைப்புக்களாக பரந்து இறுகிக் கிடக்கின்றன. அவற்றுக்கு எதிரான மக்கள் எழுச்சிகளும் அணிதிரள்கைகளும் உலகெங்கும் இடம் பெற்று வருகின்றன.

இன்றும் காலனித்துவத்தின் தொடர்ச்சியான தாக்கங்களிலிருந்து விடுபட முடியாத நிலையில் உள்ள மலையக உழைக்கும் மக்களும், ஜனநாயக முற்போக்கு சக்திகளும் இவற்றை உணர்ந்து அமைப்புகளாக ஒன்றுபட்டு வருவது சிறப்பானதாகும். இலங்கை போன்ற நாடுகளில் மக்களைப் பிரித்து நவகொலனித்துவ சுரண்டலமைப்பைக் கட்டிக் காக்கும் தந்திரோபாய அரசியலின் தொடர்ச்சியாகவே பேரினவாத ஒடுக்குதல்கள் தொடர்கின்றன. இவற்றை உணர்ந்து ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் யாவும் இவ்வொடுக்கும் அமைப்புக்கு எதிராக, அணிதிரள்வதும், ஒன்றுபடுவதும் அவசியமாகும். அத்துடன், தனித்தனி அடையாளங்களுக்குள் மட்டும் குறுகிவிடாமல், குறிப்பாக இலங்கையின் அனைத்தின உழைக்கும் மக்களுடனும் நெருக்கமாக ஐக்கியப்படுவதன் மூலமே அனைத்து ஒடுக்குமுறைகளில் இருந்தும் மக்கள் விடுதலை பெறும் மார்க்கத்தைப் பலப்படுத்த முடியும்.

கொலனித்துவத்தின் நேரடிப் பாதிப்பின் அனுபவங்களில் இருந்து உருவாகும் மலையகத் தேசியம் உழைக்கும் மக்களின் விடுதலைக்கான தேசியமாக வளர்ச்சிபெறும் வாய்ப்பைக் கொண்டிருப்பது அதன் சிறப்பம்சமாகும். அதனுடன் கூடவே ஒன்றுபட்டுப் பணிபுரியும், எண்ணிக்கையில் அதிகமான உழைக்கும் பெண்களையும், ஆண்களையும் மலையகம் உள்ளடக்கி இருப்பது, சாதி, மத, பால் ஒடுக்குதல் உட்பட சமூகவிடுதலை நோக்கி விரிவதற்கான அடித்தளத்தையும் இயல்பாகக் கொண்டிருப்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

கைத்தொழில் புரட்சியுடன் நிலப்பிரபுத்துவ முறையை பின்தள்ளி முன்னெழுந்த முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சியும், மூலதனத் திரட்சிக்கான ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளுக்கிடையேயான போட்டியும், பெருலாப வெறியும் உலகெங்கும் நேரடியான கொலனித்துவ ஆட்சிமுறைக்கு வித்திட்டன. அது பின்தங்கிய நாடுகளின் இயல்பான முரண்வளர்ச்சியின் நிறைவுப் போக்குகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி அடிமை நிலைகளுக்குள்ளும், பஞ்சம் பட்டினி நிலைகளுக்குள்ளும் அவைகளைத் தள்ளின. தமது ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கும் மக்களை இடம் பெயர வைத்தன, தமது மூலதனப் பெருக்கத்துக்கான ஆலைத் தொழில்களிலும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபடுத்தின. ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து மக்கள் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டு கப்பல்களில் ஏற்றி மேற்கத்தைய 'ஜனநாயக' நாடுகளில் பகிரங்க ஏலத்தில் விலைகூறி விற்கப்பட்டனர். உலகெங்கும் அவர்களை எதிர்த்து நின்ற பாரம்பரிய வாழ்விடங்களில் வாழ்ந்த 'மண்ணின் மைந்தர்கள்' யாவரும் அவர்களால் கொன்றழிக்கப்பட்டனர்.

இத்தகைய கொடுமை நிறைந்த வரலாற்றின் தொடர்கதைகள் இன்றும் முடியவில்லை, புதியவடிவில் நவகொலனித்துவமாக, ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் நவதாராளவாத முதலாளித்துவ சுரண்டற் பொருளாதார அரச அமைப்புகளாக நாடுகள்தோறும் உலகமயமாகி விரிவடைந்துள்ளன. இப்புவியில் மனிதவாழ்வையே படிப்படியாக அழித்துச் செல்லும் மூலதன இலாப வேட்டையுடன் கூடிய, போட்டிச் சந்தைப் பொருளாதார அமைப்பே எமது நாட்டிலும் இன்றும் நிலவுகிறது. இவ்வமைப்பு தொடர்ந்து கட்டிக் காத்து வரும் பல்வேறு ஒடுக்குதல்கள் நிறைந்த வாழ்க்கையின் அவலங்களையே மலையக மக்கள் மட்டுமல்ல, இலங்கையின் அனைத்தின மக்களும் சந்ததி சந்ததிகளாக இன்றும் அநுபவித்து வருகின்றனர். இன்றைய உலகிலும் கூட இப்பொருளாதார ஆதிக்கப் போட்டியின் விளைவாக நடைபெறும் யுத்தங்களால் ஏற்படும் உயிரழிவுகள், துன்பங்கள் மத்தியில் அகதிகளாக இடம் பெயர்ந்து வாழும் நிலை உலகெங்கும் தொடர்கிறது. 'கோப்ரேட்' பெருமுதலாளித்துவ மூலதனங்கள் இலத்திரனியல் ஊடக பலத்துடன் முன்வைக்கும் பிரச்சார உத்திகளும், மத, பண்பாட்டு மேலாதிக்கமும், நுகர்வுப் பண்பாடும் இவ்வமைப்பின் கோரமுகத்தை மக்களுக்கு மறைத்து அழகுபடுத்தி அளித்து வருகின்றன.

'இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகள்' என்ற கட்டுரையில் -- கார்ல்மாக்ஸ் - 1853ல் எழுதிய வரிகள், கொலனித்துவ ஆட்சிகளின் கொடூரங்களை மறைத்து அதன் வருகையை மனிதகுல முன்னேற்றத்திற்கான விடிகாலைப் பொழுதாக முன்வைக்கும் கொலனித்துவ சார்புக் கல்வி அறிவுப்புலப் பார்வையை மறுத்து அதன் கொடூரமான தோற்றத்தை வெளிக்கொணர்வதாக அமைகிறது. கொலனித்துவ ஆட்சியின் வருகையையும், அதனால் மக்கள் இன்றும் எதிர்கொள்ளும் ஒடுக்குதல்கள் நிறைந்த ஆட்சி அமைப்பின் கொடூர இயல்பின் தோற்றத்தையும் மக்கள் மனங்களில் பதிய வைக்கும் சிறந்த கலைப்படிமமாக 'வெட்டி வீழ்த்தப்பட்டவர்களின் மண்டை ஓடுகளில் அமுதம் அருந்த விரும்பும்" வெறியுணர்வுள்ள அரக்கனின் ஓவியமாக கால்மாக்ஸ் உருவகித்துள்ளார். இது 'மலையகம் 200ல்' மக்கள் மனதில் இருத்திக் கொள்ளவேண்டிய அநுபவப் படிமமாகவும், இன்றிருக்கும் பொருளாதார சமூக அமைப்பையும் அதன் பொருளற்ற வளர்ச்சி, முன்னேற்றம் என்ற அர்த்தமற்ற போலிப் பசப்பு வார்த்தைகளை அம்பலப்படுத்தும் படிமமாகவும் அமைகிறது.

"முதலாளித்துவ யுகத்தின் விளை பலன்களான உலகச் சந்தை, மற்றும் நவீன உற்பத்தி சக்திகள், ஒரு மகத்தான சமூகப் புரட்சியால் வென்றெடுக்கப்பட்டு, மக்களில் மிக முன்னேறிய பகுதியினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படும் பொழுதுதான், வெட்டி வீழ்த்தப்பட்டவர்களின் மண்டை ஓடுகளில் அல்லாமல் வேறெதிலும், அமுதம் அருந்த மறுக்கின்ற கோர அரக்கச் சிற்பத்தை ஒத்ததாக மனிதகுல முன்னேற்றம் காட்சி அழிக்காது" என்ற பொருள்பொதிந்த வரிகளின் அர்த்தங்கள் இன்றய உலக நிலைக்கும் மிகப் பொருத்தமானவை. எமது மண்ணில் நடந்த போரழிவுகளிலும், ஓய்வின்றித் தொடரும் உலக யுத்தங்களிலும், இன்றைய 'உக்ரைன்' யுத்தத்தின் காரணிகளிலும் 'மண்டை ஓடுகளில் அமுதம் பருகும்' அரக்க உணர்வைக் கண்டறிகிறோம். இலங்கை மண்ணில் மக்கள் அனுபவபூர்வமாக நவகொலனித்துவ பொருளாதார வடிவில் தொடரும் இக்கொடூர அமைப்பின் தாக்கங்களை இன்றும் உணர்ந்து வருகின்றனர்.

200 ஆண்டுகால கொலனித்துவத்தின் பாதிப்புக்களையும், இன்றைய நவகொலனித்துவ அமைப்பில் தொடரும் ஒடுக்குமுறைகளின் துயர்களையும் ஒருசேர உணரும் நிலையில் உள்ள மலையக மக்களால் இவ்வமைப்பின் கோரமுகத்தை இலகுவாகக் கண்டறிய முடியும். அத்தகைய அனுபவ அறிவியல் விழிப்புணர்வுடன், கூலி உயர்வுகளுக்காக மட்டும் ஒன்றுபடும் நிலையை மாற்றி, உழைக்கும் மக்கள் தலைமையிலான புதிய சமூக பொருளாதார அமைப்பைத் தோற்றுவிக்க ஒன்றுபட வேண்டும். எதிர்கால சந்ததிகளுக்கான அடிமைத் தளைகளற்ற புதிய வாழ்வை ஏற்படுத்த, விரிந்த தேசிய உணர்வுடன் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்செல்வோம்.

□


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இப்படியா(க்)கப்பட்ட என் இரவுகள்

சந்திரலேகா கிங்ஸ்லி

*இப்படியாக்கப்பட்ட என் இரவுகளுக்காய்
நான் எப்பொழுதும் பயப்பட்டதாயில்லை
அந்தப் பெரும் கொடும் இரவுகளில் இருள் சூழ்ந்து இருப்பதாய் தான் சொன்னார்கள்
ஆனாலும்
அந்த இருண்ட கடும் நிறத்துக்காய் நான் ஒருபோதும் பயப்பட்ட தாகவேயில்லை*

*நான் இருட்டில் பயப்படுவேன் என்பதற்காக
தாயத்துகளையும் மந்திர கயிறுகளையும் என் கழுத்தை சுற்றியும் கைகளிலும்
கலர் கலராய் கட்டியிருக்கின்றார்கள்
எந்த இருட்டடிப்புக்கும்
நான் பயப்பட்டதாய் அடையாளமில்லை*

*சுதந்திரமான உலக வெளிகளை
நான் தரிசிக்கும் பொழுதுகளி லெல்லாம்
என் நெஞ்சு படபடப்பதாய்
என் சகபாடிகள் கற்பனை செய்தார்கள்
இரவையும் இருட்டடிப்பையும் கூட நான் உயிர்ப்புடன் தரிசிக்கின்றேன் என்பதனை
எந்த பாஷையில் கூறுவதாயினும் அவர்கள்
ஏற்றுக் கொள்ள தயங்குகின்றனர்*



*இந்த கால இடைவெளியில்
வாழ்வின் நிச்சயங்களையெல்லாம் தின்று தீர்த்து விட்டதான உணர்வெனக்கு*

*என்
சந்ததியினரின் கல்வி /கருத்து/ உணர்வு
சூனியமாய் போய்விடுமோ என்ற பயம்
மிக தூரத்திலே நின்று
இவ்வுலகை பார்க்க உருமாற்றப் படுவார்களோ?
உணர்வுகளை செல்லரிப்பது போன்ற நமைச்சல்
சுதந்திர காற்றை சுவாசித்தல்
இனி
சாத்தியமாகுமோ*

*பூமிக்கு மிக ஆழத்தில்
பெரும் பாறாங்கற்களுக்கு அடியில் நித்தியமாய் புதைக்கப்பட்ட என் ருத்ர பயத்தையெல்லாம்
எளிய ஓநாய் வந்து தோண்டிக் கொண்டிருப்பது
எரிச்சலை உண்டாக்குகிறது*

*இப்போதெல்லாம் எனக்கு இருக்கும் பயமெல்லாம்
இருட்டும் இருட்டடிப்புக்குமல்ல
சூனியமாய் போய்விட்ட
எம் குழந்தைகளின் உலகம் எதிர்காலம்
கடனால் சூழப்பட்ட
என் தேசத்தின் கதையும் கவிதையும் பூமியின் மொத்த அழகையும் பூக்களில் ஒளித்திருக்கும்
என் தாய் மண்ணே
நீ எப்போது மீள்வாய் நான் பயமில்லாமல் கண்மூடிக்கொள்ள*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200 வருட வரலாற்றுப் பூர்த்தி....

# இரண்டு நூற்றாண்டுகளாக மலையக மக்கள் இந்த நாட்டுக்கு செய்த பாரிய பங்களிப்பு


## சட்டத்தரணி இரா. சடகோபன்

தலைவர்

மலையக மக்கள் ஆய்வு அபிவிருத்தி மன்றம்


மலையகத் தமிழ் மக்களின் வரலாறு மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்க்கப்பட்டு அவர்கள் இந்த நாட்டில் சமூகப் பொருளாதார அரசியல் மற்றும் கலாசார ரீதியிலும் ஏனைய பல்வேறு வழிகளிலும் எந்தளவுக்கு ஆழக் கால் பதித்துள்ளனர் என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து அதனை இந்த நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் வெளிச்சம் போட்டு காட்டி அவர்களுக்கு வழங்க வேண்டிய அரசியல் உரிமைகளையும் கோரிக்கைகளையும் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த வேண்டிய அவசியமும் தேவையும் இன்று முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த மக்கள் இந்த நாட்டில் குடியேற மூல காரணமாக அமைந்தது. இலங்கையில் முதல் முறையாக 1820 களை ஒட்டிய தசாப்தத்தின் முற்பகுதியில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கோப்பிப்பெருந்தோட்ட பயிர்ச் செய்கையாகும். மலைநாட்டின் கம்பளைக்கருகாமையில் காணப்பட்ட சிங்ஹபிட்டி என்ற இடத்தில் வெறுமனே 150 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஒரு தசாப்த காலத்திலேயே இலட்சம் ஏக்கர்களாகப் பெருகி அதற்கப்பாலும் வளர்ச்சியடைந்து, பின்னர் இந்நாட்டின் பொருளாதாரத்தின் ஆணிவேராக மாற்றமடைந்தது.

இத்தகைய பாரிய பொருளாதார ரீதியிலான விவசாயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட ஆயிரக்கணக்கில் தொழிலாளர் படை தேவைப்பட்டபோது, அதனை இலங்கைக்குள்ளேயே திரட்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தால் முடியாமல்போனது. அதற்கு முக்கிய காரணம் சிங்கள மக்கள் தம்மை அடிமைப்படுத்தி ஆட்சி செய்து வந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கூலி வாங்கிக்கொண்டு வேலை செய்யத் தாம் தயாரில்லை என்ற தன்மானப் பிரச்சினையாகும் என்று சில ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

அதன் காரணமாகக் தமக்குத் தேவையான கூலித்தொழிலாளர்களை சீனாவில் இருந்தோ தமிழ் நாட்டில் இருந்தோ அழைத்து வரத் தீர்மானித்தனர். சீனத் தொழிலாளர்களை அழைத்து வருவது செலவு கூடியது என்பதாலேயே அருகிலிருந்த தமிழ்நாட்டிலிருந்து இந்தியத் தொழிலாளரை அழைத்து வந்தனர்.

இவர்கள் இலங்கைக்கு மாத்திரமல்லாமல் மலேசியா, பீஜித்தீவுகள், மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, மொறிசியஸ், டிரினிடாட் முதலான நாடுகளுக்கும் சென்றார்கள். அவ்விதம் அவர்கள் இலங்கைக்கு வந்த வழியிலும் வந்த பின்னரும் கோப்பித் தோட்டங்களில் அவர்கள் அனுபவித்த இன்னல்கள், பட்ட துன்பங்கள் எண்ணில் அடங்காதவை. இந்தநாட்டுக்கு இம்மக்களின் வருகையால் பின்வரும் நன்மைகள் கிடைத்தன என்பதனை இப்போதும் பலர் ஏற்றுக்கொள்வதில்லை.

1) 1977 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான ஜே. ஆர். ஜயவர்தனவால் திறந்த பொருளாதாரம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் வரை, முன்னர் கோப்பியின் மூலமும், பின்னர் தேயிலையின் மூலமும் இந்நாட்டின் பிரதான ஏற்றுமதி வருமானத்தை உழைத்துத் தருபவர்களாக இந்தியக் கூலித் தொழிலாளர்கள் இருந்தனர்.

2) இந்நாட்டுக்கு நெடுஞ்சாலைப் போக்குவரத்து மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படக் காரணமாக இருந்தவர்களும் இவர்களே. இவர்கள் நேரடியாகவே அவற்றை அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

3) இந்நாட்டின் பொதுவேலைத் திணைக்களத்தின் (Public Works Department -- P W D ) ஆணிவேராக இவர்களே இருந்தனர்.

4) இலங்கையில் சிறு முதலாளித்துவம் ஏற்படக் காரணமாக அமைந்து தேசிய முதலாளித்துவத்தின் எழுச்சிக்கு வித்திட்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) அதன் காரணமாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியாவுக்கு எதிரான தேசிய எதிர்ப்பு இயக்கத்துக்குக் காரணமாக அமைந்தவர்கள்.

6) இலங்கையில் சிறு முதலாளித்துவம் எழுச்சி பெற்றமை கானணமாகவே அவர்களின் அடுத்த சந்ததியினர் கல்வி கற்ற வழித் தோன்றல்களாக உருவாகி உள்நாட்டு அரசியல் தலைவர்கள் உருவாகக் காரணமாகினர்.

7) 1890 களையடுத்துக் கோப்பிப் பயிர்ச் செய்கை நோயினால் அழிந்து போனமையின் பின்னர், தேயிலை ஏற்றுமதிப் பொருளாதாரம் ஏற்பட்டது. இன்று வரை 'சிலோன்' (Ceylon ) என்று அழைக்கப்பட்ட இலங்கையை உலகம் அறிந்து வைத்திருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் இந்திய வம்சாவழித் தமிழர்களின் உழைப்பால் அபிவிருத்தியடைந்த தேயிலைப்பயிர்ச் செய்கைதான்.

8) கோப்பிப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையுடன் தொடர்புபட்டு பல உப கைத்தொழில்கள் வர்த்தக நடவடிக்கைகள், சேவை வர்த்தகங்கள் தோன்றின. காடுகளை அழிக்கும் ஒப்பந்தம், தொழிலாளர்களை வழங்கும் ஒப்பந்தம், பெருந்தோட்டத்துறைக்கு உணவுகளை வழங்கும் ஒப்பந்தம், சில்லறை மொத்த விற்பனை வர்த்தகம், கட்டிட நிர்மாண ஒப்பந்தம், கட்டிட நிர்மாணங்களுக்கான மூலப் பொருள் விநியோகம், மரங்கள் தளபாட விநியோகம், சாராயம், கள் விற்பனை ஒப்பந்தம் போன்றவற்றின் ஊடாக, மத்தியதர வர்க்க பிரபுக்கள் என அழைத்துக் கொண்ட மேட்டுக் குடியினர் உருவாயினர். மரப் பீப்பாய்த் தொழில் மற்றும் மரத்தளபாடத்தொழில், புகையிரதப் பாதைகளுக்கான சிலிப்பர் கட்டைகள் உற்பத்தித் தொழில், தந்திக் கம்பங்கள் உற்பத்தித் தொழில், தந்திக் கம்பங்கள் தயாரிப்பு ஆகியன அதிகரிப்புக் காரணமாக மர வியாபாரம், மரப்பொருள் உற்பத்தி ஆலைகள் முதலாளிகள் தோன்றினர்.

இப்படி கோப்பிபெருந்தோட்டச் செய்கை பின்னர் தேயிலை பெருந்தோட்ட' பொருளாதாரம் என்பவற்றை மூல காரணமாகக்கொண்டு உருவாகிய இலங்கையின் தேசிய முதலாளிகள் பின்னர் பாரிய அளவில் தேயிலை, இறப்பர், தென்னை பெருந்தோட்டங்களின் சொந்தக்காரர்களாகி தனவந்தர் ஆனார்கள். அவர்களின் பின் வந்த பரம்பரையினர் இன்று இலங்கையின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் மேல் மத்திய தரத்தினராகவும் அரசியல் தலைவர்களாகவும் உருவாகி யுள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகும். இத்தகைய அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் இலங்கை நாட்டுக்குப் பெற்றுத் தந்தவர்கள் முதலில் கோப்பித் தொழிலாளர்களும் அதன் பின்னர் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களும் தான் என்பதனை இலங்கையில் பலர் வசதியாக மறந்து போய் விட்டனர்.

அந்த வகையில் கோப்பிக்காலத்தின் வரலாற்று உண்மைகளையும் வரலாறாகிப் போன கோப்பிக்கால இந்திய தொழிலாளரின் வாழ்வியலையும் அவர்கள் இந்நாட்டை வளங்கொழிக்கச் செய்த தியாகங்களையும் சிந்திய வியர்வை, இரத்தம், புதையுண்ட கதை என்பவற்றையும் மீண்டும் ஒரு முறை கிளறிப்பார்த்து இச் சமூகம் இனியாவது விழிப்படைந்து நிமிர்ந்து நிற்க வேண்டும்.

மிகச் சரியாகக் கூறுவதாயின் ஹென்றிபர்ட் (Hendry Bird) (பிரிட்டிஷ் இராணியின் படைகளின் உயர் கட்டளை அதிகாரி) அவர்களாலும், அப்போதைய ஆள்பதியான எட்வர்ட் பாண்ஸ் (Edward Barns) அவர் களாலும் கம்பளைக்கருகில் சிங்ஹபிட்டி என்ற இடத்தில் முதலாவது கோப்பித் தோட்டம் 1823ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 1893 ஆம் ஆண்டு வரையான கோப்பிப் பெருந்தோட்ட வரலாறு அதன் பின்னரான தேயிலை, றப்பர், தெங்கு ஆகிய பெருந்தோட்டங்களின் வரலாறு என்றவுடன் இது ஒரு விவசாயப் பயிர்ச்செய்கையின் வரலாறு என்று கருதிவிடக்கூடாது. கோப்பித் தோட்டத்தில் கூலி வேலை செய்வதற்கென தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டு கண்டிச்சீமையெனும் கண் காணாத தேசத்தில் அவர்கள் அனுபவித்த அவலமும் வாங்கிய அடியும் உதையும் கண்ணீரும் கம்பலையும் கொண்ட துன்பியல் வரலாறு மீண்டும் ஒரு முறை மீள வாசிக்கப்பட வேண்டும் என்பது இந்தச் சந்தர்ப்பத்தில் மிகப்பொருத்தமானதாகும்.

உலகின் மானிடவியல் வரலாற்றில் பல்வேறு அழிந்தொழிந்து போன நாகரிகங்களின் வரலாறு பற்றி நாம் தெரிந்து வைத்துள்ளோம். அமெரிக்காவின் இன்கா, மாயா மக்கள் நாகரிகம், பபிலோன், யூப்ரடீஸ் டைகரிஸ், மொஹஞ்சதாரோ, ஹரப்பா, சிந்துவெளி நாகரிகங்கள் எனப்பல நாகரிகங்கள் வரலாற்றில் பேசப்படுகின்றன.

இவையெல்லாமே இலட்சக்கணக்கான மக்கள் மடிந்தொழிந்துபோன மண் மேடாகத்தான் பின்னர் காணப்பட்டன. அண்மையில் கூட இலங்கையின் வடக்கில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற யுத்தத்தால் இலட்சக்கணக்கானோர் மாண்டு மண்ணோடு மண்ணாயினர். இவர்கள் மாண்ட இடமும் இன்று முள்ளிவாய்க்கால் மண் மேடாகி வரலாறாகிப்போனது.

இப்படித்தான் இம்மக்களின் கோப்பிக் கால வரலாறு என்று சொல்லப்படுகின்ற 1823 முதல் 1893 வரையுள்ள இந்த ஏழு தசாப்த வரலாற்றை ஆராய்ந்தவர்கள் சுமார் இரண்டு இலட்சம் பேர் இயற்கை மரணங்களுக்கு அப்பால் கொலரா, பசி, பட்டினி, கொடிய மிருகங்கள் மற்றும் பாம்புக்கடி, கடுமையான குளிர்போன்றவற்றுக்குப் பலியாகி தாம் நட்டகோப்பி மரங்களுக்கே உரமாகி மண்மேடாகிப் போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இந்த நாட்டுக்கு செய்த தியாகம் எண்ணற்றன. இந்த நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரம், போக்குவரத்து மார்க்கங்களான பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள், பாலங்கள் முதலானவற்றை அமைத்தவர் இவர்கள் தான் என்றால் யார் நம்புகிறார்கள் . அதனால்தான் 'கண்டிச் சீமையிலே ' என்ற எனது வரலாற்றுத் தொடர் வீரகேசரியின் வெளியீடான 'சூரியகாந்தி' பத்திரிகையில் தொடராக வெளிவந்து முடிவுற்ற தறுவாயில் அதன் முடிவுரையாகப் பின்வரும் கவிதை வரிகளை எழுதினேன்.

'தாஜ் மஹாலைக் கட்டியது
யாரென்று கேட்டேன்
ஷாஜகான் என்றார்கள்
பிரமிட்டுக்களைக் கட்டியது
யாரென்று கேட்டேன்
பாரோ மன்னன் என்றார்கள்
தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியது
யாரென்று கேட்டேன்
ராஜராஜ சோழன் என்றார்கள்
மலையகத்தின் தேயிலைத் தோட்டங்களையும்
பெருந்தெருக்களையும் தண்டவாளங்களையும்
பாலங்களையும் கட்டி உருவாக்கியது
யாரென்று கேட்டேன்
பிரிட்டிஷ்காரன் என்றார்கள்.

பொதுவாக மனித வரலாறுகள் மன்னர்களும் சக்கரவர்த்திகளும் பேரரசுகளும் ஏகாதிபத்தியங்களும் பெற்ற வெற்றி வரலாறுகளாக மாத்திரமே உள்ளன. இந்த மாமன்னர்களின் வெற்றிகளுக்குப் பின்னால் தியாகிகளாகி மரணித்துப் போய் விட்ட மக்கள் வரலாறுகளும் அவ்விதம் அம் மன்னர்களால் தோற்கடிக்கப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாகி மாண்டொழிந்து போனவர் களின் வரலாறுகளும் எங்குமே உரிய முறையில் எழுதப்படவில்லை. அதனால் மேற்படி தொடரின் முடிவுரையின் இறுதி அங்கமாக மேற்படி கவிதையை எழுதினேன். தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜகானின் வரலாறு இன்றுவரை பேசப்படுகின்றது. பிரமிட்டுக்களைக் கட்டிய பாரோ மன்னர்களின் வரலாறுகள் இன்றுவரை பேசப்படுகின்றன.

தஞ்சை பெரிய கோயிலை கட்டிய ராஜ ராஜசோழனை இன்றும் நாம் போற்றிப் புகழ்கின்றோம். இலங்கையில் கோப்பிக் கால வரலாற்றின் முக்கிய அம்சங்களில் ஒன்றான இலங்கையில் ரயில் பாதைகள், பெருந் தெருக்களுடன் தொடர்புடைய நூற்றுக்கணக்கான பாலங்கள்,

நீண்ட, பெரிய, கரிய சுரங்கப் பாதைகள் ஆகியவற்றை நமக்கு அமைத்துத் தந்தவன் பிரிட்டிஷ்காரன் என்று

***இப்படித்தான் இம்மக்களின் கோப்பிக் கால வரலாறு என்று சொல்லப்படுகின்ற 1823 முதல் 1893 வரையுள்ள இந்த ஏழு தசாப்த வரலாற்றை ஆராய்ந்தவர்கள் சுமார் இரண்டு இலட்சம் பேர் இயற்கை மரணங்களுக்கு அப்பால் கொலரா, பசி, பட்டினி, கொடிய மிருகங்கள் மற்றும் பாம்புக்கடி, கடுமையான குளிர்போன்றவற்றுக்குப் பலியாகி தாம் நட்டகோப்பி மரங்களுக்கே உரமாகி மண்மேடாகிப் போனார்கள்.***

நன்றியுடனும் பெருமையுடனும் கூறுகிறோம். இவற்றை யெல்லாம் அமைக்க பாடுபட்ட லட்சக் கணக்கான தொழிலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், சித்திரம் மற்றும் சிற்பக்கலைஞர்கள்,பொறியியலாளர்கள் இப்படி இவற்றின் உருவாக்கத்துக்கு அர்ப்பணிப்புச் செய்த மக்கள் பற்றி எங்கும் வரலாறுகள் எழுதப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

இந்த நிகழ்வுகளின் பின்னணியில் 1823 ஆம் ஆண்டை மலையகத் தமிழ் மக்கள் இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்த ஆண்டாக இனங்கண்டு அவர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து 200 ஆண்டைப் பூர்த்தி செய்த 2023 ஆம் ஆண்டைக் கணிப்பீடு செய்யலாம். அதனடிப்படையில் 2023 ஆம் ஆண்டை நமது 200 வருட கால வரலாற்றுப் பூர்த்தி ஆண்டாக நினைவுகூர்ந்து பிரகடனப்படுத்தி அந்த ஆண்டு முழுவதும் நமது உரிமைகளையும் தேவைகளையும் அவசியங்களையும் வலியுறுத்தி கோரிக்கைகளை முன்வைத்து கொண்டாட்ட நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது மலையக தமிழ் மக்களின் சார்பில் எனது வேண்டுகோளாகும். இதனைப் பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் வேறு சிவில் அமைப்புக்களும் இளைஞர் அமைப்புகளும் மறுமலர்ச்சி மன்றங்களும் ஆய்வு நிறுவனங்களும் கூட்டாக முன்னெடுக்கவேண்டும். அத்தகைய எல்லா நிகழ்வுகளும் சிங்கள மக்களையும் சிங்கள அமைப்புக்களையும் உள்ளடக்கிக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் இந்த மக்கள் இந்நாட்டுக்குச் செய்த அர்ப்பணிப்புக்கள் தியாகங்கள் அபிவிருத்திப் பணிகள் முதலியன அந் நிகழ்வுகளில் பிரதிபலிக்கப்பட வேண்டும். இது தொடர்பான செய்திகள் நாடெங்கும், உலகெங்கும் பரப்பப்பட வேண்டும். இந்தப் பாரிய கைங்கரியத்தில் மனமுவந்து ஒன்றுபட்டு இணைந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகிறது.

❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெறும் ஐ நான்கு தசாப்தங்கள்

ஜெப்ரி தங்கராஜ்

போர்க்களத்து வீரசத்தில்
கொல்லன்கோட்டு வியர்வாடை..

நீண்டுயர்ந்த ஆலய கோபுரத்து
நிமிர் சிலைகளை
சிற்பியின் உளி 'தீட்டு'ம் ரத்தத் துளி

மேடை நிறை
நனி சொட்டும் பேச்சாளர்கள்,
கவிதா விலாசத்தார்,
கதைசொல்லிகள்,
களத்திடை விவாதிகளின்
சொல்லில்லாக் கூர்மை, உறுதி
தச்சன் தைக்கும் ஆணி

வயலின் வார்ச் சுருதியில்,
மிருதங்க ஜதியில், மறைந்ததே
மாட்டுத்தோலின் சிறு துரும்பு..

அனைத்திலும் ஏதோவொரு
உழைப்போனின் வல்லாதிக்கம் காண்...

தேம்ஸ் நதியண்டிய
வெண்ணிற தோற்காரரின்
குளிர்காலத்தை கதப்பாக்கும்
கசந்த கோப்பித்துகள்கள்...

ஈரிலை ஓரரும்புப் பானங்களின்
கடைசிச் சொட்டு சாயங்கள்..

டொலர்க்காரர்கள் நிறை புகைவண்டித் தடங்கள்..
கற்குடைச்சற் சுரங்கத் துளைகள்...
ஒன்பதரக்கு பாலங்கள்...
பச்சைக்கம்பளத்துத் தோட்டங்கள்..
உள்நாட்டரச்சர் 'பங்களா'க்கள்..

இத்யாதி இத்யாதிகள்
அத்தனையிலும் இரு
நூற்றாண்டு உழைப்பின்
பெரு வலி..

அடித்துச் சொல்வேன்..
இங்கெவரும் ஏழையில்லை...

வாய்கள் கட்டப்பட்டு
கண்கள் குத்தப்பட்டு
தோள்கள் தட்டப்பட்டு

மாலைகள் அணிவித்து
வாயார புகழ்வித்து
கோபங்கள் தணிவித்து
பயம்காட்டி பணிவித்து

சில வேளை உழைப்பு
மட்டும்
திருடப்பட்டிருக்கலாம்...

வெறும் ஐ நான்கு
தசாப்தங்களாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தேசியம் :

## மலையக மக்கள் இயக்கமும் மலையக வெகுஜன இயக்கமும்

எம். எம். ஜெயசீலன்

பிரித்தானியக் காலனியக் காலத்தில் அரையடிமை நிலையில் இலங்கையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட இந்தியவம்சாவழி மக்கள், பல்வேறுவிதமான பாரபட்சங்கள், ஒடுக்குமுறைகள், சுரண்டல்கள் என்பவற்றுக்கூடே தம்மையொரு தனித்த தேசிய இனமாக உணரும், நிலைநிறுத்தும் அசைவியக்கத்தை, வரலாற்று நகர்வில் அடைந்துள்ளனர். 1820களில் இலங்கையில் குடியேறிய அம்மக்கள், எவ்வித அரசியல் உரிமைகளுமற்று வெறும் கூலிகளாகத் தோட்ட எல்லைக்குள்ளேயே கட்டுண்டு வாழ்ந்தனர். இலங்கையில் குடியேறி ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு கடந்த பின்பு 1920களிலேயே அவர்களுக்கான அரசியல் உரிமை வழங்கப்பட்டது. 1921ஆம் ஆண்டு இலங்கைவாழ் இந்தியருக்கெனச் சட்ட நிருபணச் சபைக்கு ஒரு நியமன உறுப்பினருக்கும் 1924ஆம் ஆண்டுச் சட்டநிருபணச் சபைக்குத் தேர்தல் மூலம் இரு உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அக்காலத்தில் படித்த, சொத்துள்ளவர்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டதால் பெருந்தோட்டத் தொழிலாளர்களை அவ்வுரிமை முழுமையாகச் சென்றடையவில்லை. அதன்பின்னர் 1931ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையின் மூலமே இலங்கை வாழ் இந்தியரின் அரசியல் பங்குபற்றல் அதிகரிக்கத்தொடங்கியது.

அரசியல் உரிமை, தொழிற்சங்கச் செயற்பாடுகளின் விரிவாக்கம், பல தலைமுறையினராக இலங்கையில் வாழ்ந்துவரும் இந்தியர், மீண்டும் இந்தியாவுக்குத் திரும்புவதற்கான அக, புறச் சூழல் நிலவாமை, இலங்கைவாழ் இந்தியரை நாட்டிலிருந்து வெளியேற்றச் சிங்கள மேலாதிக்க சக்திகள் முன்னெடுத்த செயற்பாடுகள் முதலானவை இலங்கைவாழ் இந்தியர் இலங்கையில் தம் இருப்பை உறுதியாக நிலைநிறுத்துவதற்கான தேவையை வலுப்படுத்தின. நாடு சுதந்திரமடைந்ததும் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தினால் (1948) பெருந்தொகையான இந்தியவம்சாவழியினர் நாடற்றவர்களாக்கப்பட்டதால் அவர்களது இன அடையாளம் பற்றிய உணர்வு அதிக அழுத்தம் பெற்றதுடன் அதனை நிலைநிறுத்தும் செயற்பாடுகளும் இடம்பெற்றன. அதன் ஒரு வெளிப்பாடாகவே, இந்திய வம்சாவழித் தமிழர் என்பதற்கு மாற்றாக உருவாக்கப்பட்ட மலையகத் தமிழர் என்ற அடையாளம் அமைகிறது. அதன் தொடர்வளர்ச்சியாக மலையகத் தேசியம் என்ற வாதம் மேற்கிளம்பியுள்ளது.

மலையக மக்கள் தனித்துவமான ஒரு தேசிய இனம் என்ற அடையாள உருவாக்கம் நீண்ட வரலாற்றுப் போராட்டத்தின் பின்புலத்திலேயே எழுச்சி பெற்றுள்ளது. அந்த அடையாள எழுச்சியைத் திரண்ட கருத்தியலாக வடிவமைத்து, மலையகத் தேசியம் என்ற எண்ணக்கருவினை மலையகத்தில் இயங்கிய அறிவுசார் இயக்கம் சாத்தியமாக்கியுள்ளது. தனிநபர்களும் அமைப்பாக ஒன்றிணைந்தவர்களும் மலையகத் தமிழர் தனித்த தேசிய இனமென்பதை வலியுறுத்தும் அறிவுசார் இயக்கத்தில் வெவ்வேறு மட்டங்களில் பங்காற்றியுள்ளனர். அதன்படி, "கோ.நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதியினரின் செயற்பாடுகள், ஏ. இளஞ்செழியனதும் அவரது திராவிடர் கழகத்தினதும் செயற்பாடுகள், மலையக இளைஞர் முன்னணி, மலையக இளைஞர் பேரவை, மலையக மக்கள் இயக்கம், மலையக வெகுசன இயக்கம், மலையக ஐக்கிய இளைஞர் முன்னணி, இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம் முதலிய அமைப்புக்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி முதலானவை மலையக தேசியம் என்ற கருத்தாக்க வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளதாகக் கூறப்படுகின்றது" (மதிவானம், 2014, சமூக இலக்கியத் தளங்களில் படைப்புகளும் செயற்பாட்டாளர்களும், 57-59).

மலையகத் தேசியம் என்ற கருத்தியல் சார்ந்து இயங்கியதாகக் கூறப்படுகின்ற மேற்கூறிய தனிநபர்களும் அமைப்புக்களாக ஒன்றிணைந்தவர்களும் மலையகத் தேசியம் குறித்து எத்தகைய பார்வையைக் கொண்டிருந்தனர், அப்பார்வையை நியாயப்படுத்த அவர்கள் முன்வைத்த தர்க்கங்கள் - முன்னெடுத்த செயற்பாடுகள் யாவை, அத்தர்க்கங்களும் செயற்பாடுகளும் மலையகத்தின், இலங்கையின் சமூக வரலாற்று யதார்த்தங்களுடன் ஒத்திருந்தனவா? முதலிய பல வினாக்களுக்கு விடை காணும்போதே, மலையக தேசியத்தின் இருப்பிலும் அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபன நிலைப்பட்ட செயற்பாடுகளிலும் யார்யார், எவ்வெப் பங்களிப்பினை வழங்கினர், அப்பங்களிப்பில் முற்போக்கானதும் பிற்போக்கானதுமான நிலைப்பாடுகள் யாவை முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

1960களில் முனைப்பு பெற்ற மலையகம், மலைநாடு என்ற அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் (1960), மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் (1963), மலையக இளைஞர் பேரவை (1968), மலையக இளைஞர் முன்னணி (1969) முதலிய அமைப்புக்களால் மலையகம் என்ற தனித்த அடையாளமும் மலையகம் என்ற உணர்வெழுச்சியும் அதிக அழுத்தம் பெறத் தொடங்கிய தோடு அந்த அடையாளத்தின், உணர்ச்சியின் அடிப் படையில் அணிதிரண்டு இயங்குதலும் பரவலாகியது. இத்தகைய இயக்கநிலைப்பட்ட செயற்பாடுகள், மலையக தேசியம் என்ற கருத்தாக்க வளர்ச்சிக்குத் தேவையான பின்னணியினைக் கட்டியெழுப்பினாலும் அவ்வமைப் பினர் எவரும் அந்தப் பின்னணியின் தொடர்ச்சியாக, மலையக தேசியம் என்ற கருத்தாக்கத்தை வரலாற்று அடிப்படையிலோ தத்துவார்த்த அடிப்படையிலோ வரையறுக்கும் முயற்சியில் இறங்கவில்லை. அவர்களது அடிப்படை நோக்கும் அதுவாக - மலையக தேசியத்தை வரலாற்று அடிப்படையிலும் தத்துவார்த்த அடிப்படை யிலும் கட்டியெழுப்புதல் - அமையவில்லை. அம் முயற்சியை மலையக மக்கள் இயக்கம், மலையக வெகுஜன இயக்கம் ஆகியனவே விரிவான தளத்தில் முன்னெடுத்துள்ளன.

சாந்திகுமார், பி. மரியதாஸ் முதலானவர்களால் 1974ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'மலையக மக்கள் இயக்கம்' மலையக அரசியல் சமூக வரலாற்றிலும் கலை இலக்கிய நகர்விலும் கனதியான தாக்கங்களைச் செலுத்தியுள்ளது. பிற்போக்கு அரசியல் சமூக நடை முறைகளை வன்மையாகக் கண்டித்த இந்த இயக்கம், வரட்டு மார்க்சிய சித்தாந்த நிலைப்பாடுகளிலிருந்தும் திரிபுவாதங்களிலிருந்தும் விடுபட்ட மார்க்சியத் தளத்தில் இயங்கியுள்ளது. இவ்வமைப்பின் பிரதான செயற் பாட்டாளராக விளங்கிய எல். சாந்திகுமார் அவர்கள், மலையகத் தமிழர், மலையகத்தின் சமூக உருவாக்கம், தேசியம், தேசிய சிறுபான்மை இனம் என்பன தொடர் பாகக் காத்திரமான பல கட்டுரைகளை அவ்வியக்கம் நடத்திய தீர்த்தக்கரை இதழில் எழுதியுள்ளார். அக் கட்டுரைகள் காலமும் மனிதர்களும் என்ற தலைப்பில் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

வி. ரி. தர்மலிங்கம், பி. ஏ. காதர், தேவசிகாமணி முதலிய பலரால் உருவாக்கப்பட்ட மலையக வெகுசன இயக்கம், 1977 இல் இடம்பெற்ற கலவரத்தின் பின்னணியில் மலையக மக்களின் உரிமைகளை அவர்கள் வாழும் மண்ணிலேயே நிலைநிறுத்துவதை முன்நிறுத்தி இயங்கியுள்ளது. இவ்வமைப்பின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் பி. ஏ. காதர் மலையகத் தமிழர் தனியான தேசிய இனம் என்பதை வெளிப் படுத்தும் வகையில் 'பெருந்தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம்?' (1981) என்ற நூலினை எழுதியுள்ளார். அவ் வியக்கம் மலையக தேசியம் தொடர்பில் கொண்டிருந்த சிந்தனையின் தொகுப்பாக அந்நூலைக் கொள்ளலாம்.

பெருந்தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம் என்ற நூலானது பின்வரும் மூன்று கருத்தோட்டங்களை வரலாற்று ரீதியாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் நிரூபிக்க முயல்கிறது எனக் காதர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்:

01. மலையகத் தமிழர் இலங்கையின் தேசிய இனத்தவர்.

02. மலையகத் தமிழர் தமிழ்மொழியைப் பேசியபோதும் ஏனைய தமிழ் பேசும் மக்களில் இருந்தும் வேறு பட்ட தனியான ஒரு தேசிய இனம். அவர்களது தனித்துவத்தை அங்கீகரிக்க மறுப்பதுகூட இன ஆதிக்கத்தின் வெளிப்பாடே.

03. மலையகம் அவர்களது தாயகம், மலையகத்தின் சொந்தக்காரர் மலையகத் தமிழரே. (1981: 1,2)

மலையகத் தமிழரின் தேசியத்தை, அவர்கள் தனியானதொரு தேசிய இனம் என்பதை வரையறுப்பதில் மேற்படி மூன்று அம்சங்களும் அடிப்படையானவையாகும். இலங்கையில் மலையகத் தமிழரைத் தனித்த தேசிய இனமாக நிலைநிறுத்துவதில் இரண்டு பிரதான சவால்கள் தடையாக அமைந்திருந்துள்ளன. முதலாவது, அவர் களை இந்திய மக்களாக, இந்திய தேசியத்தின் கூறாகக் கருதும் போக்கு. இரண்டாவது, இலங்கையில் தமிழ் பேசும் மற்றொரு குழுமமான இலங்கைத் தமிழருடன் ஒன்றிணைத்து அவர்களை ஒரே தேசிய இனமாகக் கருதும் போக்கு. இந்த இரு நிலைப்பாடுகளிலிருந்தும் வேறுபட்ட குழுவினராக அவர்கள் விளங்கியுள்ளனர். அதற்கு அக்குழுமத்தின் சமூக உருவாக்கமும் சமூக அசைவியக்கமும் அடிப்படையாக அமைந்தன. மலை யக தேசியம் என்பதை நிறுவுவதற்கு மேற்படி இரு போக்குகளையும் நிராகரித்து, அம்மக்களின் வாழ்வும் வரலாறும் அவர்களைத் தனித்த தேசியமாக உருக் கொள்ள வைத்துள்ளமையைத் தர்க்கபூர்வமாக வெளிப் படுத்தல் அவசியமானதாகும். அதற்கான முன்னோடி முயற்சியை பி. ஏ. காதர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

மலையக தேசியத்தைக் கோட்பாட்டு அடிப்படையில் நிறுவுவதற்கு, தேசிய இனம் குறித்த ஒரு பிரசித்திபெற்ற மேதையின் மிகப்பொருத்தமான வரைவிலக்கணம் என, ஒரு பொது மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு, பொது கலாசாரமாகப் பிரதிபலிக்கும் மனோ பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் வரலாற்று ரீதியில் உருவான நிலையான மக்கள் கூட்டமே தேசிய இனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஸ்டாலினின் தேசிய இனம் குறித்த வரைவிலக்கணத்தைக் காதர் அவர்கள் முன்வைத்துள்ளார்கள். அத்துடன் இந்த நான்கு அம்சங்களில் ஏதாவதொன்று குறைந்தாலும் அது தேசிய இனமாக முடியாது (1981: 12) என்பதையும் பதிவு செய்துள்ளார். ஆனால், இந்நான்கு அம்சங்களும் மலையகத் தமிழ்ச் சமூகத்துடன் ஒத்துப்போகும் தர்க்கத்தை அவர் தெளிவாக விளக்க முனையவில்லை. மலையகத் தமிழர் இந்தியரே இலங்கையின் தேசிய இனமல்ல என்ற வாதத்தையும் மலையகத் தமிழர் தமிழ்மொழியைப் பேசுவதால் தனியான தேசிய இனமல்ல என்ற வாதத்தையும் நிராகரிக்கும் கருத்துக்களால் மலையகத் தமிழர் தனியான தேசிய இனம் என்பதை நிறுவ முற்படும் அவர், மலையகத் தமிழரின் வரலாறும் வாழ்வும் அவர்களை எவ்வாறு தேசிய இனமாக உருக்கொள்ள வைத்தன, அவை தான் மிகப்பொருத்தமானதென முன்வைத்த, ஸ்டாலினின் தேசிய இனம் குறித்த கருத்தாக்கத்துடன் எவ்வாறு பொருந்திப்போகின்றன முதலியவற்றை முன்னிலைப்படுத்தவில்லை.

மலையகத் தமிழரின் சமூக உருவாக்கமும் அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனக் காலனித்துவச் செயற்பாடுகளும் அவர்களைத் தனித்த தேசிய இனமாக உருக்கொள்ள வைத்தன எனக்கூறும் சாந்திகுமார் அவர்கள், தேசிய இனம் குறித்த ஸ்டாலினின் வரையறையைச் சர்வவியாபகமான சிந்தனையாகக் கொள்ளவில்லை. ஸ்டாலினின் தேசிய இனம் குறித்த சிந்தனை ஒரு குறிப்பிட்ட காலத்தின் - சந்தர்ப்பத்தின் - தேவை கருதி முன்வைக்கப்பட்டது; அது மார்க்சியத்தின் சர்வவியாபகமான கருத் தோட்டமல்ல; அதனால் மாறிவந்த புதிய சூழ்நிலைக்கு அமைய அச்சிந்தனையை அப்படியே கையாள்வது அபத்தமான முடிவினையே தரும் என்பது அவரின் நிலைப்பாடாக இருந்துள்ளது. அதனால் அவ்வரையறையை அப்படியே கையாள்வதானது, 'தம்மை தேசியங்களாக ஆக்கிக்கொள்ளத் தகுதி பெற்றிருக்கும் சிறுபான்மை இனங்களை மாத்திரமல்ல ஏற்கனவே தேசங்களாக உள்ள அமைப்புக்களையும்கூட இந்த வரைவிலக்கணத்துக்கு வெளியேயும் அதன் மூலம் மார்க்சிய அங்கீகாரத்துக்கு வெளியேயும் நிறுத்தும் ஒன்றாகிவிடும்' (1980, தேசியங்களும் தேசிய இனங்களும் குறித்த மார்க்சியக் கண்ணோட்டம் : 36) எனக்குறிப்பிட்டு, இந்தப் போதாமையை ஸ்டாலினே பின்நாளில் அறிவித்திருந்தார் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள சாந்திகுமார், லெனின் முன்வைத்த ஏகாதிபத்தியக் கோட்பாட்டைத் துணையாகக் கொண்டு, மலையகத் தமிழரின் தேசியத்தைச் சித்தாந்த அடிப்படையில் தெளிவுபடுத்த முனைந்துள்ளார்.

முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்த போது சுரண்டல் முறையில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஏனைய அம்சங்களையும் கருத்திற்கொண்டு, தேசிய சிறுபான்மை இனங்கள் குறித்த கருத்தை ஏகாதிபத்திய காலகட்டத்திற்கு வளர்த்தெடுத்த லெனின், தேசியங்கள் மற்றும் தேசிய சிறுபான்மை இனங்களின் வரிசையில் காலனித்துவ சிறுபான்மை இனங்களையும் சேர்த்து, 'இப்பிரச்சினை வளரும் முதலாளித்துவ அமைப்பினைச் சார்ந்ததல்ல. மாறாக அரை நிலப்பிரபுத்துவம் அல்லது ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கும் பொருளாதார அமைப்பைச் சார்ந்தவற்றின் பிரச்சினை' (1980, தேசியங்களும் தேசிய இனங்களும் குறித்த மார்க்சியக் கண்ணோட்டம்: 36) என்ற முடிவுக்கு வந்துள்ளதால் மார்க்சியத்தின் தேசிய இனங்கள் குறித்த சிந்தனையை லெனின் முன்வைத்த ஏகாதிபத்தியக் கோட்பாட்டை மையமாகக் கொண்டே வளர்த்தெடுக்க வேண்டும் எனக்கூறும் சாந்திகுமார், லெனின் முன்வைத்த 'அதிமிஞ்சிய சுரண்டல் (Super Exploitation), அதி மிஞ்சிய லாபம் (Super Profit)' என்ற கருத்தாக்கத்தை அடிப்படைச் சட்டகமாகக் கொண்டு தேசிய சிறுபான்மை இனங்கள் தொடர்பான கருத்தாக்கத்தைத் தெளிவு படுத்தியுள்ளார். லெனினுடைய சிந்தனையைப் பின் வருமாறு சாராம்சப்படுத்தித் தந்துள்ளார், சாந்திகுமார்:

"ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பின் மேற்கிளம்புகையுடன் இராச்சியங்களின் தொகுப் பாகச் சர்வதேசிய அமைப்பு இருந்த நிலைமாறி உலக மூலாதாரங்களுக்காகப் போட்டிப் போட்டுக் கொண்டு ஒன்றையொன்று அடித்து வீழ்த்தும் போட்டி அரசுகளாக இந்தச் சாம்ராச்சியங்கள் மாறிவிட்டன. இப்புதிய போட்டிகளின் காரணமாக முதலாளித்துவ அமைப்புக்கள் தத்தம் நாட்டின்

***தேசிய இனமாக நிலைநிறுத்துவதில் இரண்டு பிரதான சவால்கள் தடையாக அமைந்திருந்துள்ளன. முதலாவது, அவர்களை இந்திய மக்களாக, இந்திய தேசியத்தின் கூறாகக் கருதும் போக்கு. இரண்டாவது, இலங்கையில் தமிழ் பேசும் மற்றொரு குழுமமான இலங்கைத் தமிழருடன் ஒன்றிணைத்து அவர்களை ஒரே தேசிய இனமாகக் கருதும் போக்கு. இந்த இரு நிலைப்பாடுகளிலிருந்தும் வேறுபட்ட குழுவினராக அவர்கள் விளங்கியுள்ளனர். அதற்கு அக்குழுமத்தின் சமூக உருவாக்கமும் சமூக அசைவியக்கமும் அடிப்படையாக அமைந்தன.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாள வர்க்கத் தலைமைகளுக்கு லஞ்சம் கொடுத்தும், தொழிலாளர்களுக்குக் கூடுதல் சலுகைகள் அளித்தும் சமாதானப்படுத்த முயன்றன. இதற்காக காலனித்துவ நாடுகள் மேலும் மோசமான பொருளாதாரச் சுரண்டலுக்கு உள்ளாகின்றன. அவற்றின் உள் பொருளாதார அமைப்புக்கள் சிதறடிக்கப்பட்டு ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கும் பொருளாதார அமைப்புக்களாக மாற்றியமைக்கப் பட்டன. காலனித்துவ உழைக்கும் மக்கள் சாதாரண சுரண்டலைவிடக் கூடுதல் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டனர். இதனை அதிமிஞ்சிய சுரண்டல், அதிமிஞ்சிய லாபம் என்ற கருத்தாக்கத்தின் மூலம் லெனின் தெளிவுபடுத்தியுள்ளார்" (மேலது: 36)

லெனினின் ஏகாதிபத்தியக் கோட்பாட்டின் பின்னணியில் மலையகத் தமிழரின் வாழ்வும் வரலாறும் அவர்களைத் தனித்தேசிய இனமாக உருப்பெற வைத்துள்ளவாற்றை,

'காலனித்துவ, இனக்காலனித்துவ நடவடிக்கைகளுக்குப் பக்கத்திலேயே மலையக மக்களின் இருப்பும் வளர்ச்சியும் இன்னொரு முக்கிய அம்சமாக இருந்து செயற்பட்டு வந்திருக்கிறது. குடும்பங்களாகவும் சில அநேக சந்தர்ப்பங்களில் கிராமங்களையும் தென்னிந்தியப் பிராந்தியங்களையும் பிரதிபலிக்கும் குடும்பங்களாகவும் வந்து குடியேறிய இம்மக்களின் கடந்த நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றில் இவர்கள் வெறும் தொழிலாளர் கூட்டமாக மாத்திரம்தான் உருவெடுத்திருந்தார்களா? இவர்கள் இங்கு வாழ்ந்து தீர்த்திருப்பது ஒரு வாழ்க்கை இல்லையா? அந்தச் சுவடுகளை, ஒரு சமூகத்தின் உயிர்ப்பைக் கிராமங்களில் காணுவதைப் போல தோட்டங்களிலும் நாம் காணக் கூடுவதில்லையா? இம்மக்கள் தங்கள் போராட்டங்களில், நடவடிக்கைகளில், கலை கலாசாரப் பிரதிபலிப்புக்களில் தங்களை ஒரு சமூகமாக இனங்கண்டுள்ளார்கள்.

மிகப் பெரும்பான்மையாகத் தொழிலாளர்களை மையமாகக் கொண்டு, பல சமூகத் தட்டுக்களைத் தன்னுடன் உருவாக்கி வளரும் ஒரு சமூகமாக உருவெடுத்துள்ளார்கள்... சமூக உருவாக்கம் ஒரு புறமும், இனக்காலனித்துவத்தின் செயற்பாடு மறுபுறமாகவும் தாம் ஒரு தனித்துவமான இனம் என்ற உணர்வைப் பலப்படுத்தி வந்திருக்கின்றன...' (மேலது: 36)

என முன்வைத்துள்ளார். ஆகவே, மலையக வெகுஜன இயக்கம் ஸ்டாலினின் தேசியம் குறித்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு மலையக தேசியம் என்பதை வரையறுக்க முனைய, மலையக மக்கள் இயக்கம் ஸ்டாலினின் கோட்பாடு பொருத்தமற்றது என்பதைச் சுட்டிக்காட்டி, லெனினின் ஏகாதிபத்தியக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மலையகத் தேசியத்துக்கான தர்க்கத்தை முன்வைத்திருப்பதைக் காணலாம்.

மலையகத் தமிழர் என்போர் யார் என்பதை வரையறுப்பதிலும் சாந்திகுமார் அவர்களின் பார்வையும் காதர் அவர்களின் பார்வையும் வேறுபட்டிருக்கின்றன. மலையகத் தமிழர் என்றதும் ஒருசிலர் இவர்கள் அனைவருமே தோட்டத்தொழிலாளர் எனத் தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் மலையகத் தமிழரை பின்வருமாறு ஆறு வகைப்படுத்த வேண்டும் என்கிறார், பி.ஏ. காதர்:

1. தோட்டத்தொழிலாளர்
2. நகரத் தொழிலாளரும் ஏனைய தொழிலாளரும்
3. விவசாயிகள்
4. உத்தியோகத்தரும் படித்த வாலிபரும்
5. நிலவுடைமையாளர்.
6. வர்த்தகர்கள்.

மேற்கூறியவர்களுள் பத்து வீதத்துக்கும் குறைவானவர்களாக வர்த்தகர்களும் பணக்கார விவசாயிகளும் பெரும் உத்தியோகத்தவர்களும் விளங்குவதாகக் கூறும் அவர், அக்குழுவினரிடமே மூலதனம் இருக்கிறது என்றும் அவர்கள் படுமோசமானவர்கள், அரசியல் விழிப்புணர்ச்சி இல்லாதவர்கள், எதிர்காலத்தில் இந்தியா சென்று குடியமர்வது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு மலையகத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஈவிரக்கமின்றி மூர்க்கமான முறையில் சுரண்டிச் சேகரித்த செல்வத்தின் ஒரு பகுதியை இந்தியாவிற்குக் கடத்தி அங்கு வர்த்தகம் தொடங்கத் தயாரிப்புச் செய்கிறார்கள், சிலர் ஏற்கனவே இந்தியா போய் வியாபாரம் தொடங்கிவிட்டார்கள். இன்னும் பலர் இந்தியாவிலும் இலங்கையிலும் சம காலத்தில் வியாபாரம் செய்து வருகிறார்கள்" (1981: 28, 29) என்றும் கூறியுள்ளார்.

மேற்படி பத்து வீதத்துக்கும் குறைவான குழுவினர் எந்த அடிப்படையில் மலையகத் தமிழர் என்ற வகைப்பாட்டினுள் உள்ளடங்குகின்றனர் - இந்தியாவிலிருந்து இலங்கை வந்த காரணத்தினாலா? -, இந்தியாவுக்குச் சென்று குடியமரும் திட்டத்துடன் மலையகத் தொழிலாளர்களையே ஈவிரக்கமின்றி சுரண்டும் குழுவையும் மலையகத் தமிழராக உள்ளடக்குவது பொருத்தமா, இலங்கையைத் தமது நாடாக வரித்துக்கொண்டுள்ள மலையகத் தமிழரையும் இலங்கையிலிருந்து சொத்துக்களைத் திரட்டிக்கொண்டு- சுரண்டிக்கொண்டு தமிழ்நாடு செல்லும் திட்டத்துடன் உள்ளோரையும் ஒரே குழுவாகக் - மலையகத் தமிழராக - கொள்வது எவ்வளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமானது. அத்தகைய குழுவினரையும் மலையகத் தமிழராக உள்ளடக்குவது மலையகத் தேசியத்துக்கு எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும் முதலானவை தனித்து ஆராயப்பட வேண்டியவையாகும்.

சாந்திகுமார் அவர்களோ ஒட்டுமொத்த இந்தியத் தமிழரையும் மலையகத் தமிழர் என்ற வரையறைக்குள் உள்ளடக்காது, இந்திய பெரிய மற்றும் சிறிய முதலாளித்துவ குழாத்திலிருந்து மலையகத் தமிழரை வேறுபடுத்தி, இலங்கையில் பெருந்தோட்டத்துறை எனும் புதிய பொருளாதாரத் துறையை உருவாக்கிய தொழிலாளர்களையும் அத்தொழிலாளர் சமூகத்தை அடியொற்றி தோன்றிய புதிய வர்க்க அமைப்புக்களையும் மலையகத் தமிழராக அடையாளப்படுத்துகின்றார்.

மலையகத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பலவற்றுக்கு, பி.ஏ. காதர் அவர்கள் குறிப்பிடும் பத்துவீதத்துக்கும் குறைவான அக்குழுவினரின் செயற்பாடுகளும் நடத்தைகளும் காரணங்களாக அமைந்தன என்பதற்கும் அந்தப் பத்து வீதத்துக்கும் குறைவானோர், பெருந்தொகையான உழைக்கும் மக்களைக் கொண்டுள்ள மலையகத் தமிழரைத் தமக்குக் கவசமாகக் கொண்டு அரசியல், பொருளாதார நலன்களைத் தன்வயப்படுத்திக் கொண்டனர் என்பதற்கும் வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன. உதாரணத்துக்கு, ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி) இனர் கொண்டிருந்த கருத்துக்களைச் சுட்டிக்காட்டலாம்.

ஜே.வி.பி. இனர் இலங்கையில் வாழ்ந்த ஒட்டுமொத்த இந்தியரையும், இந்திய ஆக்கிரமிப்பின் கூறாகக் கொண்டு அவர்கள் அனைவரையும் நாடுகடத்த வேண்டும் என்ற நிலையினையே எடுத்துள்ளனர். அவர்களுக்குப் பதில் தரும் வகையில் இலங்கை திராவிடர் கழகத்தின் இளஞ்செழியன் அளித்துள்ள பின்வரும் பதில் மிகுந்த கவனிப்புக்குரியதாகும்:

> "...இலங்கையில் அரசியல் மாற்றத்தைக் கொண்டுவருவதற்குத் தடையாக உள்ளவர்கள் இந்திய சமூகமென்றும் இந்தியாவின் ஆதிக்கம் இவர்களின் மூலம் தான் திணிக்கப்பட்டுள்ளதென்றும் உம்முடைய (ஜே.வி.பி.) முன்னணியின் சித்தாந்தம் கூறுகிறது. மொத்தமாக இந்தியர்கள் எனக்கூறுவது பிழையானது. இலங்கையைச் சுரண்டுவதற்காக வந்தவர்கள் மிக மிகச் சின்னக் கூட்டமே. அக் கூட்டம் உம்முடைய பாஷையில் முகர்ஜிகளாகவும் ஐயர்ஜிகளாகவும் நாடார்களாகவும் செட்டியார்களாகவும் பிள்ளைகளாகவும் இருப்பது உண்மை. அச்சிறுக்கூட்டத்துடன் பத்துலட்சம் இந்திய தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கி நாடுகடத்த வேண்டும் அல்லது முற்றாக நாசமாக்க வேண்டுமெனக் கூறுவது முற்றிலும் பிழையாகும். இச்சிறு இந்திய முதலாளிக் கூட்டத்தை நாளைக்கு நாடுகடத்த வேண்டுமென நீர் சொன்னால் அது காலம்கடந்த வேலையாகும். அச்சிறு கூட்டத்தை இன்றிரவு பன்னிரண்டு மணிக்கே நாடுகடத்த வேண்டுமென நான் கூறுகிறேன். அந்தவேளையில் நாம் உம்மோடு இணைகிறோம். ஆனால் பத்து லட்சம் இந்தியத் தொழிலாளர்களை நாடுகடத்த தயாரானால் அத்தொழிலாள வர்க்கம் உங்களை எதிர்த்துப் போராடும் (மேற்கோள்: முத்துலிங்கம், 1996, எழுதாத வரலாறு: இலங்கை திராவிடர் இயக்கம் பற்றிய ஆய்வு, 105,106)

இத்தகைய வரலாற்றுப் பாடம், நாட்டில் நிலையான அக்கறையில்லாத, இலங்கையின் நிரந்தர வதிவாளர்களாக வாழ விரும்பாத குழுவினரில் இருந்து நாட்டில் நிலையான அக்கறையுள்ள, இலங்கையையே தமது ஜீவிதபூமியாக வரித்துக்கொண்டுள்ள மக்களை வேறு பிரித்தல் அவசியமானது என்பதை உணர்த்தி வந்துள்ளதைக் காணலாம். ஏ. இளஞ்செழியன் போன்றோர் அதை உணர்ந்து செயற்பட்டுள்ளதை வரலாற்றில் காணமுடிகின்றது. இந்த உணர்தல் மலையக தேசியம் குறித்த உரையாடல்களுக்கு மிகமிக அத்தியாவசியமானதாகும். ஆகவே, சாந்திகுமார் அவர்கள் மலையக தேசியத்துக்கு உரமூட்டக்கூடிய, மலையகம் என்ற யதார்த்தத்துக்கு உயிர்ப்பளிக்கக்கூடிய மக்கள் பிரிவினரையே மலையகத்தவராக வரையறுத்துள்ளார் எனலாம்.

தொகுத்துநோக்கின், மலையகத் தேசியம் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து, அதனை அறிவார்ந்த தளத்தில் நியாயப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டதில் மலையக வெகுஜன இயக்கம், மலையக மக்கள் இயக்கம் ஆகியன முதன்மையான பங்கினை வகித்தபோதும் அவ்விரு இயக்கங்களும் மலையக தேசியம் என்பதை நியாயப்படுத்த முன்வைத்த தர்க்கங்கள் வேறுபட்டவையாக விளங்குகின்றன. அவ்வேறுபாடுகளையும் மலையகத் தமிழரின் சமூக யதார்த்தத்தையும் இணைத்து நோக்கும்போது, மலையக மக்கள் இயக்கம், மலையக தேசியத்தை - அதன் இருப்பைச் சமூக வரலாற்று யதார்த்தத் தளத்தில் நின்று தர்க்கபூர்வமாக நியாயப்படுத்தும் முயற்சியை முன்னெடுத்துள்ளதைக் காணமுடிகிறது. இந்த வேறுபாடு கொள்கையளவில் வேறுபட்ட போக்கினை வெளிப்படுத்தி இருந்தாலும் மலையக தேசியம் என்ற எண்ணக்கருவின் வளர்ச்சியிலும் அதனை ஓர் அரசியல் சக்தியாகக் கட்டியெழுப்பியதிலும் இவ்விரு இயக்கங்களின் பங்களிப்பு கணிசமானதாக விளங்கியுள்ளமையை மறுக்கமுடியாது.

❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவிகளது கோரிக்கை

அடித்தாலும் சிரிப்பார்கள்
எரித்தாலும் மறப்பார்கள்
உதைத்தாலும் குனிவார்கள்
சிதைத்தாலும் பணிவார்கள்

உங்களது விளக்கத்தின் படி
அப்பாவிகள் அப்படித் தான் இருப்பார்கள்

செருப்புக்கும் வாக்களித்தது
நெருப்பிட்டோருக்கும் மாலையிட்டு
வெறுப்போருக்கும் கரங்குவித்து
வேடதாரிகளுக்கும் இடமளிக்கும்

அப்பாவிகள் அப்படித் தான் இருப்பார்கள்

நாங்கள் அப்பாவிகள் என்பதை
அரசாங்க அறிவிப்பாகவே செய்து விடுங்கள்
ஏனெனில் நாளை
உங்கள் குரல்வளைகளை கடித்துப் பிளந்து
இரத்தம் குடிக்கும் போதும் எங்களை
அப்பாவிகள் என்றே சொல்லுங்கள்
அப்பாவிகள் அப்படித் தான் செய்வார்கள்
அவர்களுக்கு ஒன்றும் தெரியாது

எங்களின் லயங்களின் முன்னால்
இறுகக் கட்டி வைத்து - எங்கள்
மக்களின் நீதிப் படி
உங்களுக்கு மரண தண்டனைகளை நிறைவேற்றும் போதும்
இவர்கள் அப்பாவிகள்
அப்படித்தான் செய்வார்கள் என்றும் எழுதுங்கள்
அப்பாவிகளால் வேறு என்ன செய்ய முடியும்?



**உக்குவளை உதயசூரியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிந்தது சனி

அஞ்சி மணிக்கெழும்பி
அடுப்பை பத்த வச்சி
பச்ச விறகினு
பல தடவ
அடுப்பூத....

பொங்கிய புகையினால்
புரண்டு படுத்தநான்
சனி என்றதும்- சட்டென
எழும்பி...
தரையில் இருந்து
ஊதாந் தட்டையால்
ஊதி அடுப்பெரிக்க..

எரிந்த கரியில்
ஒருதுண்டை
எடுத்து ஈரமாக்கி
பல்விலக்கி முகம் கழுவி
பகல் சாப்பாட்டுக்கு..
சம்பல் ரொட்டியோடு
சாராயப் போத்தலில்
சாயத் தண்ணியையும்
ஊத்தி எடுத்து

ஆறு மணிக்கெல்லாம்
அவசர அவசரமாய்...

பால் வாளிக்குள்
கொத்தை வச்சி
கொத்துக்குள் கூடை வச்சி

கொத்து வாளி கூடையோடு
குடு குடுவென ஓடும்
உன் பின்னே

உணவுப் பொதியோடு
நானும் ஓடி வர...

வழமையான இடத்தில்
வாளிக்கொத்தை வைத்து
இடுப்பிலே கூடை கட்டி


வாயில் வரும் இறைவனை
வாயார முனுமுனுத்து
வணங்கி விட்டு..

காயம் படக்கூடாது
கங்காணி ஏசுவான் – என
கண்ணுங் கருத்துமாய்

ஒட்டியப் பாலை
மரத்தில்
உரித்தெடுத்து
பட்டையை –நீ
சீவ..
சிரட்டைப் பாலை
உரித்தெடுத்து
சரிப்படுத்தி
வடியும் பாலை
வழிபிசகாமல் – சிரட்டைக்குள்
வடியவிட்டு...
உடலைக் கடிக்கும்
உதிரத்தைக் குடிக்கும்
கொசுக்களையும்
அட்டைகளையும்
பிடுங்கி வீசி...

ஒன்றல்ல இரண்டல்ல
முந்நூறு மரத்திற்கும்
முன்னே நீ ஓட
உன் பின்னே
நான் ஓட..
ஒன்பது மணிக்கெல்லாம்
ஒரு வெட்டு
வெட்டி முடிய...

பால் வடியநேரம் கொடுத்து
பலரும் வந்தமர்ந்து
ஒட்டுப்பால் வாசத்தை
ஓரளவு கழுவி
நீக்கி
இருப்பதை எல்லோரும்
எடுத்து சாப்பிட்டு
ஆறிய காட்டையை
ஆசையோடருந்தி



**அஸ்க்வெளியூர் ரட்னஜோதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாயிருந்து
ஊர்க்கதை அளக்க...

பக்கத்து வெட்டு
பள்ளித் தோழர்களோடு
பறந்து திரிந்து..

ஆடிவரும் இறப்பர் இலைகளை
ஓடிப்பிடித்து
ஒன்று சேர்த்து..

இறப்பர் கொட்டைகளை
தேடிப்பொறுக்கி
தேவையான பெயர் சூட்டி..

காய்ந்த காயால்
காற்றாடி பல செய்து
அதைக்
கண்டு மகிழ்ந்து..

காயாத காய்கொண்டு
பல வகை
கரத்தைசெய்து
விளையாடி..

சிரட்டையில் படிந்து
திரண்ட பாலை
பக்குவமாய் உரித்தெடுத்து - அதன்
பக்கவாட்டினை கையினால்
ஒட்டி
பலூன்போல ஊதியெடுத்து
பந்தடித்து விளையாடி..

உரித்தெடுத்த ஒட்டுப்பாலை
ஒன்று சேர்த்து
உருண்டையாய் பந்து
செய்து
ஓங்கி அடித்து...

பதினொரு மணியாவதை
பாத அடி சொல்ல..

மரத்திற்கு மரம் சென்று
சிரட்டை வளித்து
பாலெடுத்து சேகரித்து..
எடுத்தபால் போதாது
ஏசுவான் கண்டாக்கு – என
அக்கம் பக்கம் பார்த்து
அள்ளி எடுத்த
தண்ணியையும்
கொஞ்சம் சேர்த்து..

பன்னிரண்டுமணி
பட்டப்பகல் வெயில்
உடலை சுட்டெரிக்க
பாதத்தை இரும்பாக்கி
பால் வாளியை
தலையில் சுமந்து
கூடையை கொக்கியில் மாட்டி
இடுப்பிலே கத்தி சொருகி..

ஒன்றல்ல இரண்டல்ல
பலமைல் நடந்து
பால் ஊத்தும் ஸ்டோருக்கு..
நடந்தே வரும்
உன்பின்னே
கொத்துப்பாலை
கூடவே சுமந்து வர..

வரிசை பிடித்து
நிறைபோட்டு – பல
பாடுபட்டு
பாலை வடிகட்டி
பத்தாது பாலென
பலவாறு ஏசும்
கண்டாக்கை..

புண் கையோடு பார்த்து
பொய்க்காக சிரித்து
ரசித்து...

வரும் வழியிலே
வழிந்தோடும் கிணற்றிலே
கை கால் முகம் கழுவி
களைப்பை நீக்கி..

வாளி நிறைய
தண்ணியோடு
வந்து சேர...
வீட்டுக்கு

இன்றைய
சனிக்கிழமை
கழிகிறது..
என்றிருக்க

இருநூறு வருடமாகியும்
எட்டிப்பார்க்கிறது
என்னை
ஞாயிற்றுக்கிழமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கலாநிதியின் வாக்குமூலம்

சை. கிங்ஸ்லி கோமஸ்


"குட்மோர்னிங் சேர். எப்படி இப்ப உடம்புக்கு நலமா?" என்று திறந்த பல் கலைக்கழக மாணவன் விசாரித்தான்.

"இப்போ ஓரளவு பரவால்ல. ஆனா பைபாஸ் சர்ஜரி ஒன்று செஞ்சிருக்கு. ஓபன் ஹாட் சர்ஜரி தான். ஏதோ ஆபத்தான நிலைமையில் இருந்து தப்பி வந்தாச்சு. இருந்தாலும் கவனமாக இருக்கும்படி டாக்டர் கூறியுள்ளார்" என்றார் அந்த பேராசிரியர்.

வயது 78 தாண்டிய அந்த பேராசிரியர் தற்போது தனிமையில் ஒரு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்காக சில மாணவர்கள் சென்றி ருந்தார்கள். அந்த மாணவர்கள் அவரை சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று தான் சந்திக்க வந்திருந்தனர். ஆனால் அவர் இருக்கும் நிலையைப் பார்த்தவுடன் அவர் களால் எந்தக் கேள்வியும் கேட்க முடிய வில்லை. வெள்ளைத் தாடியும் நரைத்த தலையும் மெலிந்த உடம்பும் உயிரற்று காணப்பட்ட கண்களும் உற்சாகம் இல்லாத வார்த்தைகளும் அவரை எண்ணிக் கவலைப் படத்தான் வைத்தன.

ஆனாலும் அவர் அவர்களோடு கதைப் பதில் ஆர்வமாக இருந்தார். "எப்படி உங்கள் படிப்பு எல்லாம் போகின்றது" என்று வந்த வர்களை விசாரித்தார். "ஓகே சேர். இப்ப நாங்க ரிசர்ச்ல இருக்கிறோம்" என்றனர் வந்த மாணவ மாணவியர்.

ஆரம்ப காலங்கள் போல் அல்லாது இளம் தலைமுறையினர் சகல விடயங் களையும் மாற்றுக் கருத்துடன் நோக்குபவர் களாக இருந்ததனைப் பார்க்கும் பொழுது



பேராசிரியருக்குப் பெருமையாக இருந்தது. பேராசிரியர் கதைக்கத் துவங்கினார்.

"நான் கூட ஆரம்ப காலத்தில் உங்களைப் போலத் துடிப்பாகத்தான் இருந்தேன். ஆனால் அந்தக் கால கட்டம் சற்று வித்தி யாசமானதாக இருந்தது. நாங்கள் குறித்த ஒரு தொழிற்சங்க அரசியல் தலைமைக்கு அடிமையாகவே இருக்க வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால் எங்களது வாழ்க்கை வளர்ச்சி அடையாததாக இருந்திருக்கும் அல்லது வளர்ச்சி அடையாது என்ற பயம் எங்கள் மனங்களிலே ஆழப் பதிந்திருந்தது. ஆனாலும் அந்தத் தொழிற்சங்க அரசியலை எதிர்த்த அல்லது விமர்சித்த பலர் பலவாறான பாதிப் புகளுக்கு முகம் கொடுத்திருந்தாலும் அவர் களிடமிருந்த அந்த நேர்மையும் துணிவும் இன்று அவர்கள் மகிழ்ச்சியாக வாழவும் விமர்சனங்கள் இல்லாமல் வாழவும் அவர் களின் பிள்ளைகள் அவர்களை போற்றவும் கூடியதானதாக அமைந்திருக்கின்றது. நாங் களோ, சமூகத்தால் தூசிக்கப்பட்டு பிள்ளை களால் விமர்சிக்கப் பட்டு தூக்கி எறியப்பட்ட நிலைமையில் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது" என்றார். சமூகம் எங்களை ஓரம் கட்டி விட்டது என்றும் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் ஆய்விற்காக எந்தக் கேள்வி களை கேட்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தார்களோ அந்தக் கேள்விகளை கேட்கா மலே அவர்களுக்கான பதிலை பேராசிரியர் வாக்குமூலங்களாக கொடுத்துக் கொண்டி ருப்பதை பார்த்து வியப்படைந்தனர்.

"அந்தக் காலத்திலே குறிப்பிட்ட தொழிற் சங்கத்தின் தலைவர் என்னை அழைத்து மலையகத்தில் நீர் மின்சாரம் பெறுவதற்காக நிர்மாணிக்க உள்ள நீர் தேக்கத்தை பலரும் விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். மலை யகத்தில் பல கல்வி கற்றவர்கள் அதற்கு எதிராக போராடிக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் அந்த திட்டம் மிக நல்லது என்றும் இதனால் மலையக மக்களுக்கு சிறப்பான தொரு எதிர்கால அபிவிருத்தி ஏற்படும் என்றும் உடனடியாக அறிக்கை ஒன்றை தயாரித்து தாருங்கள். அந்த விடயத்தை தொலைக் காட்சியிலும் ஊடகங்களிலும் பரப்புரை செய்வது எமது கட்சியின் கடப் பாடு. அதேபோல உங்களுக்கு பல லட்சம் ரூபாய் பணத்தையும் நாங்கள் தருவோம். இந்தியாவிலேயே உயர்கல்வியை மேற்கொள் வதற்கு நாங்கள் உங்களுக்கு உதவி செய் வோம்" என்றனர். "அதை நம்பிய நான் எனது சமூகத்தினருக்கு பல பாதகங்களை விளைவித்த நீர்த்தேக்கத் திட்டத்தை ஆதரித்து கட்டுரையை எழுதினேன்".

"தருவதாக கூறிய பணத்தில் ஒரு சொற் பத்தை தந்தார்கள். அதே நேரம் இந்தியா விலேயே சென்று கலாநிதி பட்டம் செய்வ தற்கு சில சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி தந்தார்கள். அதற்குப் பின் என்னைக் கை விட்டு விட்டார்கள். என்னைப் போன்ற ஏமாற்றப்பட்ட மலையக கல்விமான்கள் பலர் இருக்கின்றார்கள்" என்றார் பேராசிரியர்.

தொடர்ந்து பேராசிரியர் பேசத் தொடங்கினார்.

"இது போல தான் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு தொடர் பாகவும் பல நல்ல மனிதர்கள் பல போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். அந்தப் போராட்டங்களின் விளைவாக ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு கொண்டிருந்த காலகட்டத்தில் பெருந்தோட்ட நிர்வாக கம்பெனிகள் சார்பாக அதே தொழிற்சங்கத்தின் அரசியல் வாரிசான அரசியல் தலைவர் என்னை அழைத்து ஆயிரம் ரூபாய் சம்பளத்தை கொடுப்பதில் கம்பெனிகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், நட்டங்கள் தொடர்பாக சிறப்பான ஆய்வறிக்கை ஒன்றை உடனடியாக எழுதி அதனைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதற்காக கம்பெனிகள் எனக்கு பல லட்சம் ரூபாய் பணத்தையும் தந்தனர். நான் தொழிற்சங்க தலைவருக்கு ஏற்றதாகவும் கம்பெனிகள் நன்மை அடையும் விதத்திலும் எனது கட்டு ரையை ஆய்வு அறிக்கையாக சமர்ப்பித்தேன். இன்று நான் நம்புகிறேன். எனது சமூகத்திற்கு நான் செய்தது மாபெரும் தவறு என்று. இன்று மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வறுமையில் வாடி துன்பமிக உழன்று தோட் டங்களை விட்டு போய் துன்பத்தில் வாட நான் செய்த துரோகங்கள் காரணமாயின" என்றார்.

பேராசிரியரின் வாக்குமூலங்களைக் கேட்ட பொழுது மாணவர்களின் மனங்களில் புதிய சிந்தனையொன்று தோன்றியது. எந்தக் கால கட்டத்திலும் சமூகத்துக்கு எதிரான ஆய்வு களை செய்யக்கூடாது. செய்தால் நரம்பு தளர்ச்சி வந்து இவ்வாறு வாக்குமூலம் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கும் ஏற்படும் என்று. அன்று பேராசிரியர் பதவி யிலும் புகழின் உச்சியிலும் இருந்த போது அவருக்கு விழா எடுத்து கயவர்கள் அவருக்கு சரியான அறிவுரை வழங்கியிருந்தால் இன்று இவரின் வாழ்க்கை சற்று நிம்மதியாக இருந்தி ருக்கும் என்று அவர்கள் கதையாடினர்.

பேராசிரியர் அவருடைய வாக்குமூலத்தை தொடர்ந்தார்.

"இலங்கைக்கு இந்தியாவில் இருந்து தொழிலாளர்களாக கொண்டுவரப் பட்ட எமது பரம்பரையினரின் 200 வருட பூர்த்தியை முன்னிட்டு பலரும் 'நாங்கள் மலையக மக்கள்.' எங்களுக்கான தனியான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அடையாளம் வேண்டும். இந்த நாட்டில் நாங்கள் பிரஜைகள் என்ற அந்தஸ்த்து எங்களுக்கு வேண்டும் என்று மிக நேர்மையாக குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர். அப்போது இந்தியாவிற்கு மிக விசுவாசமான அந்த தொழிற்சங்க அரசியல்வாதிகளின் மூன்றாவது பரம்பரையினர் என்னை அழைத்து நாங்கள் மலையக மக்கள் அல்ல. இந்திய வம்சாவளி மக்கள். இந்தியாதான் நமக்கு சகலதும். இந்தியாவை பகைத்துக் கொண்டு நாங்கள் எதுவுமே செய்ய முடியாது. இந்தியா எம்மை காக்கும் கடவுள். ஆகவே நாங்கள் இந்திய வம்சாவளி மக்கள் என்பதை ஆணித்தரமாக கூறி ஒரு ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டனர். இதற்கு இந்திய அரசாங்கமும் பல கோடி ரூபாய் பணத்தை எனக்கு வழங்கியது. ஆனாலும் மலையக மக்கள் நாங்கள் என்று குரல் எழுப்பிய உண்மையான மக்கள் தொண்டர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். நான் ஓரம் கட்டப்பட்டு விட்டேன். இப்போது என்னை யாருமே மதிப்பதில்லை. நான் ஒரு பேராசிரியர். எனது குடும்பமும் பிள்ளைகளும் கூட என்னை மதிப்பதில்லை. ஆகவே இன்று இருக்கக்கூடிய மலையகக் கல்விமான்களுக்கு நான் ஒன்றை கூறுகிறேன். நாங்கள் மலையக மக்கள் பாட்டாளிகளாக இந்த நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு இந்த நாட்டை செழுமையான பூமியாக்கி இந்த நாட்டின் முதுகெலும்புகளாக இருக்கும் நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகள். நாங்கள் இந்திய வம்சாவளி மக்கள் அல்ல. நாங்கள் இலங்கை மலையக மக்கள். இதை யாரும் மறந்து விடக்கூடாது"

என்று கூறியவாறு தனது கண்களில் இருந்து வடிந்து ஓடிய கண்ணீரைப் பொருட்படுத்தாமல் நித்திரையானார்.

கல்வி கற்றவன் என்று பெயரும் பதவிகளும் கலாநிதி பட்டங்களும் எமது பேருக்கு பின்னால் சூட்டிக் கொள்வது அல்ல கற்றோருக்கான பண்பு. கற்றவற்றைப் பயன்படுத்தி என் சமூகத்திற்கு நான் என்ன செய்தேன். இதயசுத்தியுடன் எனது சமூக விடுதலைக்காக நான் செயல்பட்டேனா என்பதுவே கற்றோருக்கு அழகு. ஆகவே, நாங்களும் கற்றோர்களாக வாழ்வோம் என்று திடமான முடிவுகளுடன் திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் வைத்திய சாலையை விட்டு வெளியே வந்தார்கள். ❑

## அஞ்சலி
# அன்புடீன்



மேடை நாடகத்தினூடாக இலக்கியப் பரப்புக்குள் நுழைந்தவர். சிறுகதை, கவிதை எழுத்தாளர். கலந்தர் லெப்பை எனும் இயற்பெயர் கொண்டவர். அன்னை மகிழ்கிறாள் (வரலாறு 1982), முகங்கள் (கவிதை 1988), ஐந்து தூண்கள் (கவியரங்குக் கவிதை 1999), சாமரையில் மொழி கலந்து (கவிதை 2002), நெருப்பு வாசல் (சிறுகதை 2011), தொப்புள் கொடியும் தலைப்பாகையும் (கவிதை 2016) ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

அண்மையில் காலமான அன்புடீன் அவர்களுக்கு 'தாயகம்' இதழ் தனது அஞ்சலியை செலுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மலையகத்தில் இருந்து 'வரிசையில் ஒருத்தி' ஆவணத் திரைப்படம்

சை.கி.கோமஸ்

இலங்கை மலையகத்திலிருந்து சப்ளின் கிரியேஷன்ஸ் வழங்கும் சை. கிங்ஸ்லி கோமஸ், சந்திரலேகா கிங்ஸ்லி ஆகியோரின் படைப்பாக 'வரிசையில் ஒருத்தி' என்ற ஆவணத் திரைப்படம் வெளியிடப்படுகின்றது.

இந்த ஆவணத் திரைப்படம் இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக அதன் அடிப்படையில் மண்ணெண்ணெய் இல்லாமல் மண்ணெண்ணெய் வரிசைகளிலே சென்று மரணித் தவர்கள் ஏராளம். அவர்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 'வரிசையில் ஒருத்தி' என்னும் திரைப்படம் ஒரு பெண் தனது குடும்பத்தை கொண்டு நடத்துவதற்கு மண்ணெண் ணெய் வாங்குவதற்கு சென்று எவ்வளவு கஷ்டப்படு கின்றாள் எனது ஆவணமாக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உண்மையிலேயே சுகவீனமுற்ற கணவன் பசியால் வாடும் பிள்ளை, மாதவிடாய் நாட்கள், சிறுநீர் கழிக்கக் கூட முடியாத நிலைமை இந்த நிலைமையில் ஒரு பெண் படும் பாடு மண்ணெண்ணெய்க் காக மக்கள் போராடிய போராட்டம் என்ற விடயங்களை அடிநாதமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த ஆவணத் திரைப்படம் இலங்கையில் வாழும் சகல மக்களினதும் வேதனையையும் கண்ணீரையும் எடுத்தியம்புவதாக இருக்கின்றது. இந்த படத்தை ஒரு ஆவணமாக இந்த நாடு முகம் கொடுத்திருக்கும் பிரச்சினைகளின் ஒரு சிறிய அடையாளமாக வெளியிட்டு வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றது சப்ளின் கிரியேஷன்ஸ். ஆவண குறும்பட தயாரிப்பு நிறுவனம்.

இலங்கையிலே மலையக மக்கள் மண்ணெண்ணெய் .கோதுமை மாவு, என்பவற்றுடன் அடிப்படை சம்பள உயர்வு இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டம். இந்தியாவிலேயே இருந்து கொத்தடிமை களாக கூலிக்காக அழைத்து வரப்பட்ட மக்கள் கூட்டத்தின் கண்ணீர் கதைகள் ஏராளம் ஏராளம் ஆனாலும் இன்றைய எமது நாட்டின் பொருளாதார சிக்கல் காரணமாக அதிக அளவில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மக்கள் கூட்டத்தினர் இடையே மலையக மக்கள் மிக முக்கியமானவர்கள் இவர்களை அவர்களின் அரசியல் தலைமைகள் தொழிற்சங்க தலைமைகள் கைவிட்டு விட்ட நிலைமையில் இந்த மக்களுக்காக குரல் கொடுக்கவும் ஒட்டுமொத்தமான பெண்களின் பிரச்சினைகளுக்காக தயாரிக்கப்பட்ட வரிசையில் ஒருத்தி திரைப்படம் மண்ணெண்ணெய் வரிசைகளிலே உயிர் நீத்த சகல இன, மொழி, ஜாதி, வர்க்க மக்களுக்காகவும் தயாரிக்கப்பட்டது.

இந்த திரைப்படத்தை தயாரித்த சாப்ளின் கிரியேஷன் நிறுவனம் இன்னும் ஏன் இப்படி ,சி வி வேலுப்பிள்ளை, மலேசிய போராளி மூ வரதராசு, மல்லிகா (துப்புரவு தொழிலாளி பெண்ணின் ஒரு நாள் வாழ்க்கை), வள்ளியம்மா (தேயிலை தோட்டத் தொழிலாளி பெண்ணின் ஊதியம் இல்லாத வீட்டு வேலைகள்) போன்ற ஆவண திரைப்படங்களை தயாரித்து வெளியிட்டு இருப்பது ஒரு அடையாளப்படுத்த வேண்டிய விடயமாக இருக்கின்றது. எனவே 'தாயகம்' சஞ்சிகைக்காக இந்த தகவலை வழங்குவதில் பெருமை அடைகிறோம். ❑





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமகள்–200 (1823–2023)

மலையூரான்

*பிறர் கூற்று:*

*பேர் மலை மகள்*
*ஊர் உலை மண்துகள்*
*வேர் இலை விழுதிலை*
*யார் அருளுவார் அவளுக்கினி!*

*வயதிருநூறு முதிரிளங்கன்னி*
*உயராகாயக் கோட்டை அரண்மனை*
*அயலமர் அமைச்சர் அரசர் சூழ் படையணி*
*இயக்கமின்றி இருக்கிறாள் அவள் தனி.*

*மலைவாழ் மனிசரெல்லாம்*
*விலைவாசி உயர்வென்று வீதியெல்லாம் முழங்குவார்*
*உலை எரியவில்லையென்று உணர்வினால் ஒன்றாவர்*
*தலையற்ற முண்டமாய் தடுமாறும் கட்சிகள் - அவர்தம்*
*நிலைபற்றிப் பேசினால் நீறாவர்*
*அலைபாயும் மனிசரையெல்லாம் ஆராரோ ஆட்டுகின்றார்.*

***

*மலைமகள் கூற்று:*

*மலைமண் தின்று வாயில் உலகைக்காட்டிய*
*மாயன் என் மக்கள் மலையகத்தார்- இவர்*
*நிலையென்ன வென்றால் வீடில்லை நிலமில்லை*
*உலாவர வீதியில்லை விலாசமில்லை யென்பார்மூடர்*
*ஊர் உலகெல்லாம் உனதானபின்னே பார்முழுதும்*
*பேர் தெரியாத் தொழிலாளர் ஆள்வாரெனில்*
*யாரடா என் மக்களை யாரோ எவனோவென்று*
*ஏனழைக்கின்றார் இனி!*

*வேர் கொண்டு ஊர் வென்று தேர் பூண்டு*
*பார் ஆண்ட பேர் பெற்ற பேரனின் பேரனின்*
*பரம்பரைப் பார்மகள் மலைமகள் மண்மகள்*
*யார் எனை வெல்வார் இனி.*

*மலையகத் தேசத்து வித்துநான்*
*தலை நிமிரத் தரணியாள் தலைவி நான்*
*தவிக்க விட்டு அடையாளங்கெட்டு*
*யார் நீ எனக் கேட்டு அரிகண்டம் செய்கிறார்.*
*இந்தியாக்காரரென்பார் இங்கென்ன அலுவல் என்பார்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான் வரத்தானென்பார்
வந்து சேர்ந்து நொந்து கெட்டு நோயுள் மூழ்கி
விந்து தரித்து வம்சம் பெருக்கி இருநூறு ஆண்டுகள்
வெந்து தணிந்து வீரம் செருக்கி விளைபயிர் தேயிலையாய் - கரைந்து
உந்துவிசை உலகின் காசுப் பசை பெற
இந்த நாடுதான்... இலங்கைதான்... நான்பெற்ற பிள்ளையடா

இந்து சமுத்திரத்தில் என்பிள்ளை இலங்கையிவள்
ஏமாந்து எவனெவனோ கரம் பிடித்து ஏழையாய் போனாள்
எவர் காப்பார் இனி என ஏங்கித் தவிக்காதீர்!

பிறர் கூற்று :

முந்துவினை முழுதும் களைந்து முழுமூச்சாய்
மலைமகள் எழுவாள் மகிழ்வர் மக்களினி
மந்திரம் கற்றவள் மாயன்வரம் பெற்றவள்
தந்திரந் தெரிந்தவள் தவிக்கவிடாளினி.

கட்சிகள் பின்னே காவடியெடாள்
காவாலிகள் முன்னே ஏறுபோல் பாய்வாள்
ஊர் வலம் கூட்டம் என்று 'சோக்'கு காட்டமாட்டாள்
பேர் தெரியத்தன் ஊடக ஊதாரிகள் முன் பிரமுகராய் பிறர் பேரெடவிடாள்

தன்னையறிந்தாள் தன்பேர் தெரிந்தாள்
இன்னவள் இவள் என்று எல்லோரும் அறிய
கல்வியில் நிமிர்ந்தாள் பல்கலை பயின்றாள்
வல்வினையனைத்தும் பயிற்சியில் தேர்ந்தாள்

ஒன்றுபட்டாள் ஓர் இலட்சம் மக்கள் ஒன்றானார்
நன்று நடந்தாள் ஈரிலட்சம் கைகள் வீசி
ஆளுக்குப்பத்துப்பேர் எஸ்டேட்டுக்கு நூறுபேர்
ஆணும் பெண்ணுமாய் ஆடிப்பாடிக் கூடிமகிழ்ந்தார்
ஆளும் வழி அறிந்து இயக்கமானார் இணைந்து

ஒரு நூறு ரூபாய் ஒருநாள் ஓராள் ஒரு குடும்பம் என்றாள்
ஒரு கோடி ரூபாய் ஒருநாளின் இயக்கமானது
ஈரடி எடுத்து இயக்கமாய் நடந்தாள் மலைமகள்
இலங்கை முழுதும் மலைமகள் பாதம் பணிந்தது
உழைப்பவர் உலகம் செழிக்க வரம் பெற்றாள்

வீடுகள் உயர்ந்தன நிலங்கள் நீசரிடமிருந்து தப்பின
பாடுகள் நீங்கப் பலரும் ஆளுக்கு இரு ஏக்கர் நிலமாய் பகிர்ந்தாள்
பல்லுயிரோம்பி பல்லக்கில் பயணிக்க
தேரேறித் தெருவலம் வர 'அரோகரா' சொல்லி
அனைவரும் வடம் பிடிக்க வந்தாள்
மலைமகள் என்னே அதிசயம்!

இருநூறு வயதுக் கிழவியவள்
இருபது வயதானாள்! அவளின் அழகோ தனி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்கான கலைகளும் இலக்கியமும் -இயங்கு தளத்தின் தேவைகளும் சவால்களும்

சிவ. இராஜேந்திரன்

## அறிமுகம்

இலங்கையில் சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள், மலையகத் தமிழர் என்ற நான்கு தேசிய இனங்களும், ஆதிப் பழங்குடியினரான வேடுவர், பறங்கி இனத்தவர், மலாயர், ஆபிரிக்க கபீர் இனத்தினர், தெலுங்கர் போன்ற சிறுபான்மை இனங்களும் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு இனத்தினருக்கும் தனித்துவமான வரலாறு, பண்பாடு போன்றன காணப்படுகின்றன. எனினும் இத்தகைய பன்மைத்துவ வளத்தினை அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டு அடிப்படையில் வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இனப்பன்மைத்துவத்தை நிராகரித்துப் பேரினவாத ஒடுக்கு முறையினையும் மதவாதத்தையும் தொடர்ந்து முன்னெடுத்து வருவதைக் காண முடியும். இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஏகாதிபத்தியங்களும், இந்தியா, சீனா போன்ற பிராந்திய வல்லரசுகளும் அவற்றுக்குத் துணை செய்யும் பல்தேசிய கம்பனிகளும், இனப் பிரச்சினையை முன் வைத்து தனது இலாப வேட்டையில் தொடர்ந்து வெற்றியடைந்து வருகின்றன.

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் போராட்டங்கள் சாத்வீகத்தில் தொடங்கிப் போரில் முடிவுற்றது. அதன் விளைவுகள் தீர்வுத் திட்டங்களின் அடிப்படையில் மக்களுக்கு நன்மையைக் கொண்டு வருவதற்குப் பதிலாகப் பேரினவாத ஆக்கிரமிப்பையும், அடக்கு முறைகளையும், இராணுவமயத்தையும் கொண்டு வந்து சேர்த்துள்ளன. 'இருந்ததையும் இழந்து' போய் விட்ட நிலையில் போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியும் போராட்டமாகத் தொடர்கின்றது. போர்களையும் அழிவுகளையும் முன்நின்று நடத்தும் 'சர்வதேச சமூகம்' இத் தீவினை தன் வசப்படுத்திக் கொள்ள முயன்று வருகின்றன. யுத்தத்தால் கருகிய இப்பிரதேசங்களில் புதிய ஜனநாயக அடிப்படையிலான அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் போராட்டத்துக்கான தேவை அதிகமாக உணரப்பட்டுள்ள இன்றைய சூழலில், அவற்றுக்கு எதிர் நிலையிலிருக்கும் போதையும், வாள் வெட்டு கலாசாரமும், சாதிய திமிரும் புது வடிவம் கொண்டு எழுந்து நிற்பதைக் காணமுடியும்.

இன ரீதியான அடக்கு முறைகளுக்கும் கொடூரமான வர்க்கச் சுரண்டலுக்கும் முகங் கொடுத்து வரும் மலையக மக்களின் இருப்புக்கான போராட்டமானது தனித்துவமானதாகும். கடந்த இருநூறு வருடங்களாகப் போராடி வரும் இம்மக்களின் பொருளாதார அடித்தளத்தை முழுமையாக அழிப்பதன் மூலமாக அத்தனித்துவத்தை இல்லாமல் ஆக்குவதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்களும், இனவாதிகளும், மதவாதிகளும் தமது நிகழ்ச்சி நிரலை அபிவிருத்தி, குடியேற்றம், மீள காடாக்குதல், வனப்பாதுகாப்பு, நகர அபிவிருத்தி, உல்லாசப் பிரயாண தளங்களை விஸ்தரித்தல் போன்ற முகமூடிகளின் பின்னால் நின்று கொண்டு நாசூக்காக முன்னெடுத்து வருவதைக் காணலாம். தற்காலத்தில் எதிர்நோக்கப்படும் பாரிய பொருளாதார நெருக்கடிகள் மலையக மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. பெருமளவு

> "இன்றைய எழுத்தாளர்கள் எல்லோரும் கல்வியறிவுள்ளவர்கள். தொழிலாளர்களும் விவசாயிகளும் விடுதலை பெறும் வரை இலக்கிய வாதிகளைப் போலவே சிந்திப்பார்கள். உண்மையான விடுதலை உழைக்கும் வர்க்கத்தினருக்கு என்று சாத்தியமோ அதற்குப் பிறகே உண்மையான மக்கள் இலக்கியம் தோன்றும்"
>
> - சீன எழுத்தாளர் லூசுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல தயாராகி வருகின்றனர்.

அதேவேளை மலையக மக்கள் என்ற அடையாளத்துடன் வாழ்வோரின் இருப்பையும் தனித்துவமான பண்பாட்டையும் வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றை ஒருமுகப்படுத்தி முன்கொண்டு செல்வதற்கான தேவை அதிகம் உணரப்படுகின்றது. இந்த வரலாற்றுக் கடமையில் மக்களோடு இணைந்து பயணிப்பதற்கெனக் கட்டமைப்பு ஒழுங்கும் குறிப்பாகத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளும் அவசியமாகின்றன. அரசியல், பொருளாதாரம், சமூக ஒன்றிணைவு, கலைகள், பண்பாடு ஆகிய அனைத்து கூறுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல கலைகளும் இலக்கியமும் மேலும் வீரியத்தடன் முன்னெடுத்துச் செல்லப்படுதல் அவசியம் என்பதைத் தற்காலப் போக்குகள் எடுத்துக் காட்டுகின்றன. நவகாலனிய செயற்பாடுகள், உலகமயமாதல், தனியார்மயம், மக்கள் விரோத ஊடகங்கள், பொருத்தமற்ற கல்வி, போதைப்பொருள் வர்த்தகம், பின் முதலாளிய (பின்நவீனத்துவம்) மூளைக் கோளாறுகள், நுகர்வு கலாசார மோகம் போன்ற சவால்கள் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக எதிர் நிலையில் இருந்து செயற்படுவதைக் காணலாம். இவற்றைத் தகர்த்து புதிய பண்பாட்டை வளர்ப்பதென்பது இலகுவானதல்ல. எனினும் மக்கள் வரலாறை படைப்பவர்கள் என்ற வகையில் நம்பிக்கையுடன் மலையக கலை இலக்கியத்தை வலுவூட்டுவது அவசியமாகும். இதற்கான இயங்கு தளம் கருத்தியல் அடிப்படையிலும், மக்களை நோக்கிய செயற்பாடுகளின் நோக்கத் தெளிவையும் கொண்டிருத்தல் பயன்தரத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. பல இலட்சம் தொழிலாளர்களின் உடலாலும்,உதிரத்தாலும் உருவாக்கித் தரப்பட்ட மலைகளையும், இங்குப் போராடி வாழும் மக்களையும் தோழமையுடன் அணுகி செயற் படும் சக்திகள் பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைவது எதிரிகளை எதிர்த்து நிற்கப் பயன்படும். அது வெற்றிகளையும் சாத்தியமாக்கும்

## மலையக மக்கள் என்போர் யார்?

மலையகம் மற்றும் மலையக மக்கள் ஆகிய பண்பாட்டு மானுடவியல் அடையாளங்களைச் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் அணுகுவதும் விளங்கிக் கொள்வதும் மிகவும் பயனுள்ளதாக அமையும். இக்கருத்தோட்டங்களை இம்மக்களின் இயல்பான சிந்தனைக்குக் கொண்டு வருவதற்காகப் பல்வேறு வகையிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும். இந்தியக் கூலி, கள்ளத்தோணி, தோட்டத்து மக்கள், இந்தியத் தொழிலாளி, நாடற்றவர்கள், இந்திய வம்சாவளி மக்கள், பதிவுப்பிரஜைகள் ஆகிய அடையாளங்களை மாற்றியமைத்து மலையக மக்கள் என்ற தன்னடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்காக மேற் கொண்ட முயற்சிகள், போராட்டங்கள் ஆகியன விரிவான ஆய்வுகளுக்கும் தேடல்களுக்கும் உட்படுத் தப்பட வேண்டும். மக்களே வரலாற்றை மாற்றியமைப் பவர்கள் என்பதை மனதிலிருத்தி செயற்படுவது பயன் தரும்.

மலையகம் என்பது புவியியல் அடிப்படையில் அடையாளப்படுத்தப்படும் தோற்றமன்று. அது உழைப்புத் திரட்சியின் விளைவாகும். பல இலட்சக் கணக்கான தொழிலாளர்களது உயிரும், உடலும், குருதியும், வியர்வையும் மலையகத்தைப் படைத்தளித் துள்ளன. இரு நூறு வருட காலமாக தொடர்ச்சியாக இடம் பெற்ற அரசியல் பொருளாதாரச் சமூகப் பண் பாட்டு அடக்குமுறைகளுக்கெதிரான போராட்டங்களின் விளைவாகவே இதனை நோக்க வேண்டும்.

"மலையகத் தமிழர் சுமார் இரு நூறு வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தீவில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் மத்திய மலை நாட்டிலும் ஏனையோர் மற்றைய மாகாணங்களிலும் வசிக்கின்றனர். காடாக இருந்த மலையக மண்ணைத் தேயிலை மற்றும் இறப்பர் செழித்தோங்கும் பூமியாக மாற்றியவர்கள். இவர்கள் இதனூடாக இலங்கைக்கான தேசிய வருமானத்தை முதல் நிலையில் பெற்றுக் கொடுத்தனர்" மலையக சமூக ஆய்வு மையம் (2016) காலனித்துவ ஆட்சியாளர்களான பிரித்தானியாவிட மிருந்து அதிகாரத்தை உள்ளூர் பண முதலைகளிடம் கையளித்த நாட்களுக்கு முன்பாகவும் பின்னரும் முதலாளித்துவத்தின் மூலதன திரட்சிக்கும் அதன் முதலீட்டுக்கும், அதனூடாக இடம் பெற்ற உட்கட்டுமான வசதிகளான போக்குவரத்து, வங்கித்துறை, வாணிபம், தொடர்பாடல் துறை போன்ற அனைத்து துறைகளுக்கும் ஊட்டமளித்த முக்கியப் பொருளாதார நடவடிக்கையான தேயிலை, றப்பர் ஆகிய தொழிற்றுறைகள் இன்று வரை பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது. மனித சஞ்சாரமே கண்டிராது இருந்த வனப்பகுதியை 'பச்சைத் தங்கம்' விளையும் பூமியாக மாற்றியது யார்? அதற்கான உழைப்பு எவ்வாறு குவிக்கப்பட்டது? என்பதை ஆய்வு செய்யும் ஒருவருக்கு மலையகத்தினதும் அங்கு வாழும் மக்களினதும் தனித்துவமான பண்புகளைப் புரிந்து கொள்ள முடியும். அவற்றின் அடிப்படையிலேயே மலையகம் என்பதை வரையறை செய்து கொள்ளுதல் வேண்டும்.

இலங்கையின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வரும் மலையக மக்களின் இனத்துவத் தன்னடையாளங்களை அரசியல் அடிப்படையில் அங்கீகரித்து ஓர் இனமாக ஏற்றுக்கொள்வதற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மக்களின் அடிப்படை பிரச்சினைகளான நில உரிமை, வீடமைப்பு, உயர் கல்வி, வேலை வாய்ப்பு, அதிகாரப் பரவலாக்கம், சம்பள பிரச்சினை, பாதுகாப்பு போன்றனவற்றைத் தீர்ப்பதற்கும் கடந்த கால அரசாங்கங் களினால் உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வதற்குப் பதிலாக திட்டமிட்ட பொருளாதார அழிவுகளையும், இன வன்முறைகளையும் கட்டவிழ்த்து விடுவதற்கான காரணம் பேரினவாதமும் முதலாளிகளின் இலாப நோக்கும் ஈவிரக்கமற்ற சுரண்டலுமே என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஓர் இனத்தின் இருப்பையும் வளர்ச்சியையும் கண்டு இன்னோர் இனம் பயம் கொள்ளுமாயின், அதனை இல்லாதொழிப்பதற்குத் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுக்குமாயின் முதலாவதாகக் குறிப் பிட்ட இனம் தனித்துவமானது என்பது தற்கால ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. குடியுரிமைப் பறிப்பு, திட்டமிட்ட இனக்கலவரங்களை முன்னெடுத்தமை, இனவாத குடியேற்றத்திட்டங்கள், பெருந் தோட்டங்களை மூடுதல், தனியார் மயத்தின் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை முடக்குதல், அழித்தல், குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக முன்னெடுத்தல், காணி நில உரிமைகளை மறுதலித்தல் போன்ற சகல நடவடிக் கைகளும் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் இருப்பைப் போர் மூலம் அழித்த செயற்பாடுகளுக்குக் குறைந்தவை அல்ல என்பதை மனங் கொள்ள வேண்டும்.

"மலையக மக்கள் பேரினவாதிகளால் விசேடமான சூழ்நிலைகளில் அடக்கப்படுவதாலும் அவர்களின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சுவதன் மூலமும் மலையக மக்கள் தனி இனமாக அங்கீகரிக்கப்படுகின்றனர்" என தம்பையா.இ (1995) குறிப்பிடுவதும்

ஓர் இனத்தின் பூர்வீக நிலத்தை அழித்தால், அந்த இனம் பேசும் மொழியை அழித்தால், அந்த இனத்தின் வாழ்வாதாரமாக இருக்கின்ற பொருளாதாரத்தை அழித் தால், அந்த இனத்தை ஒன்றிணைக்கின்ற கலாசாரத்தை அழித்தால், அந்த இனம் அடையாளப்படுத்தும் மக்கள் கூட்டத்தை அழித்தால் அந்த இனம் அழியும்" தினகரன் வே. (2021) அழுத்திக் கூறுவதும் மலையக மக்களின் இருப்பை அழிப்பதற்கு மேற் கொள்ளப்படும் தொடர்ச்சி யானதும் திட்டமிடப்பட்டதுமான செயற்பாடுகளையே சுட்டி நிற்கின்றது.

"மலையகத்தமிழ்மக்களில்பெரும்பான்மையானவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்பதால் வர்க்க ரீதியாகவும் இன ரீதியாகவும் அடக்கப்படுகின்றார்கள். ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழ் பெருந்தோட்டங்களைத் தனியார் கம்பனிகள் பொறுப்பேற்றதன் பின்னர் மலையக மக்கள் மேலும் பின்னடைவுகளைச் சந்திக்கின்றனர்" (புதிய மலையகம் (2001)) எனக் குறிப்பிடுவது பெருந்தோட்டப் பொருளாதாரத்தை அழிப்பது மட்டுமன்றி தேசிய பொருளாதாரத்தை வீழ்ச்சியுறச் செய்கின்ற பாதகச் செயல் என்பதும் கவனிக்கத்தக்கது. பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துள்ள இலங்கையின் ஏற்றுமதி வருமான வீழ்ச்சிக்கு இத்தகைய 'அழிவு நடவடிக்கைளும்' காரணமாகின்றன.

மலையக மக்களின் வரலாறு என்பது தொடர்ச்சியாக இடம் பெற்ற போராட்டங்களின் விளைவே ஆகும். இந்தியாவிலிருந்து இடம் பெயரத் தொடங்கிய காலம் முதல் இன்றைய காணி உரிமைக்கான போராட்டம் வரை வெவ்வேறு வடிவங்களில் இப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கால்நடைப்பயணம், கப்பல் பயணம், மீண்டும் கால்நடைப்பயணம், அயராத உழைப்பு, இயற்கை இடர்களை எதிர் கொள்ளல், உயிர் வாழ போராடுதல், தொழிற்சங்க போராட்டங்கள், மக்கள் எழுச்சி, வேலை நிறுத்தங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், சிறை வாழ்க்கை, தூக்குத் தண்டனை, உயிர்த்தியாகங்கள் என நீளும் பட்டியலை அவதானித்தால் இவ்வுண்மையை எளிதில் புரிந்து கொள்ள முடியும். காலனித்துவ ஆட்சியாளர்களும், அதன் பின்னர் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களும் முதலாளியத்தின் பாதுகாவலர் களாகவும் அதனை வளர்த்தெடுக்கும் சேவகர்களாகவும் இருந்து வருகின்றனர். தம்மைத் தொடர்ந்து அதிகாரப் பீடத்தில் வைத்துக் கொள்ள பேரினவாதம் என்ற கருவியைக் காலத்துக்கேற்ப மாற்றியமைத்து பயன் படுத்துகின்றனர். இவை அனைத்தையும் போராட்டங்கள் மூலமாக எதிர்கொண்ட மலையக மக்களின் வரலாறு தனித்துவமானதாகும்..

தொழிலாளர் ஐக்கியம், மக்கள் சக்தி போராட்டம் போன்றனவற்றின் மூலமே மலையக மக்களின் உரிமைகள் அனைத்தும் வெற்றி கொள்ளப்பட்டன. அதனை அறிந்து கொண்ட முதலாளித்துவ ஆட்சி யாளர்கள் தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்களைப் பிறப்பித்ததோடு மனிதாபிமானமற்ற அடக்குமுறைளையும் முன்னெடுத்து வருகின்றனர். இவற்றின் மூலமாக மக்கள் ஒன்றிணைவதைத் தடுப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய மக்கள் விரோத செயற்பாடுகளுக்குப் பிற்போக்குத் தொழிற் சங்கங்களும் அனுசரணையாக இருக்கின்றன. இத்தகைய அரசியல் பொருளாதாரச் சூழலானது தொழிலாளர்கள் உதிரி பாட்டாளிகளாகச் சிதைவடைவதற்குக் காரணமாகி யுள்ளது. சந்தாமுட்டிகளை கையேந்தி நின்ற தொழிற் சங்கங்களும் அவற்றின் இயக்கமும் செயலற்றுப் போய் விட்ட நிலையில் தொழிலாளர் ஐக்கியம் மற்றும் போராட்டங்களும் வலுவிழந்து போனதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்களாகும் இந் நிலைமையை. மரியதாஸ். பி அவர்களும் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார் (2002)

"தோட்டத் தொழிலாளர்களின் போர்க்குணமிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தன்மையைச் சிதைக்கும் வண்ணம் பலவிதமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன"

சம்பளப்பிரச்சினைத் தீர்க்கப்படாமை, வேலை நாட்கள் குறைப்பு, அவசரகால சட்டங்கள், பொலிஸ் இராணுவ அடக்குமுறைகள், தனியார் கம்பனிகளின் கெடுபிடிகள், பிரிட்டிசார் உருவாக்கிய அதே நிருவாகக் கட்டமைப்பு தொடர்ந்து நிலைத்திருத்தல், தொழிற் சட்டங்களின் வலுவின்மை, பாரபட்சம் போன்றன இத்தகைய சிதைவுக்குக் காரணமாகின்றன.

மேலும் கல்வி நடைமுறைகளில் நிலவும் பாகுபாடு, தேசிய சுகாதாரத்தின் கீழ் மலையகப் பிரதேசங்கள் இணைக்கப்படாமை, போக்குவரத்துப் பாதைகள், பாலங்கள் முறையாக அமைக்கப்படாமை, 'மாடி லய' அமைப்பு, அரச நிருவாகம் பரவலாக்கப்படாமை, வேலை வாய்ப்பில் பாரபட்சம் போன்ற நிலைமைகளும் இம்மக்களுக்குப் பாதகமாகவே அமைகின்றமை நோக்கற்பாலது.

## இந்திய அடையாளம்

மலையக மக்களை, பேரினவாதிகளும் மற்றும் பெருமுதலாளிகளும் 'இந்திய' அடையாளத்துடன் தொடர்ந்து வைத்திருக்க முனைவதும் மலையக மக்களின் அடையாள இருப்பை அழித்து இல்லாமல் செய்வதனை நோக்காகக் கொண்டதேயாகும். இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளம், இந்திய நலன்களைப் பாதுகாப்பதன் மூலமாகத் தமது வர்த்தக இலாபத்தைப் பெருக்கிக் கொள்ள முனையும் முதலாளிகளின் தேவையாகவே உள்ளது. இது குறித்துக் கருத்துரைக்கும் லோறனஸ்.அ (2006) சிந்தி, மார்வாடிகள், நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள், கொழும்புச் செட்டிகள், பரத குலத்தினர், கைதராமணி, இந்திய 'பாய்'மார்கள் ஆகியோரையே இந்திய அடையாளம் குறித்து நிற்பதாகக் காட்டுகின்றார்.

1881 ஆம் ஆண்டு முதல் இடம் பெற்று வரும் தேசிய சனத்தொகை புள்ளி விபரங்களில் மலையக மக்கள் தொடர்ந்து இந்திய தமிழர் என்ற அடிப்படையிலேயே அடையாளப்படுத்தப்பட்டு வருவதைக் காண முடியும். 1953ம் ஆண்டு வரை இலங்கையின் சனத் தொகையில் இரண்டாவது நிலையிலிருந்த மலையக மக்கள் தற்போது மூன்றாவது நிலைக்குத் திட்டமிட்டு பின்தள்ளப்பட்டமைக்கு அடிப்படையான வரலாறு மற்றும் அரசியல் காரணங்கள் குறித்தும் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்திய அடைமொழியை நீக்கி மலையக மக்கள் என்ற அடையாளத்தை அரசியல் அடிப்படையில் வென்றெடுப்பது என்பது இலகுவான தல்ல. முப்பது வருட யுத்தத்தின் பின்னரும் கூட மாகாண சபை அதிகாரங்களை முழுமையாகப் பெற முடியாத நிலையிலிருக்கும் வடக்குக் கிழக்கு மக்களின் போராட்டங்களின் பலம் பலவீனங்களையும், அரசாங் கத்தின் பேரினவாத நிகழ்ச்சி நிரல் தொடர்பாகவும் கற்றுக் கொள்வதென்பது மலையக மக்களின் இனத்துவத்தை வென்றெடுப்பதற்கான வழிமுறைகளுக்கு அடிப்படையாக அமையும்.

இதை விட இந்தியாவின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் தமது பிற்போக்குத் தொழிற்சங்க செயற்பாடுகள் மற்றும் அரசியல் தலைமைத்துவம் போன்றனவற்றைப் பேணி வருகின்ற பாதகங்கள் குறித்தும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். உழைக்கும் மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் இத்தகைய அமைப்புகள், தனி நபர்கள் இந்திய தொடர்புகள் மூலமாகப் பலவிதமான நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். இரட்டைக் குடியுரிமை, சலுகைகள், சொத்துகளைச் சேர்த்தல், கல்வி வசதிகளைப் பெறுதல், வியாபாரம், பாதுகாப்பு, வரிச் சலுகைகள், உல்லாசம் போன்றன சில உதாரணங்கள் ஆகும்.

மேலும் மத அடிப்படைவாதத்தை மலையகப் பகுதிகளில் விதைப்பதற்குச் சில இந்திய அமைப்புகள் முயன்று வருகின்றன. அகன்ற பாரதம் மற்றும் இந்து சாம்ராச்சிய கனவுகளைத் தாமும் கண்டு மகிழுகின்ற 'புத்தி சீவிகள்' மலையக மக்கள் வென்றெடுத்த அடையாளங்களைக் கேள்விக்குட்படுத்தத் தொடங்கி யுள்ளனர். மக்களை நேசிக்கும் கலைஞர்களும் இலக்கியவாதிகளும் மலையகத்தின் தனித்துவத்தை மேலும் வளர்த்தெடுப்பதற்கும் சவால்களை எதிர் கொள்வதற்கும் தயாராதல் காலத்தின் தேவையாகும். சூனியத்தில் இருந்து தொடங்குதலன்றி மக்கள் வென்றெடுத்துள்ள சாதனைகளிலிருந்து மலையகம் என்ற கூட்டு உழைப்பின் திரட்சியை மேல் நோக்கி உயர்த்தவென தாபன அடிப்படையில் பலமடைதல் சிறந்த பலன்களை உருவாக்கும். மலையகத் தொழிலாளர் களின் தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்பதன் மூலமாகவே இதனை வெற்றி கொள்ள முடியும்.

மேற்கூறப்பட்ட வகையில் மலையக மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படைகளையும் பிரச்சினைகளையும் மக்கள் சார் பாக நின்று அணுகுவதும் ஆராய்வதும் அதனடிப் படையில் தீர்வுகளை நோக்கி மக்களை அணி திரட்டி முன் செல்வதும் அரசியல் செயற்பாட்டாளர்களின் பணியாக மட்டும் இருக்க முடியாது. அவை ஒவ் வொன்றினதும் பண்பாட்டு வளர்ச்சிக்கான செயற் பாடுகளை மலையகக் கலைஞர்களும் இலக்கியச் செயற்பாட்டாளர்களும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது அவசியமானதாகும். இவ்வரலாற்றுக் கடமைக் கென மக்கள்சார் அமைப்புகளின் இயங்கு தளமானது கோட்பாடு, நடை முறை, தாபனம், செயலுறுதி ஆகிய நான்கு தூண்களால் கட்டியெழுப்பப்படல் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தைத் தோற்றுவிக்கும்.

## மலையக மக்களுக்கான கலைகளும் இலக்கியமும்

மக்களுக்கான கலைகளையும் இலக்கியத்தையும் படைப்பவர்கள் சர்வதேசப் பிரசைகளாகவே கருதப் படுகின்றனர். இளையர்களின் ஆதர்சனமாக விளங்கும் ஏர்னெஸ்டி குவேரா குறிப்பிடுவது போல 'எங்கெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களின் இதயத் துடிப்பு கேட்கின்றதோ அங்கெல்லாம் என் கால்கள் பயணிக்கும்' எனக் குறிப்பிட்டது போல அவர்களது சிந்தனையும் செயலும் விசாலமானதாகவே காணப்படும். எனவே மக்கள்சார்ந்த கலைகளையும் இலக்கியத்தையும் அவை சார்ந்த கோட்பாட்டுப் பின்புலத்தையும் தெளிவாகக் கற்றுத் தேர்வதும் அவற்றை மலையக ஸ்தூல நிலைமைகளுக்கு ஏற்ப பொருத்தி பயன்படுத்துவதும் மிகவும் அவசியமான தாகும்.

"நீளும் ஆயிரம் விரல்களைச்
சினந்த புருவங்களுடன்
நிதானமாய் மறுத்து நிற்பேன்
இசைவான ஒரு எருது போல
தலை தாழ்த்தி குழந்தைகளுக்குப்
பணியாற்றுவேன்"
- லூசுன்

ஆயிரக்கணக்கான மக்கள் (எதிரிகள்) விரல்களை உன்னை நோக்கி நீட்டினால் அஞ்சாது உன் புருவத்தை நெரித்துக் கோபக்கனல் கொண்டு வெறித்துப் பார். ஆனால் இளைஞர்களுக்காக (பாட்டாளி வர்க்கமும் வெகுசனங்களும்) சம்மதத்தைத் தெரிவிக்கின்ற முறை யில் உனது தலையைத் தாழ்த்தி எருது போல பணிகள் செய்ய முன் வருவாயாக என்பதே இதன் அடிப்படைக் கருத்தாகும். அந்த வகையில் பெருமளவு உழைப்பாளர் களைக் கொண்டுள்ள மலையக மக்களுக்குச் சேவை செய்யும் ஆற்றலுடைய கலை இலக்கியமே மக்களுக் கானதாக அமைய முடியும். இத்தகைய முயற்சிகள் ஒரு வகையில் மக்கள் போராட்டமாகவே அமையும். அவை சமூகத்தில் புரையோடிப் போய் இருக்கின்ற பிரச்சினை களை வியாக்கியானம் செய்வதோடு மட்டுமல்லாமல் அவற்றை மாற்றியமைக்கின்ற கடமைகளையும் பொறுப்புகளையும் உள்ளடக்கியதாகவே அமைகின்றன.

இத்தகைய பணி குறித்துப் பேராசிரியர் க.கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமன்றி அதனை மாற்றியமைக்கும் பணியில் பங்கு பற்றுதலுடனான அப்பணி வெற்றி பெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாகத் துணிந்து ஏற்றுக் கொள்வதாகும். வரலாற்று அடிப்படையில் நோக்கும் போது தொழிலாளர் விவசாயிகள் வர்க்கத்திலிருந்து

**மத அடிப்படைவாதத்தை மலையகப் பகுதிகளில் விதைப்பதற்குச் சில இந்திய அமைப்புகள் முயன்று வருகின்றன. அகன்ற பாரதம் மற்றும் இந்து சாம்ராச்சிய கனவுகளைத் தாமும் கண்டு மகிழுகின்ற 'புத்தி சீவிகள் மலையக மக்கள் வென்றெடுத்த அடையாளங்களைக் கேள்விக்குட்படுத்தத் தொடங்கியுள்ளனர். மக்களை நேசிக்கும் கலைஞர்களும் இலக்கியவாதிகளும் மலையகத்தின் தனித்துவத்தை மேலும் வளர்த்தெடுப்பதற்கும் சவால்களை எதிர் கொள்வதற்கும் தயாராதல் காலத்தின் தேவையாகும்.**

தோன்றும் கலை இலக்கியக் கோட்பாட்டின் காத்திரமான குரல் இது என்பது வெளிப்படை. எதிர் காலத்தை மாற்றியமைக்கும் பெரும் பணிக்கு அவர்கள் தலைமை தாங்குபவர்கள். ஆதலின் அக்குரல் வலிமையுடையது"

இதுவரை தத்துவஞானிகள் உலகை பல்வேறு வகைகளில் வியாக்கியானம் செய்துள்ளார்கள் ஆனால் நமது கடமை அதனை மாற்றியமைப்பதாகும். என்ற கார்ள் மாக்சின் மகத்தான கருத்தின்படி மக்களுக்கான கலை மற்றும் இலக்கியங்களின் பணியானது சமூக மாற்றங்களை உருவாக்குதலை இலட்சியமாகக் கொண்டி ருக்க வேண்டும். மேலும் இத்தகைய மாற்றங்களைச் சாத்தியமாக்குவதற்குப் பங்குபற்றல் அவசியமானதாகும். அதை விட இத்தகைய முயற்சிகளுக்கு அவர்கள் தலைமை கொடுத்தலும் வேண்டும். இதன் அடிப்படையில் நோக்கும் போது கலை இலக்கியவாதிகளின் பணி கடுமையானது என்பது தெளிவாகின்றது. ஆனால் அது மக்களின் நன்றிக்குரியதாகவும் இன்பமூட்டுவதாகவும் அமைகின்றது. கடுமையான மக்கள் பணி என்பது மகிழ்வுக்குரியது என்பதை செக்கோஸ்லோவாக்கிய பொதுவுடைமை செயற்பாட்டாளர் ஜூலியஸ் ஃபியூசிக் கின் தூக்கிலிடப்படுவதற்கு முன்னர் இறுதியாக குறிப்பிட்ட மிகவும் நம்பிக்கைக்குரிய வார்த்தைகளில் இருந்து விளங்கிக் கொள்ளலாம்.

"நான் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தேன், மகிழ்ச்சிக்காகச் சாகின்றேன். எனது சமாதியில் துக்க வேதனையை நிறுத்துவது கொடுமையாகும். சுதந்திரத்துக்கான இறுதிப் போரில் ஒரு வீரனாய் இருப்பது எவ்வளவு மகத்தான பாக்கியம்" வஞ்சகம், துரோகம், சுயநலம் போன்றன ஒரு புறமாக இருந்து தாக்கும்போது மறுபுறமாக உறுதியாக நின்று அவற்றைத் தாங்கிக் கொள்ளும் சுயநலமில்லாத அர்ப்பணிப்பு மிக்க வாழ்க்கையே மக்கள்சார்ந்த கலைஞர்களுக்கும் இலக்கியவாதிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அவசியமாகின்றது.

"புற உலகை வளர்க்கும் விஞ்ஞானி உதவுவதுபோல, **வர்க்கப் போராட்டத்தை முன் வைத்து அக உணர்வை வளர்க்க முன்வரும் கலைஞர்களே** விஞ்ஞானிகளின் உயர் நிலையை எட்டிப்பிடிப்பவர்களாக இருப்பர்" என கணேசலிங்கன். செ (1995) குறிப்பிடுவதை ஆழ்ந்து சிந்தித்தால் படைப்பாளிகளுக்குள்ள பொறுப்பினை விளங்கிக் கொள்ள முடியும். கலை பற்றிய யதார்த்த அறிவினை அடைவதற்கு, கலைப் படைப்பின் ஆழத்தை அளப்பதற்கு, கலை ஏற்படுத்தும் அழகியல் தாக்கத்தின் அமைப்பு முறையினை அறிவதற்கு அதிக காலம் செலவிட்டு, மாக்சிய அடிப்படைக் கோட் பாடுகளைக் கற்பதில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை இவர் வலியுறுத்திக் கூறுவதிலிருந்து சமூக விஞ்ஞான அறிவின் அவசியத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

"மக்கள் இலக்கியம் என்பதை மக்களின் நன்மைக்கான இலக்கியம், மக்களின் சார்பான இலக்கியம், மக்களைச் சென்றடையும் இலக்கியம், மக்களை விழிப்பூட்டும் இலக்கியம், மக்களைக் கிளர்ந்தெழுந்து போராடத் தூண்டும் இலக்கியம், மக்களால் உருவாக்கப்படும் இலக்கியம், மக்கள் நலனுக்கான இலக்கியம் என்று பலவாறாக நோக்கப்படும். இவற்றுள் அதி முக்கியமானது கடைசியாகக் குறிப்பிட்ட பண்பாகும். நாம் அதனை வந்தடைவதாயின் மக்களின் ஆளுமை முதன்மைப்படுத்தப்பட வேண்டும். இரண்டு சூழ்நிலைகளில் அதற்கான வாய்ப்பை நாம் பெற இடமுண்டு. ஒன்று உழைக்கும் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் சூழல். மற்றையது வெகுசனப் போராட்டம் ஒன்று உருவாகி வலுப்பெறும் சூழல் இவற்றுக்கு அத்திவாரம் இடுவதையே இலக்கியப் பணிகள் செய்ய முடியும்" என்ற சிவசேகரம். சி (2000) அவர்கள் குறிப்பிட்டுள்ளமையை அடிப்படையாகக் கொள்ள முடியும்.

மலையக மக்களுக்கான கலை இலக்கியச் செயற்பாடுகளின் அடிப்படை சமூக விஞ்ஞான அறிவாகும். இது மாக்சிய தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சமூகக் கலைக் கோட்பாடுகள், விஞ்ஞானம் போன்றவற்றின் தொகுதியாக அமையும். இத்தகைய சமூக விஞ்ஞானக் கற்கையானது, விடயங்களை நுணுகி ஆய்வு செய்வதற்கும், தெளிவான இலக்குகளைக் கொண்ட செயற்பாடுளை மிகச் சரியாகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கும் உதவியாக அமையும். தனித்துவமான பண்புகளைக் கொண்ட மலையக மக்களின் வரலாறை மீளவும் மக்களிடம் கொண்டு செல்லும் பணியைக் கலை இலக்கியச் செயற்பாட்டாளர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றுதல் பிரதான கடமையாக உள்ளது.

"தனது சமூக வரலாறை மறந்த இனம் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. மானுட வரலாற்றையும் உலக வரலாறையும் ஆழமாகக் கற்கும் அதே வேளையில் இலங்கையின் வரலாற்றையும் அவற்றோடு இணைந்த வகையில் மலையக மக்களின் வரலாற்றையும் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் அணுகி கற்பது அவசியமாகும்" இராஜேந்திரன். சிவ. (2021) இவ்வாறு குறிப்பிடுவதற்குரிய காரணம் இம்மக்களின் வரலாறு மேற் குறிப்பிடப்பட்ட வரலாற்று அம்சங்களோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருத்தலே ஆகும். தெளிவான அறிவின் மூலம் பெறப்படும் விளக்கமே சரியான செயலுக்கும் வழி காட்டும் என்பது சமூக விஞ்ஞானிகளின் முடிவாகும். கலை இலக்கியம் மூலமாக புது உலகை சிருஸ்டிக்க முனையும் செயற்பாட்டாளர்கள் முதலாளித்துவ கல்வியில் தங்கியிருக்க முடியாது. மேட்டுக்குடி சிந்தனையையும், சுய நலத்தையும், நம்பிக்கையீனத்தையும், மன நோய்களையும் விளைவிக்கும் இத்தகைய கல்வி தனிமனிதனுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் பெருங் கேட்டினையே விளைவித்துள்ளது.

இலங்கையில் வழங்கப்படும் பொதுக் கல்வியின் விளைவுகளாக வேலையின்மை, பொருத்தமற்ற தொழில், (கீழ் உழைப்பு) விரக்தி, இனக் குரோதம், சோம்பியிருத்தல், இடப்பெயர்வு, வன்முறைகள், போதைப் பொருள் பாவனை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன் முறைகள், தற்கொலைகள் ஆகியவற்றையே பெற்றுள் ளோம். இத்தகைய சமூகக் குற்றங்கள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. எவ்வித விளக்க முமின்றி வெறுமனே நெட்டுரு செய்யும் பண்பினைக் கொண்டதும் போட்டி முறை, பரீட்சை நோக்கு போன்றனவற்றைக் குணமாகக் கொண்டுள்ள பாடசாலை மற்றும் பல் கலைக்கழகக் கல்வியானது மா ஓ குறிப்பிடுவது போல 'திருந்தாத படிப்பாளிகளையே' உருவாக்கியுள்ளது.

மலையகத்தின் கல்வி பற்றிக் குறிப்பிடும் சி. சிவசேகரத்தின் (2021) கருத்துகள் இங்கு மனங் கொள்ளத் தக்கனவாகும்.

"மலையகக் கல்வியில் பெரும்பாலோர் சுய முன் னேற்றத்தை விட எதையும் கருதுவதாகத் தெரியவில்லை. பிற தேசிய இனங்களை விட அதிக மாகக் கல்விமான்களின் சமூக அக்கறை வேண்டும். அதிகமாக ஒடுக்கப்பட்ட சமூகமான மலையகத் தமிழரிடையே கல்விமான்கள் சமூக முன்னேற்றத்தில் காட்டும் அக்கறை பிற தேசிய இனக் கல்விமான்களின் சமூக ஆர்வத்திலும் கடுமையாகப் பின் தங்கியுள்ளது. தமது பெற்றோர் தொழிலாளர் எனச் சொல்லக் கூசு மளவுக்குச் சிலரைக் கல்வி உருமாற்றியுள்ளதென்றால், அது நல்ல கல்வியல்ல. மலையகக் கல்விமான்களின் மேனிலையாக்க ஆவலைக் காணும் இளந் தலை முறையினர் பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது எதிர்காலம் பெருநகரத்துக்குத் தப்பியோடலிலையே உள்ளதாக மயங்குகின்றனர்." திறந்த பொருளாதாரத்தின் இயங்கு நிலையும், விளம்பரங்களும் சிந்தனையை நாசம் செய்யும் ஊடகங்களும், நுகர்வு கலாசார மோகமும் மேலோங்கியுள்ள இன்றைய சூழலில் போட்டி முறை யில் மேல்நிலையாக்கத்துக்கான முனைப்புகள் உந்தி தள்ளுவதாலும் பதவிகள் மற்றும் சலுகைகளுக்காகத் தன்நிலை தன்மானம் போன்றவற்றைத் தாழ்த்திக் கொள்ளும் போக்கு அதிகரிப்பதாலும் சமூகச் செயற்பாடுகளுக்கு 'நேரமில்லை' என்ற பாதக நிலை உருவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பாதக நிலைமைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் போராளியும் மார்க்சிய சிந்தனையாளரு மாகிய அந்தோனியோ கிராம்சி கல்விக்கான மாற்று வழி முறைகளின் அவசியத்தைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

"வர்க்கப் போராட்டத்தின் மூலம் கௌரவ உணர்வையும் சுதந்திர உணர்வினையும் புதிதாகப் பெற்றுள்ள தொழிலாளிகள் ஏற்கனவே இருக்கிறார்கள் அல்லவா? கவிஞர்களின் பாடல்களைக் கேட்கும் போது, ஓவியர்கள் சிந்தனையாளர்கள் பெயர்களைக் கேட்கும் போதும் அவர்கள் ஆதங்கத்தோடு கேட்கி றார்கள் 'எங்களுக்கும் கூட ஏன் இந்த விசயங்கள் சொல்லித்தரப்படவில்லை' ஆனால் அவர்கள் தங்க ளுக்குத் தாங்களே ஆறுதலும் சொல்லிக் கொள்கிறார்கள். கடந்த பத்தாண்டுகளாகவும் தற்போதும் அமைக்கப் பட்டுள்ள பள்ளிகள் ஆளும் வர்க்கங்களால் அமைக்கப் பட்டதால் அவை எதையுமே சொல்லிக் கொடுப்பதில்லை. நமது குறிக்கோள் இந்தக் கல்வித் தேவைகளை வேறு விதமான வழிமுறைகளைக் கொண்டு நிறைவு செய்வது தான் தம்மை மேம்படுத்திக் கொள்வதில் பொதுவான விருப்பமுடைய மனிதர்களுக்கிடையில் தடையற்ற, தன்னியல்பான உறவுகளை ஏற்படுத்துவதுதான் அந்த வழிமுறைகள்" கீதா.வ ராஜதுரை எஸ்.வி (2017) இத்தகைய உறவு நிலையை ஏற்படுத்துவதற்குக் கலைஞர்களும் இலக்கிய வாதிகளும் தனது உயிருள்ளவரை கடுமையாக உழைக்க வேண்டும் என்பது, மக்கள் சீனத்தைப் படைப்பதற்குத் தலைமை வகித்த மா ஓ சேதுங் அவர்களின் கருத்தாக அமைகின்றது. இலக்கியவாதிகளும் கலைஞர்களும் தமது சக்தி அனைத்தையும் முதலீடாக இட வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பாகும்.

"உங்கள் இலட்சியத்தை அடைவதற்காக உங்கள் சக்தி அனைத்தையும் செலவிடுங்கள். இந்த வேலையைச் செய்து முடிக்க எவ்வளவு உங்களால் முடியுமோ அந்த அளவுக்குப் பாடுபடுங்கள். உங்கள் உயிர் உடலில் இருக்கும் வரை வேலையை நிறுத்தக் கூடாது" மா ஓ சேதுங் (1995)

மேலும் உழைக்கும் மக்களின் பண்பாட்டு விடுதலை பற்றிக் கருத்துரைத்த அந்தனியோ கிராம்சி மக்களின் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு முன்னர் தனது மேலாண்மையை நிறுவ பாடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். புதிய கல்வி அமைப்புகளை உருவாக்குவது, ஆர்வமும் நம்பிக்கையுமுள்ள இளைஞர்களை அவற்றில் பயிற்றுவிப்பது ஆகியவற்றுக்கு அவர் அதிக முக்கியத்துவமளித்தார். மக்கள் விடுதலைக்கான கல்வி முறை மானுட அறிவின் சகல அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் அவசியம் என்பதை அவர் எடுத்துக் காட்டினார்.

"ஜீவ கலைகளை எப்படி சிருஸ்டிப்பது என்பது பற்றி எழுத்தாளர்களும், கலைஞர்களும் அதிகம் கற்றுத் தெரிய வேண்டியது உண்மைதான். ஆனால் மாக்சிசம் லெனினிசம் என்பது ஒரு விஞ்ஞானம் அதை ஒவ்வொரு புரட்சிவாதியும் கற்றாக வேண்டும். அதற்கு எழுத்தாளர்களும் கலைஞர்களும் விதி விலக்கல்ல. எழுத்தாளர்களும் கலைஞர்களும் நமது சமூகத்தைப் பற்றியும் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். சமூகத்தை ஆக்கும் பல வர்க்கங்கள் பற்றியும் அவைகளின் நிலைகள் போக்குகள் மனோதத்துவங்கள் பற்றியும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சகல அம்சங்களையும் அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டால்தான் அவர்கள் நமது இலக்கியத்திற்கும் கலைக்கும் ஒரு சரியான உருவத்தையும் கருத்தையும் கொடுக்க முடியும்" மா ஓ சேதுங் (1995)

நவ காலனித்துவமும், திறந்த பொருளாதாரமும் சமூக வர்க்கங்களைப் பல கூறுகளாக மாற்றியமைத் துள்ளன. மலையக சமூகத்திலும் இத்தகைய நிலை யினைக் காணமுடியும். தோட்டத் தொழிற்றுறையில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதோடு சுயதொழில் செய்பவர்கள், சிறு வியாபாரத்தில் ஈடுபடுவோர், கடைச் சிப்பந்திகள், முச்சக்கர வாகனம் செலுத்துவோர், சாரதிகள், நடத்துநர்கள், ஆடைத் தொழிற்சாலைகளில் பணி புரிவோர், கட்டுமானத் தொழிலில் ஈடுபடுவோர், வெளிநாட்டுப் பணியாளர்கள் போன்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அடிப்படையில் இவர்களை உழைக்கும் மக்கள் என்ற வகையில் ஒன்றிணைக்க வேண்டியது கலைஞர்களினதும் இலக்கிய வாதிகளினதும் பிரதான கடமையாகக் குறிப்பிடலாம். இவர்களது உதிரி தன்மையானது இப்பணியை முன்னெடுப்பதற்குச் சவாலாக அமைந் துள்ளது. எனினும் ஐக்கியத்தின் அவசியத்தை, கலைகளின் மூலமாகவும் மக்கள் சார்ந்த இலக்கியப் படைப்பின் மூலமும், இவர்களுடன் பங்கேற்றுச் செயற்படுவதன் மூலமும் வெற்றிகளைக் காண முடியும்.

இதைவிடக் கல்வித் துறையில் தொழில் செய்பவர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகள், வைத்தியத்துறையில் பணியாற்றுவோர், தோட்டத்து நிருவாகத்தில் தொழில் செய்வோர், அரச சார்பற்ற நிறுவனங்களில் இணைந்திருப்போர் போன்ற வர்களிடம் மத்தியதர வர்க்கத்துக்குரிய குணாம்சங்களை அவதானிக்கலாம். இவர்களிடமும் மேல், கீழ் என்ற நுண்ணிய வேறுபாடுகளைக் காணமுடியும். பொதுக் கல்வியாலும் நுகர்வு கலாசாரத்தாலும் வந்து சேரும் மேனிலையாக்க எண்ணங்கள் சமூகப்பணிகளிலிருந்து இவர்களைத் தூரமாக விலகிச் செல்ல வைத்துள்ளன. எனினும் மேலே சென்று முதலாளி ஆக முடியாமலும் கீழே விழுந்து தொழிலாளி வர்க்க நிலையை ஏற்க முடியாமலும் ஊசலாடும் இவர்களைச் சமூக விடுதலை பணியில் ஈடுபடச் செய்வது கலை இலக்கியவாதிகளின் இன்னுமொரு கடமையாக உள்ளது. அரசியலிலும் கலை இலக்கியத் தளத்திலும் கல்விமான்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்பதையும், அவர்கள் மூலமாகவே மாற்றுக் கல்வியினையும் புதிய பண்பாட்டுக்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளதை சமூக விஞ்ஞானிகள் வலியுறுத்து கின்றனர்.

மலையக மக்களின் வர்க்கக் கட்டமைப்பு மற்றும் வர்க்க உணர்வுகள் குறித்த ஆய்வுகள், தேடல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக யாருக்கு இலக்கியம் படைக்கின்றோம்? கலைத்துவ ஆக்கங்கள் எதற்காக? எவ்வாறு அவற்றை முன்னெடுக்க வேண்டும்? எத்தகைய இலக்குகள் எய்தப்பட வேண் டும்? யாரை இணைத்துச் செயலுக்கான களங்களை உருவாக்க வேண்டும்? இத்தகைய அர்ப்பணிப்பு மிக்க பணிகளை ஏன் மேற்கொள்ள வேண்டும்? போன்ற வினாக்களுக்குச் சமூக விஞ்ஞான அடிப்படையிலான விளக்கங்களைப் பெற முடியாதுள்ளது. தற்காலத்தில் இயங்கிவரும் மலையக கலை இலக்கியச் செயற் பாட்டாளர்கள் மீதான விமர்சனங்களும் இவ்வினாக்களை அடிப்படையாகக் கொண்டு இடம் பெறுவதும் சுய விமர்சனத்துக்குத் தம்மை உள்ளாக்கிக் கொள்வதும் நம்பிக்கைமிகு எதிர்காலத்துக்கான அடிப்படைகளாக உள்ளன.

## கலை இலக்கிய தாபனங்களின் அவசியம்

நேர்த்தியாக ஒழுங்கமைப்பட்ட அமைப்பின்றி மக்கள் சார்ந்த கலை இலக்கியப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாது. மக்களை முன்னிலைப்படுத்துகின்ற, மிகச் சரியான இலக்கினை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய அமைப்புகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். உழைக்கும் மக்களின் அரசியல், பொருளாதாரம், சமூகச் செயற் பாடுகள், கலாசாரம் ஆகியவற்றில் உயர்ந்த பண் பாட்டினை விருத்தி செய்வதற்கான தத்துவம், கோட்பாடுகள் ஆகியவற்றால் இத்தகைய அமைப்புகள் பலப்படுத்தப்பட்டிருத்தல் அவசியமாகும். மாக்சிய ஒளியே இதற்குப் பொருத்தமானது என்பதை மக்கள் கலை இலக்கியச் செயற்பாட்டாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். 'கலை கலைக்காகவல்ல அது மக்க ளுக்காக' என்பது அதன் அடிப்படையாகும். கொள்கைப் பிடிப்பு, உறுதியான மனநிலை, தோழமை உறவு, சொல் லுக்கும் செயலுக்குமான தொடர்பு, கூட்டு உழைப்பு, முன்னுதாரண நடவடிக்கைகள், ஏனையோரின் கருத்து களுக்கு மதிப்பளித்தல், பொது முடிவை ஏற்றுக் கொள் ளல், முன்நிற்றல் போன்ற உயர்ந்த ஒழுக்கப் பண்புகள், முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகளினாலேயே விருத்தி செய்து கொள்ள முடியும்.

இத்தகைய கொள்கையின் அடிப்படையில் ஒன்றி ணையும் செயற்பாட்டாளர்கள் கூட்டான முடிவுகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வதோடு, பொறுப்புடன் இயங்கும் வல்லமையையும் பெற்றிருத்தல் முக்கியமானதாகும். மக்கள் கலை இலக்கியக் கோட்பாடு களையும் ஆக்கங்களையும் கூட்டாக இருந்து படிப்ப தோடு, அமைப்பின் இணைந்து செயலாற்றும் கலை இலக்கியவாதிகளின் தரத்தினையும் தொகையினையும் உறுதி செய்து கொள்ளத் தொடர்ந்து முயற்சி செய்யும் முன்னணி செயல் வீரர்களாகவும், தலைவர்களாகவும் செயற்பட, அவ்வமைப்பு அர்ப்பணிப்புடன் செயலாற் றுவதும் முக்கியமானதாகும். முரண்பாடுகளை மிகச் சரியாகக் கையாளும் திறன், விமர்சன ஆற்றல்கள் போன்றனவும் வலுவூட்டும் அம்சங்களாகும். மேற்படி பணிகளில் ஈடுபட்டிருக்கும் அமைப்புகள் மக்கள் சார்ந்த பணிக்கான பொது வேலைத்திட்டங்களின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயலாற்ற முடியும்.

மலையகத்தில் ஒரு சில அமைப்புகள் மேற்படி முயற்சிகளில் ஈடுபடுகின்றன. எனினும் பெரும்பாலான அமைப்புகளிடம் தெளிவான கலை இலக்கியக் கொள்கையினை வெளிப்படுத்தியமைக்குப் போதுமான சான்றுகள் இல்லை. "நாங்கள் எப்போதும் நடு நிலை" என்று கூறி மக்கள் விரோதிகளுக்குச் சாமரம் வீசி மகிழ்வதும், விருதுகள், பொன்னாடைகள் வழங்கும் அமைப்பு அல்லது நபர்களின் சுவைக்காக இயங்குவதும் அத்தகையவர்களின் வாடிக்கையாக உள்ளது. "இசங்க ளுக்கு நாங்கள் உடன்படவில்லை. இசங்கள் எங்களுக்குப் பிடிக்காது" என்று ஒரு குழு கூறுவதும் கூட ஒரு 'இசம்' தான். அது கலை இலக்கியத்தின் விஞ்ஞான அடிப்படைகளை நிராகரிப்பதும், மனித குலம் படைத்தளித்த அறிவுக் கருவூலங்களை மறுதலிப்பதுமாக அமையும் 'மனநோயிசம்' என்பதாகச் சுட்டலாம். "இலக்கியத்தில் அரசியல் கலப்பு இருக்கக் கூடாது" என ஒதுங்குவோர் அரசின் தோற்றம் அரச யந்திரம், அரசாங்கம் குறித்துத் தெரிந்து கொள்வதற்கு விருப்பமில்லாதவர்களாக உள்ளனர். அவர்களது கருத்து 'அடக்கும் அதிகார அரசியலின்' சார்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது என்பதை பலரும் அறிவர். உணர்விலும், இரசனையிலும், சிந்தனையிலும், செயலுறுதியிலும், கலைப் படைப்புகளிலும், அவற்றின் பயன்பாட்டிலும் அரசியல் இருக்கின்றது என்பதை மலையக சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களே இவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். "பொது மக்களுக்காகவல்ல, நாங்கள் படித்தவர்களுக்காகவே எழுதுகின்றோம். உள்ளடக்க மல்ல உருவமே முக்கியமானது" என வாதிடுவோரின் செயற்பாடுகளும் வரையறைக்குள்ளாகியுள்ளது. காரணம் 'படித்தவர்' எதை படித்தார்கள் என்பதும் அவர்களுக்குக் கலை இலக்கியத்தை இரசிக்க, கற்றுக் கொள்ள நேரம் இருக்கின்றதா? என்பதுவும் சிந்திக்கப்பட வேண்டிய வினாக்களாக உள்ளன. "அமைப்பு எல்லாம் தேவை யில்லை. அதற்கு யாரும் இணங்கி வர மாட்டார்கள்" எனக் கூறி ஒதுங்கி நிற்போர் பின்நவீனத்துவ நோய்களுக்கு ஆளாகியுள்ளமையையும் காண முடியும். தனித் தீவாகவும், ஒதுங்கிய நிலையிலும் விரக்தி மேலோங்கி இருக்கின்ற பாதக நிலைமையிலும் துன்பப் படுவதைக் காணலாம். எல்லோரையும் எப் பொழுதும் பாதகமாக விமர்சிப்பது இவர்களைப் பிடித்துள்ள இன்னொரு நோயாகவும் காட்ட முடியும். இதைவிட பல்கலைக்கழகங்களில் இருக்கும் போது தாம் ஒரு மாக்சியவாதியாக, இடதுசாரியாக இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக 'சிவப்புப் புத்தகங்கள்' சிலவற்றைக் கைகளில் வைத்துக் கொண்டு திரிந்தவர்கள், பின்னர் அவற்றையெல்லாம் தூரமாக வைத்துவிட்டு தனது சுய நலத்துக்காக மலையக மக்களின் இன்றைய நிலைக்கு காரணமான சமூக விரோதிகளின் காலடிகளில் கிடப்பதைக் காண முடியும். அது மட்டுமன்றி 'நாங்களும் ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட்டுக்கள் தான்' எனப் பெருமை பேசிக் கொள்வதையும் காண்கிறோம். மக்கள் கலை இலக்கியம் மற்றும் இயங்கும் அமைப்புகள் குறித்து மிகவும் தாழ்நிலையான கருத்துக்களைப் பரப்புவது இத்தகையவர்களது வழக்கமாக இருப்பதைக் காண முடியும். 'எதுவுமே சரி வராது' என்பது இவர்களது முடிவாகும். அறிவுத் தேடலின் குறைபாடும், இலட்சிய மற்ற போக்கும், சுயநலமும் இவர்களை இந்நிலைக்கு ஆளாக்கியுள்ளமை வருந்தத்தக்கதேயாகும்.

"முன்னாள் மாக்சியவாதிகள் எனவும், இன்னமும் கொஞ்சம் மாக்சியவாதிதான் எனவும் தமது கடந்தகாலத் தவறுகளை மூடி மறைத்து மற்றையவர்கள் மீதும், மாக்சிய அணுகு முறையின் மீதும் பழி போடும் பிழைப்பு முயற்சிகளும் தொடர்கின்றன. இவர்களால் தூண்டப்படும் குழப்பகரமான சிந்தனைக்கும் பின் நவீனத்துவம் உட்பட மாக்சிய விரோத அணுகு முறைகளும் இன்றைய சூழலில் நல்ல சக்திகளை மனந்தளரச் செய்வதில் மும்முரமாக நிற்கின்றன" என்ற சி. சிவசேகரத்தின் கருத்து மலையக நிலைமைகளுக்கும் பெரிதும் பொருந் துவதைக் காணலாம்.

மேற்குறிப்பிட்ட பலவீனங்களையும், பிரச்சினை களையும் அவற்றுக்கு அடிப்படையான காரணங்களை யும் தெளிவாகப் புரிந்து கொள்வதும் அவற்றுக் கெதிரான மிகச் சரியான நிலைப்பாட்டை தாபன அடிப் படையில் தீர்மானித்துத் தெளிவுப்படுத்திக் கொள்வதும் மிகவும் அவசியமான பணியாக உள்ளது. முரண் பாடுகளைச் சரியாகக் கையாள்வது எப்படி? என்பது குறித்த சமூக விஞ்ஞான வழிகாட்டல்களைப் பின்பற்றுவது பயனுள்ளதாக அமையும்.

மேலும் கார்த்திகேசு சிவத்தம்பி (1993) அவர்கள், மலையக மக்கள் தங்களைத் தாங்களே ஆய்வுக் குரியவர்களாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் முயற்சி கள் எந்தளவு வெற்றி பெற்றுள்ளன? என எழுப்பும் வினா கவனத்தில் கொள்ளத்தக்கது. உணர்ச்சி மையங் களை பற்றி சிந்திக்கும் கலை இலக்கியச் செயற் பாட்டாளர்கள், யதார்த்த அறிவு நோக்கி தங்களது கவனத்தை விரிவுபடுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் அவை மக்களின் அரசியல் பிரக்ஞை, கல்வி நிலை, பண்பாட்டுப் பெறுமானங்கள் போன்ற வற்றை ஊக்குவிக்க வேண்டும் எனக் குறிப்பிடுவது இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்களாகும்.

உழைக்கும் மக்கள் சார்ந்து தொடர்ச்சியாக இடம் பெறும் அரசியல், சமூகப் போராட்டங்கள் சிறந்த கலை இலக்கியங்களுக்குக் காரணமாகின்றனவா? அல்லது மக்கள் கலை இலக்கியங்கள் போராட்டங்களுக்கு வழி வகுக்கின்றனவா? என்ற விவாதத்தை மலையக மக்கள் குறித்தும் பொருத்திப் பார்ப்பது சிறந்த செயற்பாடுகளுக்கு வழி வகுக்கும். சமூக இயக்கமே தனி மனிதனின் சிந்தனைக்குக் காரணமாகின்றது என்ற அடிப்படையில், மலையக மக்களின் போராட்டங்களில் தலைமைப் பாத்திரம் வழங்குவதோடு அதன் இயக்கத்துக்கு வழி காட்டுகின்ற ஆளுமையைக் கலை இலக்கியவாதிகள் கொண்டிருப்பது அவசியமாகின்றது.

"புரட்சிக்குப் புரட்சிவாதிகளே தேவை. புரட்சி இலக்கியங்கள் தாமதித்தும் வரலாம். என்னைப் பொறுத்த மட்டில் புரட்சிதான் இலக்கியத்தில் பாரிய பங்கினை வகிக்க முடியும். ....புரட்சி ஒன்றும் வினோதமானதல்ல. சகல சமூக மாற்றங்களும் புரட்சியிலிருந்தே பிறக் கின்றன..... மாபெரும் புரட்சிக்கு முன்னர் இலக்கியங்கள் சமூக நிலைமைகள் மீதான அவலத்தையும் அதிருப்தி யையும் வெளிப்படுத்தி வேதனைக்குரல் எழுப்புகின்றன. இத்தகைய படைப்புகள் உலகம் முழுவதும் நிறைய இருக்கின்றன. இவற்றால் புரட்சிக்கு எவ்வித நன்மையு மில்லை. வெறுமனே முறையீடுகளோ புலம்பலோ பயனற்றவை. உங்களை அடக்கி நசுக்குபவன் இவற்றைப் பொருட்படுத்தப்போவதில்லை. புலம்பல் இலக்கியங்கள் ஒருவனுடைய முனகலையும் விரக்தி யையும் வெளிப் படுத்தும் அதே வேளை அடக்கி நசுக்குபவர்களுக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பையும் வழங்கி விடுகின்றன.... புரட்சிக்கு சற்று முந்திய இலக்கியங்கள் மக்களின் கோபாவேசத்தையும் மாற்றத்தை வேண்டி நிற்கும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன.". என்ற லூசுன் (1927) அவர்களின் கருத்து மலையக சமூகத்தில் ஏற்பட வேண்டிய மாற்றங்களின் திசை நெறியையும் கலை இலக்கிய வாதிகளின் தலையாய கடமைகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட தத்துவக் கருத்துகள், வழிகாட்டல்கள், அனுபவத் தொகுப்புகள் யாவும்; மக்கள் கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கு அடிப் படையானவையாகக் காணப்படுகின்றன. தெளிவான அறிவு மற்றும் தேடல்கள். கலை இலக்கியச் செயற் பாடுகளுக்கான உந்துதல்களாக அமைகின்றன. இத் தகைய பொறுப்புகளைச் சமூக அக்கறையுடன் முன்னெடுத்துச் செல்லும் போது எழுகின்ற நட்புசார்ந்த முரண்பாடுகளைக் களைந்தெறிந்து பொது இணக்கப் பாட்டுடன் உழைக்கும் மக்களுக்கான கலை இலக்கியப் பணிகளை மேலும் வீரியமுடன் முன்னெடுத்துச் செல்வது முக்கியமாகின்றது. இந்த வரலாற்றுக் கடமைக்குத் தெளிவானதும், சமூக விஞ்ஞான அடிப்படைகளைக் கொண்டதுமான இலக்குகளையும், செயற்பாட்டு முறைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுகின்ற அமைப்புகளும் அவசியமாகின்றன. உறுதியான சாரங்கள் இன்றிக் கட்டிடங்களை மேலெழுப்ப முடியாது என்பதை இப்பணியில் ஈடுபடுவோர் அனுபவமாக உணரலாம்.

## முடிவுரை

மலையக மக்கள் எனப்படுவோர் தனித்துவமான தேசிய இனமாக வாழ்கின்றனர். இவர்களது இனத்துவ அடையாளங்களை அழித்தொழிப்பதற்குத் திட்டமிடப் பட்ட சதிகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. வர்க்க அடிப்படையில் மிகவும் மோசமாகச் சுரண்டப்படும் இம்மக்களின் வரலாறு போராட்டங்களின் தொகுப்பாக உள்ளது. அரசியல், பொருளாதாரம், சமூக இயக்கம், கலாசாரம் போன்ற அனைத்து அம்சங்களிலும் புதிய பண்பாட்டுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல் மிகவும் முக்கியமானதாக உணரப்படுகின்றது. இந்த வரலாற்றுக் கடமைக்காக மக்கள் கலை இலக்கிய அமைப்புகள் சமூக விஞ்ஞான தத்துவ ஒளியுடன் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதனை சாதிப்பதென்பது இலகுவானதல்ல. நிலமானிய சமூகத்துக்குரிய பண்புகள், முதலாளித்துவ சமூகத்தின் விளைவுகள் போன்றன எதிர் நிலையில் நின்று மக்களுக்கும், கலை இலக்கியப் படைப்பாளிகளுக்கும், அமைப்பின் அடிப்படையில் செயற்படுபவர்களுக்கும் பல்வேறு சவால்களை முன் தள்ளுகின்றன. இவற்றை வெற்றி கொள்வதற்குத் தத்துவ ஒளியும், அதனடிப்படையிலான நடைமுறைகளும் பெரிதும் உதவும் என்பது வரலாற்றுப் படிப்பினையாகும். எனவே தான் தெளிவான கொள்கையை, உறுதியாகக் கொண்டு செயற்படும் கலை இலக்கியச் செயற் பாட்டாளர்களிடம் மாக்சிய ஒழுக்கமும் கடுமையான உழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றைச் சாதிப்பதற்கு மக்கள் சார்ந்த கலை இலக்கிய அமைப்புகள் அடித்தளமாக அமையும்.

இனி
சீத்தா தோட்டத்து
செல்லம்மாளின்
அடுப்படி மட்டும் எங்கள்
அரசியல் செல்லும்
......
இருக்கவே இருக்கிறது
ஸ்பாட்டகசின் வாள் - இராகலை பன்னீர்

## உதவிய நூல்கள்


- இராஜேந்திரன். சிவ.(2021) மலையக மக்களின் போராட்ட வரலாறு. மலையகத் தமிழ் மக்களும் மாற்று அரசியல் மார்க்கமும். புதிய நீதி வெளியீடு கொழும்பு
- கணேசலிங்கன்.செ. (1995) கலையும் சமுதாயமும். பாரி நிலையம். சென்னை.
- கீதா வ. ராஜதுரை. எஸ். வி 2017 கிராம்சி: புரட்சியின் இலக்கணம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.
- கைலாசபதி. க (1974) இங்கிருந்து எங்கே. தாயகம் சஞ்சிகை.இதழ் 1 தேசிய கலை இலக்கியப் பேரவை. யாழ்ப்பாணம்.
- சடகோபன் .இரா (2002) மலையக மக்களின் பிரச்சினைகளும் தீர்வு யோசனைகளும், புதிய மலையகம். இராகலை
- சிவசேகரம். சி (1999) அறிமுக உரை புதிய தலைமுறை - இராகலை பன்னீர் கவிதைகள். தேசிய கலை இலக்கியப் பேரவை. கொழும்பு
- சிவசேகரம். சி (2000) எதிர்ப்பு இலக்கியமும் எசமானர்களும். தேசிய கலை இலக்கியப் பேரவை. கொழும்பு
- சிவசேகரம். சி (2021) விடுதலைக் கனவை நனவாக்கல்.மலையகத் தமிழ் மக்களும் மாற்று அரசியல் மார்க்கமும். புதியநீதி வெளியீட்டகம். கொழும்பு
- சிவத்தம்பி கார்த்திகேசு (1993) மலையகத் தமிழரின் பண்பாட்டுத் தளம். இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும். உதயம் நிறுவனம். கொழும்பு
- தினகரன். வே.(2021) இனப்பிரச்சினை தீர்வில் மலையக மக்கள். மலையகத் தமிழ் மக்களும் மாற்று அரசியல் மார்க்கமும். புதிய நீதி வெளியீடு கொழும்பு
- மரியதாஸ் பி (2002) வினாக் குறியா? வியப்புக் குறியா? புதிய மலையகம் (2002) இராகலை.
- மா ஓ சேதுங் (1995) கலையும் இலக்கியமும் (தமிழாக்கம் முகவை. ராஜமாணிக்கம்) தமிழ்ழி புத்தகாலயம். சென்னை
- லூசுன் (1927) (Literature of a Revolutionary Period) புரட்சி காலத்து இலக்கியம் (தமிழாக்கம் ஜி. டி. கேதாரநாதன்) சமர் வெளியீடு. யாழ்ப்பாணம்
- லோறன்ஸ். அ (2006) மலையகம் சமகால அரசியல் - அரசியல் தீர்வு. மலையகம் வெளியீட்டகம்.தலவாக்கலை.
- ஜூலியஸ் ஃப்யூசிக் (தமிழாக்கம் இஸ்மத் பாசா. எம்) (2016) தூக்கு மேடைக்குறிப்பு பாரதி புத்தகாலயம். சென்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் வரலாறு

## புகைப்படங்களின் பதிவுகளும் போதாமையும்

தலவாக்கலை யுவராஜன்

மனித குல வரலாற்றில் மிக முக்கிய கண்டு பிடிப்புகளில் ஒன்றான புகைப்படம் பிடித்தல் என்பது வியக்கத்தக்க சாதனையாகும். வரலாற்றில் முதன் முதலாக 1717 ம் ஆண்டில் புகைப்படம் பிடிப்பதற்கான முயற்சியை ஹென்றிச் ஸ்குல்ஸ் என்பவர் மேற் கொண்டார் என்பதை அறியமுடிகின்றது. 1827 ம் ஆண்டில் முதல் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையிலும் லயனல் வெண்ட், ரெக் வைன் கியுலன்போர்க் போன்றோர் புகைப்படக்கலையை விருத்தி செய்ய முயற்சி செய்துள்ளனர். இலங்கையில் வாழும் தனித்துவமான தேசிய இனமான மலையக தமிழ் மக்கள் பற்றிய புகைப்படங்களை ஆங்கிலேயத் துரைமார்கள் எடுத்துள்ளனர். எனினும் அவை காலனித்துவ ஆட்சியின் பரிமாணங்களைப் பதிவு செய்வனவாகவே உள்ளன. எனினும் மிக முக்கியமான புகைப்படங்கள் மக்களின் வரலாற்றை ஓரளவேனும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மலையக மக்களின் இரு நூறு வருட வாழ்வை, தனித்துவத்தை, போராட்டங்களைப் பதிவு செய்வதில் புகைப்படக்கலை பெரிதளவு வெற்றியடையவில்லை என்றே கூற வேண்டும். உதாரணமாக மலையக மக்களின் உரிமைப் போராட்டங்களில் உயிர் நீத்த ஐம்பதுக்கு மேற்பட்ட தியாகிகளில், கொழும்பு வெலிக்கடை சிறையில் தூக்கிலிடப்பட்ட வேலாயுதம் மற்றும் வீரசாமி, டெவன் தோட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட சிவனு இலட்சுமணன் ஆகியோரது புகைப்படங்களை மட்டுமே பெற முடிகின்றது. மலையக மக்கள் சார்ந்த புகைப்படங்களைத் தொகுப்பதற்குச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் அவை மலையக உழைக்கும் மக்களைப் பூரணமாகச் சென்றடையவில்லை. மக்களின் வாழ்வைப் புகைப்படங்களாக்கி அவற்றை 'தேயிலைச்சாயம்' என்ற தலைப்பில் நூலாக வெளிக் கொண்டுவருவதற்கும் கண்காட்சிகளை நடத்துவதற்குமான எத்தனிப்புகள் ஓரளவு வெற்றி பெற்றுள்ளன. மக்களது வாழ்வின் சகல அம்சங்களையும் புகைப்படங்களாக்குவதும் அவற்றை மக்களிடமே கொண்டு சென்று காட்சிப்படுத்துவதும் உரையாடுவதும் மிக அவசியமான பணிகளாக உள்ளன. இந்த வரலாற்றுக் கடமையினை இளையர்கள் ஏற்க வேண்டும். ஒவ்வொரு புகைப்படமும் வரலாற்றின் முக்கியச் சான்றுகளாக அமைவதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

### கோப்பிச் செய்கை

மலையக மக்களின் வரலாறு நீண்டதாக இருப்பினும் 1823ம் ஆண்டுக் கோப்பிச் செய்கைக் காகத் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப் பட்ட மக்கள் இங்கு நிரந்தரமாகக் குடியேறியதோடு பெருந்தோட்ட செய்கையிலும் ஈடுபட்டனர். கம்பளை நகருக்கு அண்மையிலுள்ள சின்னா பிட்டிய என்ற இடத்திலேயே முதலாவது கோப்பித் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆளுநர் பாரன்ஸ் காலத்தில் கண்டி பகுதிக்குப் பொறுப்பாக விருந்த இராணுவ அதிகாரி ஹென்றி பேர்ட், அவரது சகோதரன் பேர்ட் ஆகியோர் இப்பகுதியிலிருந்த நிலத்தைக் கொள்வனவு செய்து கோப்பித் தோட் டங்களை ஆரம்பித்தனர். இதற்காக கடுமையான உழைப்பாளர்களாக இருந்த தொழிலாளர் (அக் காலத்தில் இந்திய கூலிகள்) வேலைகளுக்கு அமர்த்தப்பட்டனர். அடிமைகள் போல நடத்தப் பட்ட தொழிலாளர்களின் வரலாறு புகைப்படங் களாகப் பதிவு செய்யப்படாமை பெருங் குறை பாடாகும். முதல் தொழிலாளர், முதல் கோப்பி



அறுவடை, ஏற்றுமதி அதனுடன் தொடர்புடைய உழைப்பாளர் பற்றித் தகவல்கள் புகைப்பட வடிவில் இல்லை என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோப்பித் தோட்டம் தம்பேத்னை



கோப்பிச்செடிகளுக்கு இலை அழுகல் நோய் ஏற்பட்டதால் உற்பத்தியும் குறைந்தது. கோப்பிக்குப் பதிலாகத் தேயிலை பயிரிடப்பட்டது. ஹேவாஹெட்ட நகருக்கு அண்மையிலுள்ள லூல்கந்துர எனுமிடத்தில் ஆங்கிலத் துரை ஜேம்ஸ் டெயிலர் (ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்) என்பவரால் முதலாவது தேயிலைத் தோட்டம் பத்தொன்பது ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான வரலாற்றுச் சான்றுகள் புகைப்படங்களாக உள்ளன. ஜேம்ஸ் டெயிலர் வாழ்ந்த இடங்கள் இன்றும் காணப்படுகின்றன. அவற்றைப் பேணுவதற்கான திட்டங்கள் இலங்கை அரசாங்கத்திடமோ தொல்பொருள் திணைக்களத்திடமோ இல்லை. இதனை வெறும் இனவாத கண்ணோட்டத்தில் அணுகுவதே பிரதான காரணமாகும். அண்மைக்காலத்தில் இந்தத் தோட்டப்பகுதியை அழித்துத் தனியாருக்கு விற்பனை செய்யும் நோக்கம் கூட தொழிலாளர்களின் போராட்டத்தால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இங்கு குடியேற்றப்பட்ட தொழிலாளர் லயன் அறைகள், அவர்களின் உழைப்பு, முதலில் நடப்பட்ட தேயிலை, உற்பத்தி போன்றன தொடர்பான புகைப்படங்கள் இல்லை என்றே கூறலாம். மலையக மக்களின் வரலாற்றைத் திட்டமிட்ட வகையில் மறைக்கும் செயற்பாடாகவே இதனைக் கருதலாம்.

லூல்கந்துர தோட்டம் மற்றும் ஜேம்ஸ் டெயிலர் (தொழிலாளர்கள் பற்றிய படங்கள் இல்லை)





மேற்படி தோட்டத்தை உருவாக்கிய தொழிலாளர்கள் பற்றிய புகைப்படத் தகவல்கள் இன்று கிடைக்கப் பெறுமாயின் அதன் பெறுமதி அளவிடமுடியாததாகவே இருந்திருக்கும். பச்சைத் தங்கத்தை அள்ளித்தரும் தேயிலையை உருவாக்கியவர்கள் மறக்கப்பட்டுள்ளனர், புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலைப் பெருந்தோட்டங்கள் பரப்பளவில் பல்கிப் பெருகியபோது அதிகளவிலான தொழிலாளர் தென்னிந்திய மாவட்டங்களிலிருந்து நடைப் பயணமாக இராமேஸ்வரம் வந்து அங்கிருந்து வசதிகளற்ற படகுகள் மூலமாக மன்னார் பகுதிக்கும் பின்னர் அங்கிருந்து கால்நடையாக மலையகப்பகுதிக்கும் வருகை தந்தனர். இவை பற்றிய புகைப்படங்கள் அறவே இல்லை என்பது மிகக் குறைபாடான அம்சமாகும். அதே போன்று கடலில் மூழ்கிய ஆதி லட்சுமி படகு உள்ளிட்ட பல படகுகள் கவிழ்ந்து மக்கள் உயிர் நீத்தமை பற்றிய தகவல்களும் புகைப்படங்களாக இல்லை.


மலையக மக்களின் வரலாற்றை முழுமையாக மறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட, திட்டமிட்ட மக்கள் விரோத செயற்பாடுகளில் முக்கியமானது இலங்கையில் புகையிரதம் மற்றும் பெருந்தெருக்களை அமைத்தவர்கள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களை மூடி மறைத்துள்ளமையாகும். பலரும் கண்டு ஆச்சரியப்படத்தக்க வகையில் புகை யிரதப் பாதைகளை அமைத்துத் தந்தவர்கள் இதற்கென விசேடமாக அழைத்துவரப்பட்ட தொழிலாளர்கள் ஆவர். சயாம் ரயில்வே பாதையமைக்கும் பணியில் இலட்சக் கணக்கான தொழிலாளர் மடிந்தது போல இங்கும் பலர் தமது இன்னுயிரைத் தந்துள்ளனர். பாலங்களை அமைத்தல், சுரங்கங்களைக் குடைந்து உருவாக்குதல் ரயில் நிலையங்களை அமைத்தல் போன்ற அனைத்து விடயங்களிலும் தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர். இவை குறித்த தகவல்கள் முழுமையாக மறைக்கப்பட்டுள்ளன. கிடைக்கும் சில புகைப்படங்கள் அவர்களின் சாதனை களை வெளிப்படுத்துகின்றன. பாதைகளை அமைப்பதில் மக்களின் உழைப்புக் குவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தெளிவான விளக்கம் இதுவரை முன் வைக்கப்படவில்லை.







மலையக மக்களின் பொருளாதாரப் பங்களிப்பை முழுமையாக மறைக்கும் இன்னுமொரு பகுதி றப்பர் உற்பத்தியுடன் தொடர்புபட்டதாகும். இலங்கையின் றப்பர் உற்பத்தி 1876 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஜோசபட ஹூக்கர் எனும் ஆங்கிலேயரின் வழிகாட்டலில் இப்பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. முதலாவதாக றப்பர் பால் 1893 ம் ஆண்டில் பெறப்பட்டது. கோப்பியில் ஏற்பட்ட நோய் மற்றும் உற்பத்தி வீழ்ச்சியைத் தொடர்ந்து தேயிலையும் றப்பரும் அறிமுகமாகி பாரிய வளர்ச்சியைப் பெற்றது. இதனைச் சாத்தியமாக்கியவர்கள் மலையக மக்களாவர். எனினும் றப்பர் தோட்டங்கள் பற்றிய புகைப்படங்கள் மிகவும் அரிதானதாகவே










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. றப்பர் செய்கையுடன் தொடர்புடைய துரைமார்களின் படங்கள் மற்றும் தோட்டங்களின் விபரங்கள் காணப்பட்டாலும் தொழிலாளர் பற்றிய புகைப்படங்கள் போதுமானதாக இல்லை எனலாம்

மலையக மக்களுக்குக் கிடைக்கும் அற்ப சொற்ப சலுகைகள் கூட போராடிப் பெற்றவையே ஆகும். இதற்காகப் பலர் இன்னுயிரை நீத்துள்ளனர். பதினாறு சதம் சம்பள உயர்வைக் கேட்டுப் போராடிய போது சுரவீர எனும் பொலிஸ்காரனால் சுட்டுக் கொல்லப்பட்ட முல்லோயா கோவிந்தன் (1940) முதல் தலவாக்கலையில் நடந்த போராட்டத்தின் போது சுட்டுக் கொலை செய்யப்பட்ட காராளன் மற்றும் மணிவண்ணன் (2000) வரையில் இந்தத் தியாகம் நீடித்துள்ளது. எனினும் போப் துரை வழக்கில் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு தூக்கிலிடப்பட்ட வீராசாமி, வேலாயுதம் ஆகியோரினதும் டெவன் தேயிலைத் தோட்டத்தைப் பாதுகாப்பதற்காக நடைபெற்ற போராட்டத்தின் போது சுடப்பட்ட தியாகி சிவனு இலட்சுமணன் ஆகியோரது புகைப்படங்களே எமக்குக்



கிடைக்கின்றன. மலையகத் தியாகிகளின் உருவப்படங்களை அக்காலத்தில் வாழந்தவர்களின் கருத்துப்படி மாதிரி உருவங்களாகவேனும் படங்களை ஆக்குவது மிகவும் அவசியமானதாகும்.

மலையக மக்களுக்கெதிராக மேற் கொள்ளப்பட்ட இனவெறித் தாக்குதல்கள் பற்றிய புகைப்படங்கள் குறைவாகவே உள்ளன. அதே போல மக்களின் விருப்பமின்றி இந்தியாவுக்குப் பலாத்காரமாக அனுப்பப்பட்ட மக்களின் புகைப்படங்கள் மற்றும் 1970 – 1972ம் ஆண்டுக் காலப்பகுதியில் திட்டமிடப்பட்ட வகையில் ஏற்படுத்தப்பட்ட பஞ்சம். அதனால் ஏற்பட்ட அவலங்கள், உயிரிழப்புகள் பற்றிய படங்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே இவை பற்றிய தகவல்களை உயிரோட்டமாக மக்களுக்கு முன் வைப்பதில் பல இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

இதுவரை கிடைத்துள்ள புகைப்படங்கள்தான் மலையக மக்கள் சார்ந்த வரலாற்றுச் சம்பவங்களை வெளியில் கொண்டுவர உதவி செய்திருக்கின்றது. இம்மக்களின் வரலாறு தொடர்பில் பல்வேறு புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் வெளிவந்தாலும் அதில் புனையப்பட்ட விடயங்கள் அதிகம் காணப்படுகின்றன. மேலும் இம்மக்களின் வரலாற்றை அழிக்கவும் திரிபுபடுத்தவும் தொடர்ந்து செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. வரலாற்றுப் பாட நூல்களில் மலையக மக்கள் குறித்த விடயங்கள் இடம் பெறாமை இதற்குச் சிறந்த உதாரணம் ஆகும்.

மலையக மக்களின் வரலாறு 200 வருடங்களைக் கடந்துள்ள நிலையில் அதனைச் சமூக விஞ்ஞான அடிப்படையில் ஆய்வு செய்வதும் அவற்றை மக்களிடம் மீண்டும் கொண்டு சென்று உரையாடுவதும் அவசியமான பணிகளாக உள்ளன. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. இளைஞர்கள் பலர் உணர்வுபூர்வமாக ஈடுபட்டனர். இலங்கையின் பல பாகங்களிலும் அவை காட்சிப்படுத்தப்பட்டன. இந்தப் பணியில் பலவேறு அனுபவங்களைப் பெற முடிந்தது. குறிப்பாக மலையக பெருந்தோட்டங்களில் காணப்படும் பிரச்சினைகளை வெளி உலகுக்குக் கொண்டு செல்லக் கூடாது என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. காட்சிகளை வீடியோ வடிவில் பதிவு செய்தல் மற்றும் புகைப்படங்களை எடுத்தல் துரைமார்களின் அனுமதியுடனேயே மேற்கொள்ள வேண்டும் என்ற கடினப் போக்குக் காணப்படுகின்றது. உண்மைகளை வெளிக்கொணர்வதில் தடைகளே காணப்படுகின்றன எனலாம்.





புகைப்படக்கலையின் மக்கள் சார்பைப் புரிந்து கொள்ளக் கூடிய இளந் தலைமுறையினர் உறுதியான அமைப்பின் அடிப்படையில் ஒன்றிணைவதும் கலையின் வெளிப்பாட்டை மீண்டும் மக்களிடம் கொண்டு சென்று வரலாற்றை கற்பதற்கும், புதிய வரலாற்றை உருவாக்கவும் கடுமையான பணிகளை முன்னெடுப்பது அவசியமாகும். இரு நூறு வருட உழைப்பின் சாதனைகளை வெளி உலகுக்குக் காட்டுவதும் இந்த அடிப்படையிலேயே நிகழ வேண்டும். கடுமையான பணி எனினும் அது இன்பகரமானது. ❑

## அஞ்சலி

## எழுத்தாளர் குப்பிளான் ஐ. சண்முகன்



அண்மையில் காலமான குப்பிளான் ஐ. சண்முகன் உயர்தர வகுப்பு மாணவனாக இருந்த போது இவர் சிலோன் விஜயேந்திரன், மாவை நித்தியானந்தன் ஆகியோரோடு இணைந்து "யாழ் இலக்கியக் கழகம்" என்ற அமைப்பின் மூலமும், பின்னர் ஐ. சாந்தன், அ. யேசுராசா போன்றோரோடு சேர்ந்து "கொழும்பு இலக்கியக் கழகம்" மூலமும் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

கோடுகளும் கோலங்களும் (சிறுகதைகள், 1976), சாதாரணங்களும் அசாதாரணங்களும் (சிறுகதைகள், 1983), அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புக்கள் (2003), உதிரிகளும்... (சிறுகதைகள், 2006), ஒரு பாதையின் கதை (சிறுகதைகள், 2012), பிரபஞ்ச சுருதி (கவிதைகள், 2014), ஒரு தோட்டத்தின் கதை (சிறுகதைகள், 2018) ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

'தாயகம்' இதழ் தனது அஞ்சலியை செலுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசாத்தோட்டம் இராமஜெயத்தின் இருபாடல்கள்

## மலைப் பிரகடனம்

மலையகத் தாயின் கருவினில் பிறந்த
அனைவரும் ஒன்றெனப் பாடுவோம்
அதுவே எங்கள் அடையாளம்
மலையகத் தமிழரென்னும் புகழாரம்

பேதங்கள் தீர்க்க பெரும் பணி செய்வோம்
பெருமை கொள் மலையகம் ஆக்கிடுவோம்
வான் புகழ் கொண்ட உழைப்பவர் சேர்ந்தே
மாண்புறும் மலையகத்தைப் படைத்திடுவோம்

எங்கள் உடலும் எங்கள் உயிரும்
என்றென்றும் நிலைக்கும் உயிர் மூச்சும்
மலையகம் தந்த கொடையல்லாவா – அதை
மனதினில் ஏற்றுவது நலமல்லவா?

உழைப்பினில் உயர்ந்த மலையக வாழ்வில்
விளைந்து சிறந்த உறவல்லவா?
கலைகளில் கவிதையில் களிப்புறும் ஆட்டத்தில்
காண்பது அதுவே நிலையல்லவா?

மலையகம் தந்த மானுடர் ஒன்றாம்
மனதினில் இருத்தியே கூடிடுவோம்
மலையென எழுந்து மாண்பினைப் பெறவே
மனதினில் உறுதியை ஏற்றிடுவோம்

## தியாகிகளுக்குப் புகழ்மாலை

என்ன தான் நினைத்தாயோ தோழனே
எதிரிகள் உன்னை குறி வைத்து சாய்த்திடுவார்
என்றே ஒரு கணம் தான் நினைத்தாயோ?
இன்னுயிர் மக்களுக்கென்றே துணிந்தாயோ?
(என்ன தான்...)

ஈயக் குண்டுகள் தான் இதயத்தைத் துளைத்துக் கொல்லும்
இரும்பென்ற உடல் தானே எம்முன்னே மண்ணிலே சாயும்
மாண்புறும் வாழ்வு அது மண்ணுக்கே உரமாகும்
மலைகளும் உன் பெயரை மனதினிலே இருத்தி வைக்கும்
(என்ன தான்...)

பெற்றவர் விழுந்தழுவார் வேதனையில் துடித்திடுவார்
வற்றாத அன்பினாலே நண்பரெல்லாம் கலங்கிடுவார்
காதலனோ காதலியோ கடுந்துயரில் பதறிடுவார்
பாதகர் சிரித்திருக்க பகையுள்ளம் தீயாய் எழும்
(என்ன தான்...)

சட்டமும் நீதியும் தான் சண்டாளர் கையில் வரும்
சதி செய்த நிகழ்வுகளோ சரி என்றே எழுதப்படும்
எக்காளம் மீறி எழ எதிரிகளும் மகிழ்ந்திருப்பார்
எதிர் கால வாழ்க்கையுமே இது போலே நீண்டு செல்லும்
(என்ன தான்...)

தியாகிக்கு மரணமில்லை செங்குருதி ஓய்வதில்லை
நியாயக் குரல் தோற்பதில்லை நெஞ்சுறுதி சாய்வதில்லை
மலைகள் தலை குனிவதில்லை மனிதர் ஓய்ந்து கிடப்பதில்லை
மாசற்ற தியாகங்களோ மண்ணில் என்றும் மறைந்ததில்லை
(என்ன தான்...)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் சுய இருப்பு பயணத்தில் இளைஞர்களின் பங்களிப்பு

ஜெ. மு. புவனேஸ்
பேராதனைப் பல்கலைக்கழகம்

உலக நடத்தைக் கோலத்தின் வளர்ச்சியிலும், மாற்றத்திலும் இளைஞர்களின் வகிபங்கு இன்றியமையாததாகும். அதற்கான காரணம், இளம் பருவமென்பது உடல், உள மற்றும் அறிவு பூர்வமான சிந்தனை சார்ந்த வளர்ச்சிகள் சிறந்த முறையில் காணப்படக்கூடிய வயதெல்லையாகும். இதனால், எதையும் எதிர்கொள்ளக்கூடிய இயல்பான தன்மை, சமூக செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய தனித்துவப் பண்பு என்பவற்றைக் கொண்டு புதிய செயலூக்கத்தின் அடிப்படையில் செயற்படக்கூடிய காலப்பகுதியாக இவ் இளம் பருவம் அமைகிறது. இது விஞ்ஞான ரீதியாகக் கூட நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும். அந்தவகையில், உலகின் மொத்த சனத்தொகையில் இளைஞர்களின் (15-24 years) எண்ணிக்கை 1.2 பில்லியன் அதாவது 16 சதவீதமாகக் காணப்படுகின்றது. (World Youth Report 2020) அதேபோல், இலங்கையின் சனத்தொகையில் 4.64 மில்லியன் அல்லது 23.2 சதவீதம் இளைஞர்களாக உள்ளனர். இது மொத்த சனத்தொகையில் சராசரியாகக் கால்வாசிப் (1/4) பகுதியாகும். இலங்கையைப் பொறுத்தமட்டில் முப்பது வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை இளையோர் சமூகமாக நோக்குகின்ற ஒரு பொதுவான தன்மையும் காணப்படுகின்றது (Sri Lanka Youth Federation/ age:15-29). ஒரு பிரதேசத்தின் அல்லது நாட்டின் இளையோரின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளுக்கான பங்களிப்பானது பலதரப்பட்ட மாறுதல்களை ஏற்படுத்தக் கூடிய வல்லமை கொண்டதாகும். ஏனெனில், ஒரு சமூகத்தின் மூடநம்பிக்கைகளையும், சமூகச் சீர்கேடுகளையும் தகர்த்தெறிந்து, தலைமுறை இடைவெளிகளை மதிப்பிட்டும், ஒப்பிட்டும் சரியான அறிவு பூர்வமான சிந்தனைகளை நடைமுறைச் சூழலில் விதைக்கக் கூடிய தார்மீகப் பொறுப்பும், கடமையும் இவர்களுக்குரியதாகும். அந்தவகையில், இக் கட்டுரையானது உலக அரங்கிலும், இலங்கைச் சூழலிலும் இடம்பெற்ற சமூக அநீதிகளுக்கு எதிராகவும், சமூக விடுதலைக்காகவும் பல வழிகளிலும் போராடிய இளந் தலைமுறையினரைத் துணைகொண்டு, மலையகச் சமூகத்தில் இளைஞர்கள் தற்போதும், எதிர்காலத்திலும் செல்ல வேண்டிய மற்றும் செயற்பட வேண்டிய தளம் பற்றி விளக்குவதாக அமைகிறது.

கால நடைமுறைகளுக்கு ஏற்றாற்போல் இளைஞர்கள், செயற்பட வேண்டிய சமூகச் செயற்பாட்டுத் தளமும், சிந்தனையும் மாறுபடுகின்றது. உலகத்தைப் பொறுத்தமட்டில் அந்தந்தக் காலப்பகுதிகளில் வாழ்ந்த இளையோர் சமூகம், அக்காலப் பகுதியில் இடம்பெற்ற சமூக அநீதிகளுக்கு எதிராகவும், சமுதாய அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தங்களின் குரல்களை உயர்த்தி செயற்பாட்டுத் தளத்தைக் கொண்டு நடத்தியுள்ளனர். இதற்குப் பல்வேறு சான்றுகளை உலக அரங்கிலிருந்து முன்வைக்க முடியும்.

உலகப் புரட்சியாளன் "சே" எனும் சேகுவேரா (Che Guevara) கியூபப் புரட்சியில் தன் தடத்தைப் பதிக்கும் போது அவனுக்கு வயது 27 (1928-1955). அன்று ஆரம்பித்த தன் புரட்சிகர வாழ்க்கையை கியூப மக்களுக்காகவும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கும் வர்க்கத்துக்காகவும் முழுமையாக அர்ப்பணித்த கம்யூனிச தலைவனாகச் செயற்பட்டவன். தன்னுடைய வாழ்க்கை முழுவதையுமே முதலாளித்துவத்திற்கு எதிராக வடிவமைத்துக் கொண்ட மாபெரும் தலைவன் சேகுவேரா. அதேபோலவே, கியூப புரட்சியாளன் பிடல் காஸ்ட்ரோ (Fidel Castro) தன்னை ஒரு கம்யூனிச சிந்தனை கொண்ட மனிதனாக மாற்றிக் கொள்ளும் போது அவனுக்கு வயது 19 (1945ல் ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் கற்றல்). தன்னுடைய கம்யூனிச குரலை முதலாளித்துவத்துக்கு எதிராக பிடல் உயர்த்திய போது அவனுக்கு வயது 27. **"நீங்கள் என்னை சிறையில் அடைக்கலாம். ஆனால் வரலாறு என்னை விடுவிக்கும்"** எனக் கூறியவன் (1953ல் - நீதிமன்றத்தில் பிடல் கூறியது). 1955ம் ஆண்டு காஸ்ட்ரோ விடுதலை பெற்று மெக்ஸிகோவில் சேகுவேராவை சந்தித்தபோது இருவருக்கும் வயது 29 (பிடல்) மற்றும் 27 (சே) ஆகும். இவர்கள் தங்களுடைய இளம் வயதில் உழைக்கும் மக்களுக்காகப் போராடி அதில் வெற்றியும் கண்டவர்கள். இதனால் தான் இன்றும் 'சே' எனும் புரட்சியாளனை இளைஞர்கள் நண்பனாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

**"ஒவ்வொரு அநீதியை கண்டும் ஆத்திரத்தால் அதிர்ந்து போவாயானால் நீ என் தோழன்"**

(சேகுவேரா)

இந்திய சுதந்திரப் போராட்டத்திலும், சாதிய மற்றும் தீண்டாமைக்கு எதிரான எதிர்ப்பிலும் பாரதியின் எழுத்துக்களுக்கு முக்கிய பங்குண்டு. பாரதி தன் எதிர்ப்புகளைக் கவிதைகளாகவும், பாடல்களாகவும் வெளிப்படுத்துகையில் அவன் சுதந்திர வேட்கை கொண்ட இளம் செயற்பாட்டாளன். 1905ம் ஆண்டு ரஷ்ய சார் மன்னர் ஆட்சிக்கு எதிராகக் கவிதை படைத்தபோது அவனுக்கு வயது 23. 1917ல் மகத்தான ரஷ்யப் புரட்சி லெனின் தலைமையில் வெற்றி பெற்றதை பாரதி பின்வருமாறு பாடுகிறான்.

*"மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள்*
*ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி கொடுங் கோலன் அலறி வீழ்ந்தான்..."*

இவ்வாறு, உலக அரங்கில் சமூக அநீதிகளுக்கு எதிராகப் போராடியதில் இளையோர்க்கு சிறப்பான பங்கிருக்கிறது. இதற்கான காரணம், சரியான சிந்தனை விருத்தியும், அதில் அவர்கள் கொண்டிருந்த உறுதிப்பாடுமேயாகும்.

இதன் தொடர்ச்சியாக உலகில் பல போராட்டங்கள் இளம் தலைமுறையினரால் வழிநடத்தப்பட்டன. இன்றும் வழிநடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறானவையாக, **2019-2020 காலப்பகுதிகளில் சீனாவுக்கு எதிராக ஹொங்காங்கில் (Hong Kong) அரசியல் உரிமைகளுக்காக இடம்பெற்ற போராட்டத்தில் காணப்பட்ட இளைஞர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.** அதேபோல, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு இந்தியாவில் தடை செய்யப்பட்டபோது அதற்கு எதிராக 2017ம் ஆண்டு தமிழ்நாட்டிலும், அதற்கு வெளியேயும் பல போராட்டங்கள் இடம் பெற்றன. இதில் மெரினா கடற்கரையில் இடம் பெற்ற போராட்டம் இளைஞர்களின் பங்குப்பற்றல் காரணமாக முக்கியம் பெறுகிறது. இதனால் இப் போராட்டம் இளைஞர் புரட்சி (Youth Revolution) என்றும் அழைக்கப்படுவதைக் குறிப்பிடலாம். உலகில் இப்படியான பல போராட்டங்களில் இளைஞர்களின் பங்களிப்பு என்பது காலத்திற்கு ஏற்றவாறு இருந்து வருகிறது.

ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் இங்குக் காணப்படுகின்ற பொதுக் கல்வித் துறையின் குறைபாடுகளாலும் (மனனம் செய்தல், ஒப்புவித்தல்), அரசியல் ரீதியாக இருக்கின்ற சிந்தனை போக்குகளாலும், தனிநபர் முன்னேற்றத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவச் சமுதாயக் கட்டமைப்பு காணப்படுகின்றமையாலும் போராட்டச் சிந்தனையும், தன்மையும் பாதிப்படைந்துள்ளன. எவ்வாறாக இருந்தாலும், சமூக அநீதிகள் இடம்பெறும் போதெல்லாம் ஒரு குறிப்பிட்ட இளம் சமுதாயத்தினர் அதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் பின்னிற்கவில்லை.

1960 காலப்பகுதிகளில் வடகிழக்கில் தமிழருக்கு எதிராக இனவாத அரசியல் கட்டவிழ்த்து விடப்பட்டபோது அதற்கு எதிராக இளைஞர்கள் செயற்பட்டதையும், இப்பிரதேசங்களில் சாதிய தீண்டாமை உச்ச நிலையில் இருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தின் (1920) ஊடாக இளைஞர்கள் அதற்கு எதிராகச் செயற்பட்டதையும் குறிப்பிட முடியும். அதேபோல, அண்மைய காலகட்டத்தில் ராஜபக்ச குடும்ப ஆட்சிக்கு எதிராகவும், இலஞ்ச - ஊழல் அரசுக்கு எதிராகவும் 2021-2022 காலங்களில் இடம்பெற்ற போராட்டத்தில் (Galle Face Protest) காணப்பட்ட இளைஞர்களின் பங்களிப்பென்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இதில் பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் ஏனைய அனைத்து உழைக்கும் மக்களும் கலந்து கொண்டதையும், இதன் மூலம் மிகப்பெரிய அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றதையும் காண இயலும். இதில் மலையக இளைஞர்களின் பங்களிப்பும் சிறந்த முறையில் காணப்பட்டமை மற்றுமொரு முக்கிய அம்சமாகும்.

மலையக உழைக்கும் மக்களின் வரலாற்றுப் பக்கங்களைச் சற்று முன்னோக்கி பார்க்கும் போது, தியாகி முல்லோயா கோவிந்தன் (22) தொடங்கி ராமசாமி (22), வீராசாமி (22), ஐயன்பெருமாள் வேலாயுதம் (24),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையன் (30), ராசம்மாள் (29), சிவனு லெட்சுமணன் (22), ஜேசையா ஜோசப் (28) போன்ற தியாகிகள் மலையக மக்களுக்காகத் தங்களின் உயிரை தியாகம் செய்த போது அவர்களின் வயது இளைய தலைமுறையை (20-30) ஒத்ததாகவே காணப்பட்டது. உதாரணமாக, 1956ம் ஆண்டு மஸ்கெலியா நல்லத்தண்ணி தோட்டத்தில் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க மாற்றுத் தொழிற்சங்கமான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸை அமைக்கும் போராட்டத்தில் "தியாகி கருமலை" பதினெட்டு வயதில் கொல்லப்பட்டதைக் குறிப்பிடலாம். எம்மவர்களின் எதிர்ப்புகளானது. அக் காலத்தில் இடம்பெற்ற சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் (டெவன் தோட்டப் போராட்டம் - 1950), காணி உரிமைக்காகவும் (உருளவள்ளி போராட்டம் - 1946), அரசியல் உரிமைகளுக்காகவும் (கல்தோணி தோட்ட மக்களின் தொழிற்சங்கம் அமைப்பதற்கான போராட்டம் - 1953) பரந்த மலையகச் சமூக நோக்கங்களோடு இடம் பெற்றுள்ளன. (1993, உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்). இதனை இன்றைய மலையக இளந் தலைமுறையினரும் பண்பாடு, உரிமை, பொருளாதாரம், விளையாட்டு மற்றும் அரசியல் தளங்கள் சார்ந்து கொண்டு நடத்த வேண்டிய காலத்தின் கட்டாயமும், தார்மீக பொறுப்பும் அதிகமாக இருக்கின்றன.

1946 ஆம் ஆண்டு முல்லோயா தோட்டத்தில் (ஹேவா ஹெட்ட) பதினாறு சதம் சம்பள உயர்வுக்காக ஆரம்பித்த எமது உரிமைப் போராட்டம் எட்டுத் தசாப்தங்கள் கடந்தும் நீண்டுக்கொண்டு இருக்கின்றது. காலமும், சம்பளத் தொகையும் மட்டுமே (1000ரூபா) இங்கு மாறி இருக்கிறதே தவிர போராட்டம் இன்று வரையிலும் ஓய்ந்தப்பாடில்லை. அதேபோலவே, தோட்ட கங்காணிமாரின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஆரம்பித்த போராட்டங்கள் இன்னமும் தொடர்கின்றன. ஆனால் அவை இன்று, முதலாளித்துவக் கொள்கை வழி உருவான பல்தேசிய கம்பெனிகளின் (MNCs) உழைக்கும் மலையக மக்கள் மீதான அதிகார அடக்குமுறைகள் மாற்று வழிமுறைகளில் பிரயோகிக்கப் படுவதற்கு எதிராக ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. இதற்குச் சாமிமலை ஓல்ட்டன் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு. இவ்வாறான செயற்பாடுகளின் பின்னால் இருக்கின்ற சில அரசியல் பின்புலம் கூட நோக்கப்பட வேண்டிய ஒன்றாகவே காணப்படுகிறது.

ஒரு சமூகத்தின் சுய இருப்பானது அச்சமூகத்தின் பண்பாடு சார் வாழ்வியலிலேயே அதிகமாகத் தங்கியுள்ளது. பண்பாடு சார் அம்சங்கள் நலிவடையும் போதோ அல்லது அழிக்கப்படும்போதோ அக்குறித்த சமூகத்தின் வரலாறும் சேர்ந்தே அழிந்துவிடும். இங்கு, வரலாறு அற்ற சமூகம் தன் சுய இருப்புக்காக

***ஒரு சமூகத்தின் சுய இருப்பானது அச்சமூகத்தின் பண்பாடு சார் வாழ்வியலிலேயே அதிகமாகத் தங்கியுள்ளது. பண்பாடு சார் அம்சங்கள் நலிவடையும் போதோ அல்லது அழிக்கப்படும்போதோ அக்குறித்த சமூகத்தின் வரலாறும் சேர்ந்தே அழிந்துவிடும். இங்கு, வரலாறு அற்ற சமூகம் தன் சுய இருப்புக்காக போராடுவதென்பதோ அல்லது அதனைத் தக்கவைத்துக் கொள்வதென்பதோ கடினமான காரியமாகிவிடும். இன்றைய சூழலில் மலையக இளைஞர்கள் தோட்டம், நகரம், கொழும்பு போன்ற ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் என்ற ரீதியில் பல வழிகளிலும் பிரிந்து காணப்படுகின்றனர். இவர்களை ஒன்றிணைத்து சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய ஒரு பண்பாட்டை உருவாக்க வேண்டும்.***

போராடுவதென்பதோ அல்லது அதனைத் தக்கவைத்துக் கொள்வதென்பதோ கடினமான காரியமாகிவிடும். இன்றைய சூழலில் மலையக இளைஞர்கள் தோட்டம், நகரம், கொழும்பு போன்ற ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் என்ற ரீதியில் பல வழிகளிலும் பிரிந்து காணப்படுகின்றனர். இவர்களை ஒன்றிணைத்து சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய ஒரு பண்பாட்டை உருவாக்க வேண்டும். பெரும்பாலும், சமூக பண்பாடானது கல்வியைச் சார்ந்து இருப்பதனால் ஏட்டுக்கல்விக்கு சமாந்தரமாக மலையக மக்களின் வரலாறு, பண்பாடு, என்பவற்றை வெளிப்படுத்தக்கூடிய சமூகவியல் கல்வி சார்ந்த பண்பாட்டை ஊக்குவிப்பதும், அதனூடாக கலை இலக்கிய பணிகளில் ஈடுபடுவதும் அவசியமானதாகும். குறிப்பாக இலங்கையில் இலக்கியத் துறை சார்ந்து முக்கியத்துவம் பெறுகின்றவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதிலேயே தங்களுடைய பயணத்தை ஆரம்பித்துள்ளமை கூறத்தக்கதாகும். எனவே, எமது மலையகப் பண்பாட்டு சார் விடயங்களைப் பாதுகாக்க வேண்டியதும், அதனை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்க வேண்டியதும் இன்றைய இளந் தலைமுறையினரின் முக்கிய கடமையாகவும் உள்ளது.

இந்த விடயங்கள் ஒருபுறம் இருக்க, மலையக அரசியல் தளத்தை நோக்கினால் மக்கள் நலன்சார் விடயங்களிலோ, உரிமை சார் விடயங்களிலோ அக்கறை கொள்ளாத ஒரு சுயலாப அரசியல் பிடியில் சிக்குண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறோம். இவ் அரசியலினால் எம் மக்களுக்கான வேலைக்கேற்ற ஊதியத்தையோ (பொருளாதார உரிமை), காணி உரிமையையோ பெற்றுக் கொடுக்க முடியாத நிலையே தொடர்கிறது. இதனைக் கடந்து இந்தியாவைப் போன்றே மலையகத்திலும் பரம்பரை அரசியலுக்கான அடித்தளம் ஆழமாக போடப்பட்டிருக்கிறது. இன்னும் 50/60 வருடங்களுக்கு அது திட்டமிட்டுப் போடப் பட்டுள்ளதை வெளிப்படையாகக் காண முடிகிறது. இவ்வாறான விடயங்களினால் எமது அரசியல் உரிமைகளும், அதனோடு தொக்கி நிற்கின்ற பொருளாதார உரிமைகளும் கேள்விக்குறியாகியுள்ளது. இன்று இலங்கையைப் பொறுத்தமட்டில் மாற்று அரசி யலுக்கான தேவை உணரப்பட்டிருக்கிறது. இதற்கான எத்தனிப்புக்கள் தென் இலங்கையில் அதிகமாகவே எழுந்திருக்கிறன. மலையக இளம் சமூகம் மாற்று அரசியலுக்கான பயணத்தில் இவர்களோடு ஒன்று சேர்ந்து பயணிக்கலாம் அல்லது மலையகத்துக்கே உரிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டும் பயணிக்கலாம். ஆனால் அவை தத்துவார்த்த அடிப்படையிலே கருத்தியல் ரீதியாக ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு தாபனத்தின் கீழ் இயங்குவதும், விரிவுபடுத்துவதும் முக்கியமானதாகும்.

மலையக பொருளாதாரத் தளத்தை நோக்கும் போது, உலகச் சந்தையில் கேள்வி நிறைந்த ஒரு பொருளாதார நடவடிக்கையாகப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இருக்கையில், இலங்கையில் குறிப்பாக மலையகத்தில் இப் பொருளாதாரம் (தேயிலை) இழிவான கண்ணோட் டத்தில் நோக்குகின்ற தொழிற் துறையாகக் கடந்த எழுபது வருடங்களில் மாற்றப்பட்டுள்ளது. இத் தொழில்துறையைச் சமூக அந்தஸ்து கொண்ட துறையாக மாற்றுவதற்கோ அல்லது கல்வி செயற்திட்டங்களின் ஊடாக இதனை ஊக்குவிப்பதற்கோ மலையக அரசியல்வாதிகளிடம் எவ்வித கொள்கை வகுப்புக்களும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு எமது பொருளாதாரம் அழிக்கப்படுமாக இருந்தால், பொருளாதார இருப்பு நலிவடைந்து போகும். இதன் வழியாக இடப்பெயர்வுகள் அதிகரித்து (தொழில் சார்ந்து, கல்வி சார்ந்து) நில உரிமை சார்ந்த எத்தனிப்புக்கள் பாதிப்படையும். இந்நிலைமை மலையகச் சமூகம் என்ற எமது அடையாளத்தை (Identity - மனித உரிமைகளின் பிரதான நியமங்களில் ஒன்று) கேள்விக் குறியாக்கும்.

எனவே, இதனை மாற்றி அமைக்க வேண்டிய தார்மீக பொறுப்பு இன்றைய மலையக இளைஞர்களின் கைகளில் இருக்கிறது. இளைஞர்கள் சுய உற்பத்தியில் ஈடுபடுதல், இளைஞர் கூட்டுப் பண்ணைகளை உருவாக்கி விவசாயம் மற்றும் கைத்தொழில் சார்ந்து செயற்படல், கால்நடை வளர்ப்புகளை மேற்கொள்ளல் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் செய்தல் போன்ற பொருளாதாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதினூடாக எமது பொருளாதாரத்தைச் சமநிலை காணச் செய்து எதிர்காலப் பொருளாதார இருப்பை தக்கவைத்துக் கொள்ள இயலும். இவற்றோடு, விளையாட்டுத் துறையையும் வளர்ச்சியடையச் செய்வதினூடாகச் சமூக ஒற்றுமை யையும், ஆண் - பெண் சமத்துவத் தன்மையையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

முதலாளித்துவ சக்திகள் இளைஞர்களைப் பல வழிகளிலும் திசை திருப்பிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில் சரியான அரசியல் புரிதலோடும், சமூக உரிமைகளைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான தெளிவோடும் பயணிக்க வேண்டியதோடு, ஆண் - பெண் இருபாலரும் சமநிலையில் நிற்கக்கூடிய ஒரு பண்பாட்டை மலையகச் சூழலில் உருவாக்க வேண்டிய பொறுப்பு மலையக இளம் தலைமுறையினருக்குரியதாகும். மேலும் மலையக இருப்பு நோக்கிய பயணத்தில் இளையோரின் சமூகப் போராட்ட வடிவமானது, எழுத்தாகவோ, சரியான சிந்தனை விருத்தி கொண்ட சமூகத்தை உருவாக்குவதாகவோ அல்லது செயற்பாட்டுப் போராட்ட வடிவமாகவோ அமையலாம். ஓர் உயரிய குறிக்கோளை நோக்கிப் பயணிக்கும் போது போராட்ட வடிவங்கள் சக மனிதனுக்கு மனிதன் மாறுபடலாம். ஆனால் அதற்கான நோக்கம், இலக்கு ஒன்றாகத் தான் அமையும். ஆகவே, மலையக இளைஞர்களின் போராட்ட வடிவங்களும், தளங்களும் மாறுபட்டதாக இருக்கலாம். ஆனால் அனைவரும் ஒருமித்த குரலாய் மலையக இருப்புக்காகப் போராட வேண்டியது காலத்தின் தேவைப்பாடாகும்.

காலத்தின் ஓட்டத்தில் மலையகச் சமூகம் 200வது வருடத்தில் தேசிய இனத்திற்கான அடையாளத்தை நோக்கியும், மலையக மக்கள் என்ற இருப்பு அடையாளத்திற்காகவும், நில உரிமைக்காகவும் மற்றும் பல அரசியல், பொருளாதார உரிமைகளுக்காகவும் பயணிக்கவும், போராடவும் வேண்டிய தேவையிருக்கிறது. இதற்குத் தொழிலாளர்கள், முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞர்கள் மற்றும் ஏனைய சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்தும், பலவீனங்களைக் களைந்தெறிந்து பலமான சக்தியாக மாறுவதற்கான தாபன ரீதியான உறுதிப்பாட்டை ஏற்படுத்தியும், எப்படியான இடர்பாடுகள் வந்தாலும் அதற்கு எதிராக நிற்கக்கூடிய மனத் தைரியத்தையும், அறிவுபூர்வமான சிந்தனையையும் கொண்ட வகையில் ஒரு புதிய சமூகப் பண்பாட்டைத் தத்துவார்த்த அடிப்படையிலும், நடைமுறை சார்ந்தும் உருவாக்கு வதினூடாக மலையகச் சமூகத்தின் தற்போதைய இருப்பையும், எதிர்கால சுய இருப்பையும் எம்மால் உறுதிப்படுத்த முடியும். ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பல்கலைக்கழகம் –

## கலந்துரையாடுவதற்கான குறிப்புகள்

இரா. ஹிர்சான்

*"கல்வியின் அடிப்படை விடயங்களை படித்து மனனஞ் செய்வதல்ல. சிந்திக்கக் கூடிய வகையில் மூளைக்குப் பயிற்சியளிப்பதாகும்"*
***-அல்பேர்ட் ஐன்ஸ்டைன்***

*"நீங்கள் எதையேனும் அடைய விரும்பினால் அதற்கான அடித்தளத்தைக் கட்டுங்கள்"*
***-நோம் சொம்ஸ்கி***

மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் அதனை மேலும் வளர்த்தெடுக்கக் கூடிய வகையில் அரசியல், பொருளாதாரம், சமூகச் செயற்பாடுகள், கலை கலாசாரம் குறித்து பல்வேறு ஆய்வுகளும் கலந்துரையாடல்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரு நூறு வருடங்களுக்கு மேலாக இந்நாட்டின் மேம்பாட்டுக்காகத் தமது உடல், பொருள், மூச்சு அனைத்தையும் அர்ப்பணித்த சமூகம் என்ற வகையில் அவர்களை அடிப்படையாகக் கொண்ட புதிய கல்வி வரலாற்றை விருத்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலும், உயர் கல்வி நிறுவனங்கள் அதற்கேற்ப செயலாற்ற வேண்டும் என்பது குறித்தும் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் வழங்கப்படும் உயர்கல்வியின் விளைவுகள் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. குறிப்பாகத் தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது போல வேலையற்றோரின் தொகையும் அதிகரித்து வருகின்றது. தொழிலுக்கான போராட்டங்களும் விரக்தியும் தீர்க்கப்படாத சமூகப்பிரச்சினையாக விரிவடைகின்றது. மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத்தின் வங்குரோத்து நிலையும் 'அரலகல' போராட்டத்தின் விளைவுகளாக இடம்பெற்று வரும் அரசியல் மாற்றங்களும் பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் தேக்க நிலையை ஏற்படுத்தி வருகின்றது. இதை விட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகளை அடக்குவதற்காக அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகளும் பல்கலைக்கழகங்களில் நிச்சமற்ற எதிர்காலத்தை உருவாக்கியுள்ளது. இலங்கையின் கல்வி தொடர்பான கொள்கையும் எவ்வித மாற்றங்களுமின்றி வாழ்க்கைக்குப் பொருந்தாத எழுத்தாவணங்களாக மட்டும் இருப்பதும் இன்னுமொரு தடையாகச் சுட்டிக் காட்டலாம்.

கடந்த காலத்தில் மேலும் பத்துப் பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டன. அவை யாவும் இன்று கிடப்பில் போடப்பட்டுள்ளன. மீள முடியா வங்குரோத்து அனைத்தையுமே முடக்கி வைத்துள்ளது. ஏற்கனவே இயங்கி வருகின்ற பல்கலைக்கழகங்களைத் தொடர்ந்து இயங்கச் செய்வது என்பது கூடச் கேள்விக்குறியாகவே உள்ளது.

அதே வேளை உயர்கல்வி நிறுவனங்கள்; 'நெட்டுரு பண்ணித் துப்பும்' செயலூக்கமற்ற புத்தி சீவிகளை உருவாக்கியுள்ளதோடு, கனவுலக வாழ்க்கையில் துன்புறும் அதே வேளையில் சுகப்படுத் முடியாத மனக்குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளமை இன்னுமொரு மனித வள அழிவாகக் காட்ட முடியும். இந்தக் கல்விச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் தமது இலாப வேட்டையில் வெற்றி பெறு வருகின்றன. இலவசக்கல்வி என்பது காலாவதியாகிப் போன பொருளாகவே உள்ளது.

இவ்வாறான ஒரு நிலையிலேயே மலையகப் பல்கலைக்கழகம் குறித்துக் கடந்த காலத்தில் பேசப்பட்டது. பொய் வாக்குறுதி மற்றும் நம்பிக்கைத் துரோகம் ஆகியன ஒரு புறமாகவும் வங்குரோத்து நிலை மறு புறமாகவும் எழுந்து நிற்கும் நிலையில், மலையகப்பல்கலைக்கழகம் என்பது போராடி வெல்ல வேண்டிய முக்கிய விடயமாக உள்ளது. இது குறித்து விரிவான கலந்துரையாடல்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செலவது அவசியமான கல்விப் பணியாக உள்ளது. பல்கலைக்கழகத்தின் அவசியம், அதன் பொருளாதார அரசியல் மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகள் குறித்துப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களது ஒத்துழைப்பும் பெறப்படுதல் முக்கியமானதாகும். மலையகப் பல்கலைக்கழகத்துக்கான செயலணி ஒன்று உருவாக்கப்பட்டு இது தொடர்பான கொள்கைத் தீர்மானத்தை நிறைவேற்றுவதோடு இந்த உயர்கல்வி நிறுவனத்தை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டத்துறை இரு நூறு வருட வரலாற்றைக் கொண்டதாகும். காடாகக் கிடந்த உயர்நிலம் திரட்சியான உழைப்பின் மூலமாகப் பச்சைத்தங்கத்தை அள்ளி தரும் பூமியாக மாற்றப்பட்டுள்ளது. உலக நாடுகளில் 'Sri Lanka Tea' பிரசித்தி பெற்றமைக்கும் போக்குவரத்து, வங்கித்துறை, நகராக்கம், சுற்றுலாத்துறை விருத்தி, வேலைவாய்ப்பு, வெளிநாட்டு வருமானம், மின்சாரக் கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு சமூகப் பொருளாதார வாய்ப்புகள் விருத்தியடைவதற்கான அடிப்படை கட்டுமானமாக அமைந்தமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

தனியார் மயம், இலாப நோக்கை மட்டும் குறி வைத்துச் செயற்படும் கம்பனிகளின் செயற்பாடு, இனவாதம் போன்ற காரணங்களால் சீரழிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறையினை மீளக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் விளைவுகளை அனைத்து இன மக்களும் அனுபவிக்க முடியும் என்பதையும் இலங்கையின் நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதையும் கனவாகப் போயுள்ள வெளி நாட்டு வருமானத்தை ஈட்டக் கூடிய சாத்தியமான வழி என்பதனையும் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

பல்கலைக்கழகங்களின் சர்வதேச ரீதியான தரத்தைத் தீர்மானிப்பதில் கையாளப்படும் கல்விசார் கீர்த்தி மற்றும் புகழ், கல்விசார் பணியாளர்களின் கௌரவம் மற்றும் புகழ், துறைகள் மற்றும் மாணவர் விதம், துறைகளின் தூர நோக்கு, சர்வதேச மாணவர்களின் தொகை போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு மலையகப் பல்கலைக்கழகம் சர்வதேச தரத்துக்கு ஏற்ப செயற்படுவதை ஆரம்ப நிலையிலேயே உறுதி செய்தல் அவசியமாகும். மேலும் இலங்கையில் முதல் தரம் கொண்ட விவசாய விஞ்ஞான உயர் கல்வி நிறுவனமாக இது அமைதல் முக்கியமானதாகும். செயலூக்கமற்ற, மேசையில் செயற்படும், பட்டாடைக்கனவுலகில் சஞ்சரிக்கும் மேதாவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இது அமைவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் அடிப்படைகளைக் கொண்டதாக இது அமைதல் வேண்டும் என்பதை அறிவார்ந்த சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

## மலையகப் பல்கலைக்கழகம்

மலையகப் பல்கலைக்கழகம் பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதன் பெயர் பின்வருமாறு அமைதல் சிறந்ததாகும்.

1. பெருந் தோட்டத்துறைக்கான தேசிய பல்கலைக்கழகம் - National University for Plantation Sector அல்லது
2. பெருந்தோட்டத் துறைக்கான, பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கான சர்வதேச பல்கலைக்கழகம் - International University for Plantation Sector or Industry.

குறித்த பல்கலைக்கழகம் தேசிய ரீதியான அபி விருத்தியை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை ஆரம்பிக்கும் அதே வேளையில் எதிர்காலத்தில் பெருந் தோட்டக் கைத்தொழிற்றுறையை வளம் மிக்க ஒரு பகுதியாக வளர்த்தெடுக்கும் கொள்கையை விருத்தி செய்து வரும் நாடுகளின் ஒத்துழைப்போடு இயங்கும் சர்வதேச பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படல் அவசியமாகும்.

ஆய்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை மையமாகக்கொண்டு கற்கை நெறிகளை ஒழுங்குபடுத்துவது பயனுள்ளதாக அமையும். தோல்வி யடைந்த மனனஞ் செய்யும் கல்வி முறைக்குப் பதிலாக விஞ்ஞான அடிப்படையிலான ஆய்வுகள், கண்டு பிடிப்புகள் போன்ற அவசிமான கற்றலை அடிப் படையாகக் கொண்டிருத்தல் மிகவும் அவசியமானதாகும். கோட்பாடுகள் மற்றும் அடிப்படை விடயங்களைக் கற்பதற்கு மொத்த கால ஒதுக்கீட்டில் நான்கில் ஒரு பகுதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதிகமான காலப்பகுதி ஆய்வு, புத்தாக்கக் கண்டுபிடிப்புகள், களப்பயிற்சி போன்ற நடவடிக்கைளுக்கு ஒதுக்கப்படுதல் அதிகப் பயன்களைத் தரும். இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்னுதாரணமான, அபி விருத்திக்கு நேரடியாகவே பங்களிப்பு செய்யக்கூடிய, இலங்கையின் உற்பத்தி கலாசாரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டக்கூடிய உயர்கல்வி நிறுவனமாக இப் பல்கலைக்கழகம் அமைவதை உறுதி செய்ய வேண்டும்.

டிப்ளோமா சான்றிதழ்கள், விஞ்ஞானமானி பட்டம், முது விஞ்ஞானமானி பட்டம், கலாநிதி பட்டம் போன்றவற்றை வழங்கும் நிறுவனமாக இது அமைக்கப்படுதல் வேண்டும். உற்பத்தி ஆற்றலுள் ளவர்கள், பெருந்தோட்ட அபிவிருத்தியைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றக் கூடிய உடல், உள, சமூக ஆற்றல் உள்ளவர்களே பாட நெறியைப் பின்பற்றக் கூடியதை உறுதி செய்தல் முக்கியமானதாகும்;. அபிவிருத்தி தொடர்பான செயலூக்கம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்க முடியும்.

இப்பல்கலைக்கழக மாணவர்கள் பயிற்சி பெறவென தேயிலை, றப்பர், தென்னைத் தோட்டங்கள், கால்நடை வளர்ப்பு, காட்டு மர வளர்ப்பு போன்ற செயற்பாடுகளுக்கு தலா ஐநூறு ஏக்கர் வீதம் நிலம் ஒதுக்கப்பட வேண்டும். மேலும் மரக்கறி மற்றும் தோட்டக்கலையுடன் தொடர்புடைய உற்பத்தி மற்றும் ஆய்வுகளில் ஈடுபடும் பொருட்டு குறைந்தது இரு நூறு ஏக்கர் காணி ஒதுக்கப்படல் அவசியமாகும். இதை விட ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடங்கள், உற்பத்தி தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள், காட்சிக் கூடங்கள், விளம்பர மையங்கள் (தரநிருணயம், உற்பத்தி மற்றும் விற்பனை) போன்றனவும் அமைக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்ட உற்பத்தியுடன் தொடர்புடைய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு காடாக்கம் மற்றும் இயற்கை வளப்பாதுகாப்பு ஆகியன தொடர்பிலும் பயிற்சிகள் பெறக் கூடிய வசதிகள் ஏற்பாடு செய்யப்படல் முக்கியமானதாகும். காலநிலை மற்றும் சூழலைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் உலகத்துக்கான முன்னுதாரணமாக இவை அமைதல் பயன்தரும். உதாரணமாக மேற் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் சுற்றுலாத் துறையை விருத்தி செய்ய உதவும்.

எதிர் காலத்தில் மக்களது போராட்டத்தின் அடிப் படையில் அமைக்கப்படவுள்ள இந்த உயர்கல்வி நிறுவனத்தில் மலையக மக்களின் வரலாறு, பண்பாடு, கலை கலாசாரம், சனத்தொகை, புவியியல், இனவரை வியல் சார்ந்த விடயங்களைக் கற்பதற்கு தனியான ஒரு கலாசார கற்கைப் பிரிவு இயங்குதல் அவசியமாகும். இந்த நாட்டின் வரலாறு, பொருளாதாரம், பண்பாடு போன்றனவற்றுக்கு இம்மக்கள் வழங்கிய பங்களிப்பு குறித்து சமூக விஞ்ஞான கண்ணோட்டத்தில் கற்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இதற்கான கலைக் கூடங்கள், ஆய்வு மையங்கள் போன்றன விருத்தி செய்யப்படல் முக்கியமானதாகும்.

## பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய அம்சங்கள்

பாடசாலைக் கலைத்திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை கல்வி அமைச்சு முன் வைத்துள்ளது. அவற்றின் பொருத்தப்பாடு குறித்து விரிவான ஆய்வுகள் அவசியமாகின்றன. இத்தகைய சூழலில் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் பற்றிய விடயங்களை கலைத்திட்டத்திலும் பாடவிதானத்திலும் உள்ளடக்குவதன் அவசியத்தை சமூகப் பொருளாதார அடிப்படையில் முன் வைப்பது பயனுடையதாகும். இதனை வென்றெடுப்பதற்கும் விரிவான செயற்பாடுகள் தேவைப்படுகின்றன.

பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் அது சார்ந்த அபிவிருத்திக்கல்வியை பல்கலைக்கழக மட்டத்தில் கற்கும் மாணவர்களின் ஆரம்ப தகுதிகளை உறுதி செய்யக் கூடிய வகையில் பாடசாலையின் பொதுக் கல்வியில் மாற்றங்கள் செய்யப்படுதல் அவசியமாகும். இதன் அடிப்படையில் ஆரம்பக்கல்வியில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை பெருந்தோட்டங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்தவம் பற்றிய அறிமுகம் இடம் பெறக் கூடிய வகையில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் குறைந்தது ஐந்து அலகுகள் சேர்க்கப்படல்

***பொய் வாக்குறுதி மற்றும் நம்பிக்கைத் துரோகம் ஆகியன ஒரு புறமாகவும் வங்குரோத்து நிலை மறு புறமாகவும் எழுந்து நிற்கும் நிலையில், மலையகப்பல்கலைக்கழகம் என்பது போராடி வெல்ல வேண்டிய முக்கிய விடயமாக உள்ளது.***

வேண்டும். தாய் மொழி மற்றும் ஆங்கிலம் இரண்டாம் மொழி ஆகியவற்றிலும் இவ்விடயம் தொடர்பான கற்றலுக்கு இடமளிக்கப்படுதல் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

கனிஸ்ட இடைநிலை வகுப்புகளில் பெருந்தோட்டத் துறை பற்றிய பாடம் செயன் முறையுடன் கூடிய ஒரு முக்கியப் பாடமாக இடம் பெறுதல் வேண்டும்.

தரம் பத்து மற்றும் க.பொ.த சாதாரண தர வகுப்புகளில் தொழில்நுட்ப பாடங்கள் மற்றும் விவசாயம் என்ற வகுதிக்குள் பெருந்தோட்டத்துறை சார்ந்த கற்கை இடம் பெறுதல் அவசியமானதாகும். குறித்த பாடசாலையின் பௌதீக அமைவிடத்துக்கேற்ப நேரடி பயிற்சிகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் வழங்கப்படுதல் அனுபவங்களை அதிகரிக்கும். உதாரணமாக உலர் வலய பாடசாலைகளில் தெங்கு உற்பத்தியும், இடை வலயங்களில் றப்பர், மற்றும் கொக்கோ உற்பத்தியிலும், ஈர வலயத்தில் தேயிலை உற்பத்தி மற்றும் மரக்கறிச் செய்கை சார்ந்த விடயங்களை கோட்பாடு மற்றும் நடைமுறைப் பயிற்சிகளில் ஈடுபடக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுதல் பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்தும்.

க.பொ.த உயர்தர பாடத்தொகுதியில் தொழில் நுட்பம் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பெருந்தோட்டத்துறை உற்பத்திகள் பற்றிய சிறப்புப் பாடம் இடம் பெறுதல் வேண்டும். மேலும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களில் குறைந்தது பத்து மாதங்கள் நேரடியாக உற்பத்தி சார்ந்த அனுபவங்களைப் பெறக் கூடிய ஏற்பாடுகள் இடம் பெறுதல் அவசியமாகும். தேசிய தொழில்சார் தகுதி (N.V.Q) யில் தரம் நான்கினைப் பூர்த்தி செய்தவரே மலையகப் பல்கலைக்கழகத்தில் பாடநெறியைப் பின்பற்ற முடியும் என்பது உறுதி செய்யப்படல் கட்டாயமானதாகும்.

இலங்கையின் அரசியலானது முதலாளித்துவம் மற்றும் நவகாலனித்துவ அடிப்படைகளையும் பொருளா தாரமானது நவ தாராளவாதம், திறந்த தன்மை மற்றும் பல்தேசிய கம்பனிகளின் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிலையைக் கொண்டுள்ளது. மேலும் ஆளும் வர்க்கமானது பேரினவாதம் பௌத்த மத அடிப்படை வாதங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற ஒரு சூழலில் தேசிய பொருளாதாரம், சுய உற்பத்தி, சூழல் பாதுகாப்பு போன்றன நாளுக்கு நாள் சீரழிந்த வரும் போக்கு தொடர்கின்றது. கல்வியானது வாழ்க் கைக்குப் பொருத்தாத அடிப்படையில் வழங்கப்படுவதால் வேலையின்மை, விரக்தி, இடப்பெயர்வு, போராட்டங்கள் என பிரச்சினைகள் நீளுகின்றன. பல்தேசிய கம்பனி களின் கோரப்பிடிக்குள் சுய பொருளாதாரம் கேள்விக் குறியாகி மடிகின்றது. மேலும் ஆக்கிரமிப்பு நோக்குடைய அமெரிக்கா மற்றும் மேற்குலகு நாடுகள், சீனா, இந்தியா போன்ற ஆட்சியாளர்களின் நேரடியான கட்டுப் பாட்டுக்குள் தீவு மூழ்கிக் கிடக்கின்றது. நுகர்வுப் பண்பாடும் விளம்பரங்களும் மக்களை வேறு உலகத்தில் நடமாட விட்டுள்ளன. ஊடகங்கள் இத்தகைய நிலைமைகளை மறைப்பதற்கு பல்வேறான நுட்பங்களைப் பயன்படுத்துவதில் வெற்றி கண்டு வருகின்றன. உயர் கல்வி நிறுவனங்கள் பல்வேறு விமர்சனங்களுக்குள்ளாகி உள்ளன. 'படித்தவர்கள்' பதவி உயர்வு மற்றும் பட்டாடை கனவுலகில் சஞ்சரிக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் மலையகப் பல்கலைக்கழகம் என்பது தூர நோக்கற்ற சிறு பிள்ளைகளின் சிந்தனையாக மாறி விடக்கூடாது. ஆசிரியர் பயிற்சி கல்லூரியை பழைய தேயிலைத் தொழிற்சாலையில் தொடங்கியது போன்ற நிலைமைகள் பல்கலைக்கழக விடயத்திலும் நிகழ்ந்து விடக்கூடாது. இது தேசிய அபிவிருத்தியின் ஒரு பிரதான செயற்பாடாகக் கருதப்பட வேண்டும். மக்களின் உற்பத்தி சார்ந்த பண்பாடு எதிர்காலம் ஆகியவற்றை மனதிலிருத்தி தூர நோக்கின் அடிப்படையில் மலையகப் பல்கலைக் கழகத்தை உருவாக்குதல் அவசியமாகும்.

பெருந்தோட்டங்களின் நிலைபேறு என்பதைத் திட்ட மிட்டு அழிக்கும் போக்கை மாற்றியமைப்பது இலகு வானதல்ல. காரணம், தனியார்மயமும் பேரினவாமும் பலமான எதிரிடையாக வளர்ந்துள்ளமையாகும். மேலும் மலையக மக்களைப் பலவீனமான அப்பாவிகள் எனச் சுட்டுவதும் பாரிய தடையே ஆகும். இத்தகைய கண்ணோட்டத்தில் மலையகப் பல்கலைக்கழகத்தை அணுகுவது எவருக்கும் பயன் தராது.

மேற்படி உயர்கல்வி நிறுவனம் தேசிய அபி விருத்தியின் மையப்புள்ளியாகக் கருதப்பட வேண்டும். மனனஞ் செய்து துப்பும் அல்லது செயலூக்கமற்ற சோம்பேறிகளை உருவாக்கும் நகர வளாகம் அல்லது 'சிட்டி கெம்பஸ்' என்ற அடிப்படையில் சிறு கட்டிடத்துக்குள் ஒரு மனன அறை உருவாக்கப்படுமாயின் அவ்வாறான ஒரு கல்வி நிறுவனம் மலையகத்துக்குத் தேவைப்படாது.

அரசாங்கம் இவ்வாறான உயர்கல்வி நிறுவனம் அமைப்பதற்கு உடன்படாது. தொழிலாளர் பெருந் தோட்டத்துறையை விரும்ப மாட்டார்கள். உயர்கல்வியை விரும்பும் இளையவர்கள் உற்பத்தியில் ஈடுபட மாட்டார்கள். பெருந்தோட்டத்துறை அழியப் போகின்றது. அதற்குப் பல்கலைக்கழகம் தேவையில்லை. இங்குப் பல் கலைக்கழகம் அமைக்கப்பட மாட்டாது. அவ்வாறு அமைத்தாலும் பல்கலைக்கழக கல்லூரியே போது மானதாக அமையும் போன்ற கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. பட்டாடைக் கனவுலகில் சஞ் சரிக்கும் புத்தி சீவிகள் இதனைச் சாத்தியமற்ற ஒன்றாகவே கருதுகின்றனர். எவ்வாறாயினும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, கல்வியை பயனுறுதி மிக்கதாக்குதல், விஞ்ஞான அணுகுமுறை போன்றவை தொடர்பில் சிந்திக்கும் கல்விமான்களும் செயற்பாட்டாளர்களும் மக்களின் பங்களிப்போடு மலையகப் பல்கலைக்கழகத்தைச் சாத்தியமாக்குவதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டும்.

பொருளாதார வங்குரோத்து, சர்வதேச கடன் ஒப்பந்தங்கள், தனியார் மயம், அடக்குமுறை, ஊழல், பேரினவாதம், பௌத்த மேலாதிக்கம் போன்றனவற்றால் பெரும் துன்பத்தில் வாடுகின்ற உழைக்கும் மக்கள் அனைவரும் ஆக்கபூர்வமாக சிந்தித்து செயற்படுவதன் மூலமாக மலையகப் பல்கலைக்கழகத்தை வென்றெடுக்க வேண்டும். இலங்கையிலுள்ள ஏனைய பதினெட்டு தேசிய பல்கலைக்கழகங்களையும் அபிவிருத்தியோடு இணைக்கின்ற முயற்சியில், கல்வியின் பொருளை மாற்றியமைக்கின்ற போராட்டத்தில் இத்தகைய முதல் முயற்சி சிறந்த உதாரணமாக அமையும்.

## இணைப்பு:

மலையகப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயலாற்றக் கூடிய நிறுவனங்கள்

1. தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
2. றப்பர் ஆராய்ச்சி நிறுவனம்
3. தென்னை ஆராய்ச்சி நிறுவனம்
4. விவசாயத் திணைக்களம்
5. வன பரிபாலனத் திணைக்களம்
6. தேசிய கால்நடைகள் அபிவிருத்தி நிறுவனம்
7. தோட்டக்கலை ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்
8. சர்வதேச நீர்வள முகாமைத்துவ நிறுவனம்
9. பெருந்தோட்ட முகாமைத்துவ பயிற்சி நிலையம்
10. விவசாய ஆராய்ச்சி பிரிவு - பேராதனை பல்கலைக் கழகம்
11. ஊவா வெல்லச பல்கலைக்கழகம்
12. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவு
13. ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிறுவனம் ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர்க்கோலை வேலிகளைமேவி

அலெக்ஸ்பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

வெளியுலகமற்றுப் போனது
ஒரு சிறு பறவையின் மன இருப்பு

பழமைவாதப் பண்புகளால்
சிதறடிக்கப் பட்டுக்கொண்டிருந்தது
ஈர்க்கோலை வேலிகளுக்கு நடுவில்
அதன் பிஞ்சு வாழ்வு

கால நீட்சியில்
அந்தச் சிறு பறவையின் கனவுகளுக்குள்
வளரத் தொடங்கின
பல எதிர்ப்புணர்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக

கட்டுப்பெட்டியாக வாழ்ந்த
நாற்சதுர சிறை வதைப்பிலிருந்து
தப்புவதற்கான சிந்தனைகளில் ஒன்றாக
சிறகடித்துப் பறக்க வேண்டுமென்ற
அவாவுணர்வு அந்தச் சிறுபறவைக்குள்


பறவையின் காலங்கள்
பருவமடைந்து கொண்டிருந்த ஒருநாளில்
அதற்கு
இறக்கைகள் முளைக்கத் தொடங்கியிருந்தன

வெளியுலக வாழ்வின் தரிசனத்தை
முகர்ந்து பார்க்க விரும்பியதன் விளைவு...
அது பறக்க ஆரம்பித்தது.
பழமைவாதப் பரப்புரைகளை நிராகரித்தது
ஈர்க்கோலை வேலிகளின் மீதேறி
வெளியுலகின் பாதைகள் வழியே
அதன் பயணம் தொடர்ந்தது

பத்துத் திங்கள்
பலதெனவாய்க் கடந்து கொண்டன
பயணத்தில்
கற்றுக்கொண்ட பாடங்கள் அதிகளவாயின
பறவைக்குள் அறிவு
விருத்தியடைந்த ஒரு நாளில்
'ஆக்கவாதி' எனும் அரும்பெரும் பட்டத்தை
காலம் அதற்கு வழங்கி கௌரவித்துக் கொண்டது

அதன்
எழுதுகோல்வாய் உமிழ்ந்த
எழுத்துச் சிதறல்கள் பலவும்
உரத்துப்பேசப்பட்ட பொழுதுகளில்
ஈர்க்கோலைவேலிகள் இற்றுப்போயின
பழமைவாதப் பண்புகள் நீள்துயில்களாயின

கட்டுப்பெட்டி வாழ்விலிருந்து
விட்டுவிடுதலையான பறவைக்குள்
இப்போது விறைத்துக் கிடக்கிறது
தன் இலக்கை அடைந்துவிட்டதான
ஓர் 'இறுமாப்பு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலை- குன்று- பாறை

சி.சசிகாந்த்

இதுகாறும்
காத்திருந்தோம்
காலநிலையும் மாறவில்லை
பலரின்
மனநிலையும்.......


எமது
எதிர்பார்ப்புகளும்
ஏக்கங்களும்
எம்முன்
மலையாக.........

இன்னல்கள்
இழப்புக்கள்
ஏமாற்றங்கள்
இவை அனைத்தும்
எம் எதிர்பார்ப்போடு
ஒப்பிடுகையில்
குன்றாக.........

சம்பளம்
போதவில்லை
சஞ்சரிக்க
வீடுமில்லை
ஒருவேளை உணவிற்கு
வெள்ளைமா
வெளியில் இல்லை.

கொழுந்து பறிக்கும் இடம்
பில்லுக்காடாய்
மாறிவிட
விடிவை எதிர்பார்த்த
எமது மனம்
பாறையாக.........

மலை
குன்று
பாறை



# வாழும் தோழா நீ வீழ்வதேன்

கி.தினால் பீட்டர்

விதை ஒன்று மண் தள்ளி விருட்சமாய் துளிர்க்கும் போது
புத்துயிர் ஒன்று கருவினின்று
மண் தொட பிறக்கும் போது
மலரொன்று வான் பார்த்து
தன் நிறம் காட்டும் நிஜத்தின்போது

முதல் மனிதன் இம்மண்ணில் பிறந்த போது
அவன் பயம் விட்டு இவ்வுலகை கண்டபோது
தனி மனிதன் தான் வாழ புது புரட்சி கண்டபோது
மருத்துவன் உயிர்காக்க
உழைப்பை ஈன்ற போது
செவ்வீரன் ஒருவன் கற்றதை கைவிட்டு ஆயுதமேந்த ஆயத்தப்பட்ட வேளை
செங்கவி கண்ட அக்கினி எனக்குள்
தீப்பொறியானபோது
வாழும் தோழா நீ வீழ்வது ஏன்?

விதைகள் வென்று வாழும் பூமியில் மலர்கள் பூத்து மின்னும் பாரினில்
புத்துயிர்கள் ஜனித்து வெல்லும் பூமியில்
முதல் மனிதன் வென்று வெந்து தணிந்த இம்மண்ணில்
புரட்சிகள் பல கண்டு பூமி வென்ற போது
செவ்வீரன் வென்று தம்மண்ணை மீட்ட இப்பாரில்
செங்கவியின் அக்கினி இன்னும் வீழாத மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக தேசிய இனத்திற்குரிய அடையாளமும் வளர்ச்சியும்

ஜெ. சற்குருநாதன்

## அறிமுகம்

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர், வேடுவர்கள் என பல்லின கலாசார சூழலை பிரதிபலிக்கும் மக்கள் இனக்குழுக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்நான்கு இனக்குழுக்களுடன் மலையக மக்கள் என அழைக்கப்படும் பெருந்தோட்டங்களைச் சார்ந்த மக்களும் கவனத்திற்குரிய அடையாளங்களாக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய வரலாறு இருநூறு வருடங்களை உள்ளடக்கியது. இலங்கையில் தேயிலை, றப்பர், கோப்பி தோட்டங்களை உருவாக்குவதற்காக பிரித்தானிய காலனித்துவாதிகளால் அழைத்துவரப்பட்டனர். இலங்கையின் மத்திய பகுதியில் அடர்ந்த காடுகளை அழித்து பெருந்தோட்டங்களை அமைத்து வளம் கொளிக்கின்ற பூமியாக இலங்கையினை மாற்றினர். குறிப்பிட்ட இனம் குறிப்பிட்ட பிரதேசத்தை உருவாக்கி தனது வாழிடம், நாகரிகம், பண்பாடு, இருப்பு போன்றவற்றை உருவாக்கி வாழத் தலைப்பட்டதோ அதேபோல மலையக மக்களும் மனித வாழ்வில்லாத இடங்களை பசுமையாக்கி அவ்விடங்களில் வாழிடங்களை அமைத்து தனது இருப்பினை உறுதி செய்து வாழ்ந்து வருகின்றனர்.

தென்னிந்தியாவிலிருந்து பிரித்தானியவாதிகளால் அழைத்துவரப்பட்டு இவர்கள் தென்னிந்திய கலாசார மரபுகளையும் நம்பிக்கையையும் பின்பற்றி தமது வாழிடத்தை அமைத்து கொண்டனர். பிரித்தானியாவின் அடக்குமுறை ஒருபுறம், இவர்கள் மத்தியில் இருந்த கங்காணிமார்களின் அடக்குமுறை இன்னொரு புறமாக இருந்த போதிலும் போராட்டங்கள் ஊடாக தமது வாழ்வியல் அம்சங்களை பண்பாடாக்கி வாழத் தலைப்பட்டனர். இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் இவர்கள் மீதான ஒடுக்கு முறையும் அடக்கு முறையும் தீர்ந்தபாடில்லை. பேரினவாத அடக்கு முறை ஒருபுறம், யாழ்ப்பாணத்தை ஆண்ட பரம்பரையினரின் இழிவான பார்வை நடை ஒரு புறம் என இவர்கள் மீதான கொடுமைகள் தொடர்ந்துக் கொண்டிருக்கின்றன. பெரும்பான்மை தொழிலாளர்களை கொண்ட மலையக சமூகம் கூடவே மத்தியதர வர்க்கத்தினரையும் இச் சமூகம் உருவாக்கிக் கொண்டுள்ளது. இவர்கள் மத்தியில் பாரம்பரியமாக இயங்கிய நிலமானிய மேலாதிக்க சிந்தனைகளை நடைமுறைக்கு கொண்டு வரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கம் இந்திய சார்பான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. மலையக மக்கள் மத்தியில் இருந்து மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கத்தின் எழுச்சி மலையக தேசிய சிந்தனைகளை மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புக்கள் உருவாக்கி வருகின்றன. மலையக மக்களின் வர்க்க சிந்தனைகளை பிரதிபலிக்கும் இடதுசாரி இயக்கங்களான செங்கொடி சங்கம், புதிய ஜனநாயக மாக்ஸிய லெனினிச கட்சி போன்ற அமைப்புக்களுடனும் மலையக மக்கள் நெருக்கமான பிணைப்பினை கொண்டுள்ளனர். சுமார் இருபது இலட்சம் பேர் வாழும் மலையக பிரதேசமாக மத்திய மாகாணம், ஊவா மாகாணம் என்பனவற்றில் பெருபான்மையாகவும் ஏனைய ஐந்து மாவட்டங்களில் பரந்தும் சிதறியும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் மீதான அடக்குமுறை இன்றளவும் தொடர்கின்றன. ஊதியம், வீடு, காணி, கல்வி, மொழி பயன்பாடு ஆகியவற்றுக்கும் குறைந்தளவு உள்வாங்கப்பட்டு அரசியல் அநாதைகளாக வாழ்ந்து வருவதையும் அவதானிக்க முடியும். பரந்த தொழிலாளர் வர்க்கத்தினரையும் மத்திய தர வர்க்கத்தினரையும் கொண்ட இச்சமூகம் போராட்டக் குணங்களை என்றுமே வெளிப்படுத்தி வந்துள்ளது. தமிழ் மொழி பேசுகின்ற வடக்கு கிழக்கை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள், முஸ்லிம்கள் ஒரு தேசியமாக இருக்க அதே தமிழ் மொழியினை பேசுகின்ற மலையக மக்கள் ஏன் இன்னொரு தேசிய இனமாக வளர்க்கப்பட வேண்டும்? சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக ஏன் தேசிய இன அடையாளமாக தேடலை காத்திரமாக்க வேண்டும். இலங்கையின் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்கள் விவசாயிகள் முற்போக்கான மத்தியதர வர்க்கத்தினருக்கான ஒரு முன்னணி பகுதியாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கான தேசியம் ஏன் அவசியமானது? இக்கேள்விக்கான தேடலாகவும், விசாரணையாகவும் முன்வைப்பாகவும் மலையக தேசியம் இனம் வர்க்கம் சார்ந்த ஆய்வு அமைகின்றது.

## தேசியம் இன அடையாளமும் வர்க்கமும்

தேசியம் என்பது முதலாளித்துவத்தின் விளை பொருள். முதலாளித்துவ பொருளாதார உற்பத்தியினை விரிவுபடுத்துவதற்கான சந்தை வசதிகளை ஏற்படுத்துவதற்கான வழிமுறையாகும். இனக்குழு அமைப்புக்கள் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம், பொதுவான மொழி என்பன சந்தைகளை உருவாக்குவதற்கான தேசியத்தை முன்னிருத்தும் நிபந்தனையாகும். ஐரோப்பிய கைத்தொழில் புரட்சி தொடங்கும் வரை தேசம், தேசியம் சார்ந்த அரசுகள் தோன்றுவதற்கு வழி ஏற்படவில்லை. இன்றைய நவீன காலத்தில் தேசியமும் தேசிய அரசுகளும் முதலாளித்துவத்தின் பொருளாதார தேவைகளை முன்னிருத்தியவையே. இன்னொரு வகையில் தேசம் என்பது மக்களை அடிப்படையாகக் கொண்டது. "குறிப்பிட்ட நிலப்பிரதேசம், பொருளாதாரம், தேசிய உணர்வு போன்ற நிலைகளைக் கொண்டுள்ள மக்கள் கூட்டத்தை தேசியம் என கருத்துரைக்கிறார்" (மாக்ஸியமும் தேசிய இனப்பிரச்சினையும் - ஸ்டாலின்) மற்றொரு வகையில் தேசியம் தேசியவாதம் என்ற மைய புள்ளியினையும் நோக்க முடிகின்றது. தேசியத்திற்கு தலைமை தாங்குபவர்கள் யார்?, தேசிய வாதத்தை முன்னெடுப்பவர்கள் யார்? என்ற வினாவும் முக்கியமானது. தேசம் என்பது கலாசார தேசியத்திற்கான அடிப்படையானதா அல்லது பொருளாதார நலன் சார்ந்த தேசியத்தின் நகர்வா? என்பதும் கவனத்துக்குரியவை. தேசம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை முன்னிருத்தி ஜனநாயக கோரிக்கைகளை முன்னெடுப்பதற்கான நிபந்தனையாக இருக்க முடியுமென தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்ற நூலில் விவாதித்துச் செல்லுகின்றார் லெனின். தேசம் என்பதற்கு நிலமானிய சமூக அமைப்பிலிருந்து விடுதலை ஜனநாயக தன்மையின் வெளிப்பாடுகள் முரணற்ற ஜனநாயகம், முற்போக்கான செயல் மார்க்கம் ஏனைய தேசிய இனங்களின் ஐக்கியம் போன்றவற்றை மாற்றத்திற்கு உட்படுத்தும் பாதைகளை திறந்துவிடும்.

தவிர தேசியவாதம் என்பது குறிப்பிட்ட இனக் குழுமத்தின் இனத்தூய்மையினை மட்டும் வெளிப் படுத்துவதாக அமையும். இன்று உலகில் நடக்கும் பெரும்பான்மையான போராட்டங்கள் தேசியவாத போராட்டங்களே. தேசியவாத போராட்டமானது தன் னுள் முரண்பாடுகளையும் முரணான ஜனநாயகத்தையும் பாசிச உட்கூறுகளையும் நிலமானிய அம்சங்களையும் உள்வாங்கிக் கொண்ட அதேவேளை ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துப் போவதாகவும் அமைந் திருக்கும் தேசிய இயக்கங்கள் சில முற்போக்கான அம்சங்களை பிரதிபலித்தாலும் உணர்ச்சிவசப்பட்ட நிலைப்பாடானது தோல்வியில் முடிந்த வரலாறுகள் பதிவுகளாக வெளிவந்துள்ளன.

தேசிய இனப் போராட்டங்களை முன்னெடுப்பதானது முதலாளித்துவ ஜனநாயகத்தை வலியுறுத்துவதற்காக முரணற்ற ஜனநாயக தன்மையினை பிரதிபலிக்க வேண்டும். முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான புரட்சியினை முன்னெடுப்பதானது முற்போக்கு நிலைமைக்கு இட்டுச்செல்லும். இதற்கு தொழிலாளர் வர்க்கமும் முற்போக்கு பாத்திரத்தினை வகிப்பதுடன் புத்திஜீவிகளும் இணைய வேண்டும் என லெனின் சுட்டிக்காட்டுகின்றார். தேசிய இனபோராட்டத்திற்கு தலைமை தாங்கும் பாத்திரத்தினை பாட்டாளி வர்க்கம் மிகக் கவனமாக கையாள வேண்டும். சீனாவில் வர்க்கங்களை பற்றிய ஆய்வுகளை செய்த மாவோ சேதுங் தேசிய இன அடையாள உறவுகளை பேணுகின்ற வகையில் அவர்களின் வர்க்க முத்திரையையும் கவனத்தில் எடுக்க வேண்டும். (சீனாவின் வர்க்கங்கள் பற்றிய ஆய்வு - மாவோ சேதுங்) ஆக, தேசிய இன விடுதலைக்கான போராட்டமானது அதற்கு தலைமை தாங்கும் இயல்புகளிலே வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது.

இதற்குள் தலித்தியம் சார்ந்த கருத்தியல்களையும் கவனத்தில் எடுக்க வேண்டிய அதேவேளை அதனை வர்க்கம் சார்ந்த ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். தமிழ் சூழலில் இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி சாதி அடையாளங்கள் அரசியலில் முனைப்போடு இணைந்து வருவதை மறுக்க முடியாது. சாதியம் நிலமானிய அமைப்பின் தொடர்ச்சி, வர்க்கமானது நவீன கைத்தொழிலுடன் ஏற்பட்ட வளரச்சி. இத்தகைய நிலையில் தமிழகத்தில் காணப்பட்ட தலித்தியத்தில் இயல்பான போக்குகளை இலங்கையில் காண முடியாது. ஆனால் சாதியத்துக்கான வலுவான அடித்தளமும் காணப்படுவதை மறுக்க முடியாது. இதனை தவிர்ப்பதற்கு 1967ல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் பொதுவுடைமை இயக்கத்தின் கீழ் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. பிறகு சாதியத்தின் தாக்கம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. (சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - வெகுஜன ராவணா)

தேசிய இனங்கள் சுயநிர்ணயம் பற்றியதான நவீன ஆய்வுகள் புதிய பரிணாமத்தை தருவதாக அமைகின்றன. மொழி இன தேசிய இனங்களுக்கிடையிலான சுய நிர்ணய உரிமைகள் மொழியின சிறுபான்மையினர் களுக்கான தேசிய சுயநிர்ணய உரிமைகள் பற்றிய ஆய்வுகளும் முக்கியமானவை. (முனைவர் கோ. கேசவன் - தமிழ் மொழி, இனம், நாடு) இன்னொரு வகையில் இன்றைய நவீன அரசாங்கங்களில் சுயநிர்ணய போராட்டங்கள் பற்றியும் அதன் பரிணாம வளர்ச்சி பற்றியும் நோக்குவதும் அவசியம். லத்தீன் அமெரிக்க நாடான "நிக்கரகுவா பாஸிஷ்டா சர்வதிகார ஆட்சியினை தூக்கியெறிந்து 1984ல் சாஸிஷ்டா அமைப்பு ஆட்சிக்கு வந்தது. அவர்கள் ஆட்சி காலப்பகுதியில் 80,000 - 100,000 இடையிலான தொகையைக் கொண்ட ஆறு இனத்தவர்களுக்கு தனியான சுயாட்சியலகுகளை வழங்கியது. ஒரு இனத்தின் மீது இன்னொரு இனம் ஆதிக்கம் செலுத்த முடியாது என பிரகடனப்படுத்தியது." இது முக்கிய நிகழ்வாக சர்வதேசத்தில் பார்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 1990 களில் இவ்வாட்சி தூக்கியெறியப்பட்டது. (இமயவர்மன் - சுயநிர்ணயம் பற்றி)

மற்றொரு முக்கிய போராட்டமாக குர்து தேசிய விடுதலை போராட்டமாக அவதானிக்கப்படுகிறது. ஈரான், ஈராக், துருக்கி, சிரியா ஆகிய இடங்களில் வசித்து வரும் மக்களின் தேசிய விடுதலை போராட்டம் முக்கிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது. இன ஒடுக்கு முறைக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் தங்களின் வாழிடங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் குர்து இன மக்கள் தேசிய இன உரிமைகளுக்காக போராடுகின்றனர். தவிர அப்போராட்டங்களில் இணைந் துள்ள வெவ்வேறு இனக் குழுக்களுக்கான உரிமை களையும் கவனத்தில் எடுத் துள்ளது. (எச்பீர்.முஹம்மது - குர்து தேசிய இன போராட்டம் ஓர் அறிமுகம்) "குர்துகள் வரலாற்று மற்றும் புவி கலாசார ரீதியாக தனித்த இனமாக வாழ்ந்து வருகின்றார்கள். சமாதான தீர்வு மூலம் தான் சாத்தியம் என்பது எனது நிலைப்பாடு என அப்துல்லா ஒசலான் குர்து தொழிலாளர் கட்சியின் தலைவரின் கூற்று சர்வதேச ரீதியாக நோக்கப்படுகின்றது.

இனம் வர்க்கம் தேசியம் ஆகிய எண்ணக்கருக்களும் நடைமுறைகளும் சமகால நிகழ்வுகளையொட்டி பார்க்கப் படுகின்றது. ஏனெனில் "தேசியவாதம் இயற்கையானது என்றோ, நிரந்தரமானது என்றோ எதுவும் இல்லை என்பதும் தேசியவாதம் என்று குறிப்பிட்ட ஒரு கால சூழலில் ஒரு சமூதாயத்தின் அரசியல் பிரச்சினை களின் விளைவாக கட்டிவளர்க்கப்படும் என்பதுமே". (இமயவர்மன் - சுயநிர்ணயம் பற்றி) என விவாதிப்பதும் அர்த்தமுள்ளதாக காணப்படுகின்றது. தேசிய இனங் களுக்கிடையிலான சுயநிர்ணய உரிமையும் முரண் பாடுடைய ஜனநாயகத்தன்மை முறையும் இன ஒடுக்கு முறையும் நிகழும் போது ஒரே மொழி பேசுகின்ற மொழி வழி தேசிய சிறுபான்மை இனங்கள் சுயநிர்ணய உரிமைகளை தேடுவதற்காகவும் தவிர்க்க முடியாத நியதியாக வந்தடைவதையும் இயங்கியல் ரீதியாக பார்க்க முடியும் என்பதனை நவீன ஆயவுகள் வெளிப்படுத்து கின்றன.

## மலையக மக்களின் வரலாறும் சமூக உருவாக்கமும்

ஆரம்பக்கால இலங்கையில் மன்னராட்சி முறையில் இராச்சியங்களாக பிளவுண்டு இருந்தன. பின்னர் போர்த்துக்கேயர்(1505) ஒல்லாந்தர்(1698) ஆங்கிலேயர் (1796) ஆகியோர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சிசெய்தனர். குறிப்பாக ஆங்கிலேயர் 1815ஆம் ஆண்டு கண்டியினைக் கைப்பற்றியவுடன் இலங்கையினை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் இலங்கையில் பல்வேறு அரசியல், பொருளாதார சமூக மாற்றங்களைக் கொண்டு வந்தது. விசேடமாக

***தேசியவாதம் என்பது குறிப்பிட்ட இனக் குழுமத்தின் இனத்தூய்மையினை மட்டும் வெளிப்படுத்துவதாக அமையும். இன்று உலகில் நடக்கும் பெரும்பான்மையான போராட்டங்கள் தேசியவாத போராட்டங்களே. தேசியவாத போராட்டமானது தன் னுள் முரண்பாடுகளையும் முரணான ஜனநாயகத்தையும் பாசிச உட்கூறுகளையும் நிலமானிய அம்சங்களையும் உள்வாங்கிக் கொண்ட அதேவேளை ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துப் போவதாகவும் அமைந் திருக்கும் தேசிய இயக்கங்கள் சில முற்போக்கான அம்சங்களை பிரதிபலித்தாலும் உணர்ச்சிவசப்பட்ட நிலைப்பாடானது தோல்வியில் முடிந்த வரலாறுகள் பதிவுகளாக வெளிவந்துள்ளன.***

கண்டியினைக் கைப்பற்றிய நிகழ்வானது வரலாற்றுப் பதிவாக பேசப்படுகின்றது. கண்டிப்பகுதியில் காணப்பட்ட விசேட புவியியல் அமைப்பு, காலநிலை என்பன விவசாய உற்பத்தி தொடர்பான புதிய தேடல்களையும் ஆய்வுகளுக்கான பாதைகளையும் திறந்துவிட்டிருந்தன. ஆங்கிலேயரின் வியாபார தந்திரமும் இலாப வேட்கையும் பொருள் உற்பத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கான புதிய திசைவழிகளைக் காட்டின.

ஐரோப்பிய வர்த்தகப் போட்டியில் பிரித்தானியாவின் பங்கு அளப்பரியது. வாசனை திரவிய பொருட்கள் ஒரு புறம், உற்சாகப் பானங்களை தயாரிக்கும் பொருட்கள் இன்னொரு புறமாக வியாபாரம் வளர்ச்சியடைந்திருந்தது. குறிப்பாக கோப்பி பயிர்ச் செய்கை ஐரோப்பிய நாடுகளில் பிரபல்லியமடைந்திருந்தது. மறுபுறத்தில் மேற் கிந்திய தீவுகளின் கோப்பி உற்பத்தியும் வீழ்ச்சியடைந் திருந்தது. இதனைச் சாதகமான பயன்படுத்தி கோப்பி பயிர்ச்செய்கையினை இலங்கையில் வெற்றிகரமாக செய்யமுடியும் என நம்பினர். கண்டிப்பகுதியில் காணப்பட்ட காலநிலை மண்வளம் என்பன கோப்பிப் பயிர்செய்கைக்கு வாய்ப்பாக அமைந்தன. ஏற்கனவே ஆங்காங்கே இங்குள்ள பூர்வீக குடிகளால் கோப்பிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அவை வர்த்தக நோக்கம் கொண்டதல்ல. ஆனால் பிரித்தானியர் கோப்பிச் செய்கையினை பிரதான வர்த்தக நோக்காக பயன்படுத்தினர். 1823ஆம் ஆண்டு கம்பளை அருகே யுள்ள சிங்க பிட்டிய என்ற கிராமத்தில் கெப்டன் ஹென்றி போர்ட் என்ற பிரித்தானியர் முதல் முறையாக கோப்பிச் செய்கையினை வெற்றிகரமாக ஆரம்பித்தார்.

கோப்பிச் செய்கையினை சிறப்பாகச்செய்த கெப்டன் ஹென்றி போர்ட் அக்காலத்தில் 600 பவுண்கள் வரு மானமாக பெற்ற நிகழ்வானது மலையகத் தமிழர்களின் வாழ்வினை மாத்திரமல்ல தலைவிதியினையும் அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு மாற்றி விட்டது என "இருபதாம் நூற்றாண்டின் நவஅடிமைகள்" என்ற நூலில் பி.ஏ.காதர் விளக்கிச் செல்கின்றார். இலாபகரமாக கோப்பிச்செய்கை பல தோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இத்தோட்டங்களில் வேலை செய்வதற்கு சிங்கள மக்களுக்கு விருப்பமில்லை. தவிர அவர்கள் கிராமியப் பொருளாதாரத்துடன் முழுமையாக இணைத்துக் கொண்டமையினாலும் ஆங்கிலேயர் தொடங்கிய கோப்பித் தோட்டங்களில் வேலைப்பார்க்க வரவில்லை. எனவே இத்தோட்டங்களில் வேலைப்பார்க்க மலிவான உழைப்பாளர்கள் தேவைப் பட்டார்கள். இதற்காக தென்னிந்தியப் பகுதியிலிருந்து தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்திக் கொண்டார்கள். அதேவேளை தென்னிந்தியாவிலிருந்து சுயமாக தொழில்தேடி வந்தவர்களையும் ஆங்கிலேயர் பயன்படுத்தி வெற்றிகரமாக கோப்பிச் செய்கையினை மேற்கொண்டனர்.

மனித நடமாட்டங்கள் இல்லாத மலையகத்தின் சில பகுதிகளில் தென்னிந்திய தோட்டத் தொழிலாளர்கள் குடியமர்த்தப்பட்டார்கள். இவர்களின் உழைப்பினை பயன்படுத்தி உருவாக்கிய கோப்பித் தோட்டங்களை மையமாக கொண்ட முதல் மலையக சமூகமாக வரலாற்றுப் பக்கத்தில் முதல் அத்தியாயமாக பதிவு செய்து கொள்கின்றது. ஐக்கிய அமெரிக்காவுக்கு அடிமைகளாக கொண்டு சென்ற ஆபிரிக்க கறுப்பின மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு நிகரான துன்பங்களையும் மலையக மக்கள் அனுபவித்தனர் என்பதையும் மனங் கொள்ளவேண்டும்.

1870களில் உச்ச நிலையினை அடைந்திருந்த கோப்பிச் செய்கை ஹெமிலியா வெஸ்ட்ராரிக்ஸ் (Hemileia Vastratrx) என்ற இலைச்சுருட்டி நோய் கோப்பிச் செய்கையினை தாக்கத் தொடங்கின. சடுதியாக தாக்கிய இந்நோயின் காரணமாக 1823இல் ஆரம்பிக்கப் பட்ட கோப்பிச்செய்கை 1890இல் வீழ்ச்சியினை பதிவு செய்து கொண்டது. இக்காலக்கட்டத்தில் கோப்பி தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளிகள் மாத்திரமல்ல கோப்பிச் செய்கையில் ஈடுபட்டிருந்த தோட்டத்துரைமார்களும் பாதிக்கப்பட்டனர். கோப்பிப் பயிரிச் செய்கையினை நம்பி உருவாக்கப்பட்ட தோட்டங்கள், அதனைச் சார்ந்து நின்ற நிறுவனங்கள் ஆட்டம் கண்ட வேளையில் தேயிலை கைகொடுக்கும் விவசாய உற்பத்தி பொருளாக மாறியது.

தனது 17வது வயதில் பேராதனைப் பூங்காவில் தேயிலைச் செய்கையினை வெற்றிகரமாக மேற்கொண்ட ஜேம்ஸ்டெயிலர் அதனை வர்த்தகப் பயிராக விரிவு படுத்தினார். இதற்காக லூல்கந்துர என்னுமிடத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலைப் பயிர்செய்கைக்கான கட்டமைப்பினை உருவாக்கினார். இதனைத் தொடர்ந்து மலையகத்திலுள்ள பல்வேறு இடங்களில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டன. தேயிலை உற்பத்தியானது கோப்பி பயிர்ச்செய்கையினை போன்ற தல்ல. பாரிய அளவிலான தொழிற்சாலைகளும் தேர்ச்சி யுள்ள தொழிலாளர் படையணியும் தேவை. இதற்கமைய ஏகாதிபத்திய கம்பனிகள் இலங்கைக்கு கொண்டுவரப் பட்டன. பிரித்தானியா சர்வதேச அரங்கில் மூலதனத்துவம் பெற்ற ஏகாதிபத்தியமாக வளர்ச்சி யடைந்தது". (பி.ஏ.காதர் - இருபதாம் நூற்றாண்டின் நவ அடிமைகள்)

தேயிலைச் செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து பெருந்தொகையான தொழிலாளர்கள் கொண்டுவரப் பட்டனர். மனித சஞ்சாரமற்ற பகுதிகள், அடர்ந்தகாடுகள், மோசமான காலநிலை, முன்பின் பார்த்திராத வன விலங்குகள் இவற்றை எல்லாம் எதிர்கொண்டு தனது உழைப்பினை வழங்கி வளம் கொழிக்கும் பூமியாக மாற்றினர். தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளி லிருந்து தூத்துக்குடி துறைமுகத்திற்கு கால்நடையாகவும் பின் கப்பலிருந்து இறங்கி தலைமன்னாரிலிருந்து மீண்டும் கால்நடையாக 300 கிலோமீற்றர் நடந்தே வந்த இனக் குழுமம் புதிய உற்பத்தி உறவுக் கலாசாரத்தை தோற்றுவித்தது.

இதே காலப்பகுதியில் றப்பர் பயிர்ச்செய்கையும் 1877இல் ஆரம்பிக்கப்பட்டது. மலையகத்தின் மேற்கு, தெற்கு மாகாணங்களில் றப்பர் செய்கை விரிவு படுத்தப்பட்டது. இவ்வாறான தோட்டங்களில் வேலை செய்யவும் தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்தே வரவழைக்கப்பட்டனர்.

றப்பர் மரமானேன்
நாலுபக்க வாதானேன்
இங்கிலிஸ் காரனுக்கு
ஏறிபோகக் காரானேன்

என்ற மலையக நாட்டார் பாடல், றப்பர் செய்கையும் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையும் இணைந்த போர்க் குரலாக வெளிப்பட்டு நிற்பதை அடையாளம் காணலாம். (சி. வி வேலுப்பிள்ளை - மலை நாட்டுப்பாடல்கள்)

இவ்வாறு கோப்பிச் செய்கை, தேயிலைச் செய்கை, றப்பர் செய்கை ஆகிய உற்பத்தி உறவுக் கடமையுடன் மலையக சமூகம் இனக்குழுமமாக மேற்கிளம்புவதை அடையாளம் காணமுடியும். மேலும் மத்திய மலை நாட்டிலும் ஊவா, சப்ரகமுவா பகுதிகளிலும் குடியேறிய மலையக மக்களைப் பின்வருமாறும் நோக்கலாம்.

1. வரலாற்று ரீதியாக பூர்வீகமாக வாழ்ந்த தமிழர்கள்
2. 1815 பிரித்தானியர் கைப்பற்றியவுடன் நகர சுத்திகரிப் பாளர்களாக கொண்டு வரப்பட்டவர்கள்
3. கோப்பி, தேயிலை, றப்பர் பயிர்ச்செய்கைகளுக்காக கொண்டுவரப்பட்ட தமிழர்கள்.

இவர்களுடன் தெலுங்கர்கள், மலையாளிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்குவர். இவர்களில் பெரும்பான்மை மலையக தோட்டத் தொழிலாளர்களுடன் இணைந்துவிட்டனர். மரபுரீதியாக வாழ்ந்து வந்த தெலுங்கர்கள் சிங்கள மக்களுடன் சங்கமித்துள்ளனர். இவ்வாறான வகைப்பாடு நீண்ட கருத்தாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

மலையக சமூக உருவாக்கத்திற்கு இனக்குழும பண்பாட்டு அடையாளங்கள் முக்கியமானவை. தென்னிந்தியாவில் நிலப் பிரதிநிதித்துவத்தின் கீழ் கட்டுண்டு பண்ணை அடிமைகளாகவும், விவசாயிகளாகவும், கூலி அடிமைகளாகவும் காணப்பட்ட இவர்கள் மலையகப் பகுதிகளில் குடியேறியதுடன் பரந்த தொழிலாளி வர்க்கமாக மாற்றப்பட்டனர். ஒவ்வொரு தோட்டங்களிலும் இருண்ட லயன் அறைக்குள் சிறை வைக்கப்பட்டிருந்தாலும் தென்னிந்தியாவில் காணப்பட்ட பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றி வந்தாலும் மலையகப் பிரதேசத்துக்குரிய புதிய பண்பாட்டுக்குரிய விடயங்களையும் கடைப்பிடித்தனர். ஆனால் இப்பண்பாடுகளைப் பேணும்போது கூட்டு முறை வாழ்வினை வெளிப்படுத்தினர். "திருமணம், பூப்புனித நீராட்டு, மரணச்சடங்கு சார்முறைகள் இந்துமுறைப்படி நடந்தன. ஜாதி மணவாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் ஒன்றாகச் செயற்பட்டது. அது கூலி அடிமை முறையின் முனனே ஒரு சமூக அந்தஸ்தை நிலைநாட்டும் கருவியாக செயற்படமுடியாமல் மெல்ல மெல்ல நெறுங்கியது. கூலி அடிமைகளாக இவர்கள் தங்களுக்குள்ள தவிர்க்க முடியா வண்ணம் 'வர்க்கம்' என்ற புதியவகை உறவுத்தளத்தை நிலை நாட்டினர். வேலைநிறுத்தப் போராட்டங்கள் அவற்றை உணர்வு நிலைக்கு வார்த்துச் சென்றன" (எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள் ஆய்வு - பக்கம் 26)

முப்பத்து மூன்று சாதிகள் மலையகப்பகுதிகளில் காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. (இலங்கை மலையகத்தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும் - பேரா .க. சிவத்தம்பி) சிலர் தலித்திய மக்களே அதிகம் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்ததாகவும் கூறுகின்றனர். (கள்ளத்தோணி - N. சரவணன்) ஆனால் வாழ்வுக்கான போராட்டம், தொழிற்சங்க போராட்டங்கள் தொடர்ச்சியாக இயங்கி வந்ததன் காரணமாக சாதிய மேலாதிக்க உணர்வு தளர்வடைந்த நிலை காணப்படுவதையும் காணமுடிகின்ற அதேவேளை சாதி கட்டமைப்பானது இன்னும் செயற்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

ஆரம்பக்காலங்களில் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு நெருக்கமானதாக இருந்தது. 1910ம் ஆண்டுக்குப் பிறகு தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான போக்குவரத்து இறுக்கமானது. இதன்விளைவாகத் தொழிலாளர்கள் தோட்டப்புறங்களில் நிரந்தரமாகத் தங்கினர். இதன் விளைவாக இலங்கை சுதந்திரம் அண்மித்த காலப்பகுதியில் தோட்டத் தொழிலாளர்களின் சனத்தொகை அதிகரித்தது. இலங்கையின் இரண்டாவது தேசிய இனமாக வளர்ந்திருந்தனர். 'இலங்கையில் நிரந்தர குடிகளாக அமைந்தபின் இந்தியாவுடனான தொடர்பு படிப்படியாகக் மறைந்தது. 1954ம் ஆண்டுக்குபின் இலங்கை - இந்திய போக்குவரத்தும் தடுக்கப்பட்டு நிரந்தரமாகவே அற்றுப்போனது. அத்துடன் புதிய பரம்பரை இலங்கையில் பிறந்ததாக இருந்தது. ஆகவே தோட்டத் தொழிலாளர்கள் முற்றிலும் புதிதான சமூக சக்திகளாயினர்." (எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள் ஆய்வு)

அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டாலும் இலங்கை நாட்டில் முக்கிய அங்கமாக மலையக மக்கள் என்ற கருத்தாக்கம் பரிமாணமடைந்தது. இதற்கான சமூகவியல் பின்னணியும் அரசியல் பின்னணியும் கனதியானவை. ஆரம்பத்தில் தனிநபர்களாகவும், சிறுகுழுக்களாகவும் போராடிவந்த இவர்கள் இலங்கை - இந்திய காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்னர் இடதுசாரி இயக்களுடனும் துறைமுகத் தொழிலாளர்களுடன் இணைந்தே போராடினர். குறிப்பாக ரொஸ்கியவாத இயக்கங்களுடன் இணைந்தே போராடினர். இடதுசாரி தலைவர்களும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களை முன்னணிப் பாத்திரமாகக் கருதினர். (குமாரி ஜெயவர்த்தனா - இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள்) 1947ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1940ல் தொழிலாளர் வர்க்கத்திற்காக போராடி சூடுபட்டு உயிரிழந்த முதல் வர்க்கப்போராளி முல்லோயாக் கோவிந்தனையும் இக்காலக்கட்டத்தில் மலையகம் பதிவு செய்தது கொள்கின்றது." (எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள் ஆய்வு - பக்கம் 26)

இவர்களின் வர்க்க - இனத்துவ வளர்ச்சியைக் கண்டு பொறுக்கமுடியாத இனவாதிகள் 1948ஆம் ஆண்டு இவர்களின் வாக்குரிமையைப் பறித்தனர். இதற்கு யாழ்ப்பாணத்து மேட்டுக் குடி பாராளுமன்ற உறுப்பினரும் துணைபோனார். இவர்கள் அரசியல் அனாதையாக்கப்பட்டாலும் தொடர்ந்தும் தமது இருப்புக்காகப் போராடியே வந்துள்ளனர். இலங்கை - இந்திய கூட்டு சதி சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மலையக மக்கள் சிதைக்கப்பட்டாலும் தொடர்ந்து 1946இல் உருளுவள்ளி போராட்டம் தொடக்கம் 1977ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு போராட்டங்கள் மலையக மக்களை வர்க்க இன அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களாக மலையக வரலாற்றுப் பக்கத்தில் பதியப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்காக தோட்டத் தொழிலாளர்கள் ஒரு சமூகமாக தனித்துவமான தன்னடையாளங்களை வெளிப்படுத்தி வர்க்க அடிப்படையில் இனக்குழுமாக மேலேழுந்து நிற்பதை இயங்கியல் பரிமாணத்துடன் வெளிப்பட்டு நிற்பதை அவதானிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். மேலும் "மலையகத்தமிழர்" என்ற சொல் எவ்வாறு வழக்கத்திற்கு வந்தது என்தை மறந்து விடுவதால் மலையகத்தில் வாழ்வோரை மட்டுமே அது குறிக்கின்றது என எண்ணத் நேருகின்றது. பிரித்தானிய ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து வந்த மக்கள் அனைவரையும் இந்தியர் என்ற அடையாளம் காட்டும் வழமையிருந்தது. இந்திய சேனகர் போன்ற சொற்றொடர்கள் மலையகத்திலும், பிறப்பகுதிகளிலும் கூலி உழைப்புக்காக கொண்டு வரப்பட்ட மக்களும், அவர்களது வரவை ஒட்டி இங்கு வந்த 'இந்திய' அடைமொழி அவர்களை அந்நியராகவே அடையாளங் காட்டியமையால் இலங்கை மண்ணில் உள்ள உரிமைகளை வலியுறுத்தும் நோக்கிலே மலையகத்தமிழர் என அழைக்கும் பழக்கம் உண்டாயிற்று" (சுயநிர்ணய உரிமையில் முஸ்லிம் மலையக மக்கள், இமயவரம்பன்) என்ற மலையகம் என்ற அடையாள எழுச்சிப்பற்றியும் கவனம் செலுத்தவேண்டும்.

## மலையக தேசிய இன வர்க்கமும் சமூக இசைவாக்கமும்

இருநூறு வருடங்களைக் கொண்ட மலையகச் சமூகம் இலங்கையின் தவிர்க்க முடியாத அங்கமாக விளங்குகின்றனர். இலங்கை சனத்தொகையில் சுமார் இருபது இலட்சமாக கணக்கிடப்படுகின்றது. இவர்கள் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களிலும், எனைய ஐந்து மாவட்டங்களிலும் செறிவாகவும் அண்ணளவாகவும் வாழ்ந்து வருகின்றனர். பெரும்பான்மை மக்கள் ஒரு தேசியமாகவும் வடக்கு கிழக்கினை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள், முஸ்லிம்கள் தேசிய சிறுபான்மை இனமாகவும் வாழ்ந்து வருகின்றனர். ஒரு மொழி பேசுகின்ற வடக்கு கிழக்கு தமிழர்கள், முஸ்லிம்கள் தனித்துவமான தேசிய அடையாளங்களை பெறுகின்ற அதேவேளை அதற்கு சமாந்தரமாக ஒரேமொழி பேசும் மலையக மக்களும் தேசிய சுயநிர்ணய உரிமைகளுக்கான வளர்ச்சி நிலைகளை பெறுவதற்கான வலிமையான சமூகக்காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் இலங்கை - இந்திய கப்பல் போக்குவரத்து தடைப்பட்ட காரணிகளும், வேறு வலுவான பொருளாதார சமூக காரணிகளும் உள்ளன. போக்குவரத்து தடைப்பட்ட போது தோட்டங்களிலே தொழிலாளர்கள் 10 தலைமுறைகளாக மலையகத்தில் பிறந்து வாழ்ந்து தோட்டப்புற வாழ்வியலுடன் இரண்டறக் கலந்துவிட்ட தலைமுறையே இன்று உள்ளது. மலையகத் தோட்டங்களின் மத்தியிலிருந்து மேற்கிளம்பியுள்ள அரசியல் முனைப்பான போக்குகளும் தங்களது இருப்பினை அடையாளப் படுத்துவதை உறுதிப்படுத்தியுள்ளது. மலையக மக்கள் அரசியலில் பலமான வர்க்கமாக எழுந்து வருகின்ற போது சிங்களப் பேரினவாதிகள் இவர்களை சிதைப்பதற்கான பல்வேறு விடயங்களைக் கையாண்டனர். தவிர வடக்கு கிழக்கில் வாழும் பூர்வீக தமிழர்கள் கூட இவர்களை அங்கீகரிப்பதற்கு தயக்கம் காட்டினார்கள். இவ்வாறான பல ஒடுக்குமுறைகளையும் அடக்குமுறைகளையும் தாண்டி தனது சமூக இருப்பினை உறுதிப்படுத்தினர். "தோட்டக்காட்டான், கள்ளத்தோணி போன்ற இழிவு படுத்தும் அடையாளங்களைத் தாண்டி, தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர், இந்திய வம்சாவழியினர் போன்ற அடையாளங்களைத் தாண்டி மலையகத் தமிழர் என்ற அடையாளம் இன்று வலுவாக வேரூன்றி விட்டது. கடந்த அரைநூற்றாண்டு கால வளர்ச்சி இது. குடிசன மதிப்பீடு போன்ற அரச ஆவணங்களில் இவர்கள் இந்தியத் தமிழர்கள் என குறிப்பிடப்பட்ட போதிலும் இவர்கள் Upcountry Tamils அல்லது Hill Country Tamils என அழைக்கப்படுகின்றனர். (இலங்கை தமிழ் இலக்கியத்தில் இனத்துவ அடையாளம், மலையக அடையாள உருவாக்கமும் மலையக இலக்கியமும் - பேரா. எம். ஏ. நுஃமான்)

இன்னொரு வகையில் தென்னிந்திய பண்பாடுகளை கொண்டவர்களாக இருப்பதால் இந்திய சார்பான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் அதனுடன் இணைந்து இனத்துவ அடையாளங்களை காண வேண்டுமென கருதுகின்றனர். ஏனெனில் இந்திய சார்பான நிலைப்பட்டவர்கள் இந்திய வர்த்தக சமூக அமைப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் ஆவர். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடமும் தொழில் முறை உறவுகளும் மலையகத் தமிழர் என்ற உணர்வு நிலையினை நோக்கியே நகர்கின்றது. "தொடக்கத்தில் அவர்கள் மீது இந்திய அடையாளம் ஒன்றைத் திணிக்கும் முயற்சி ஓரளவு வென்றாலும் காலப்போக்கில் அந்த அடையாளம் பொருளற்றது எனப் பரவலாக ஏற்கப்பட்டது. கடந்த அரை நூற்றாண்டினுள் அவர்களுடைய அடையாளம் என்ற நாடும் அவர்களின் பெரும்பாலானோரின் வாழிடமும் குறிக்கும் ஒன்றாயுள்ளது. இப்பின்னணியிலேயே அவர்களுடைய அரசியல் வரலாற்றையும் தேசிய இனமான விருத்தி பெற்றதையும் கவனிக்க வேண்டும். (நவ கொலனியமும் தேசியமும் மலையக தமிழரின் தேச இன அடையாளத்தை மனதில் நிறுத்தி நவ கொலனியத்தின் கீழ் தேசியமும் தேசியமாதலும் பற்றிய குறிப்பு - பேரா. சிவசேகரம்) என்ற சிந்தனை வளர்ச்சிப் போக்குகளையும் அவதானிக்க வேண்டும்.

மலையக மக்கள் தேசிய கருத்துருவாக்கத்திற்கு சமூக இயக்கங்களும் காத்திரமான பங்களிப்பினை வழங்கியுள்ளன. 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு இவர்கள் மத்தியிலிருந்து உருவாகிய சிறு மத்தியத்தர வர்க்கம் கருத்தியல் ரீதியான தளங்களை முன்னகர்த்தியது. குறிப்பாக இடதுசாரி இயக்கங்களின் தொழிற்பாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களின் யதார்த்த நிலையினைப் பதிவு செய்து வருகின்றன. இலங்கையின் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த சண்முகதாசன் "மலையக மக்களை தேசிய இனத்துக்குரிய வளர்ச்சி யினை அவதானிக்க தவறிய போதும் இலங்கையில் ஏற்படப்போகும் புரட்சிகர மாற்றங்களுக்கு மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் முன்னணிப் படையாக அமைய வேண்டும் எனக் கருதி அதற்கான வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்தார்." (சண்முகதாசன் கட்டுரைகள்) தொடர்ந்து மலையக மக்களின் வாழ்வியல் யதார்த்தத்தை புரிந்து கொண்ட மலையக மக்கள் இயக்கம், மலையக வெகுஜன இயக்கம், மலையக இளைஞர் முன்னணி, கீழைக்காற்று இயக்கம் என்பன மலையக தேச இன வளர்ச்சிக்குரிய அடையாளங்களை முன்னிறுத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தன. இலங்கை கம்னியூஸ்ட் கட்சி (இடது) 1991ஆம் ஆண்டு (தற்போது புதிய ஜனநாயக மாக்ஸிய லெனினிச கட்சி) மாநாட்டில் மலையக மக்களை தேசிய இனமாக அங்கீகரித்து அதற்கான வேலைத்திட்டங்களை முன் னெடுத்து வருகின்றது. தொடர்ந்து மலையக மக்கள் முன்னணி புதிய பண்பாட்டு அமைப்பு, தோட்டத் தொழிலாளர் தேசிய சங்கம் போன்ற பல சமூக இயக்கங்கள் மலையக மக்களுக்கான தேசிய அடை யாளங்களை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தி வருகின்றன. (இயக்கங்களின் மாநாட்டு அறிக்கைகள், நேர்காணல்கள்)

மலையக மக்கள் மத்தியில் பலமான தொழிற்சங்கமாக அரைநூற்றாண்டு காலமாக தொழிற்சங்க பணிகளை முன் னெடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடி சார்ந்த அரசியலை முன்னெடுத்த அதே வேளை அது இந்திய சார்பான கருத்தியலை தொழிற் சங்கங்களினூடாக முன்னெடுத்தது. அதனுடைய யதார்த்த நிலைமையை உணர்த்த சிலர் அதிலிருந்து பிரிந்து மலையக மக்களினுடைய இனத்துவ அடையாளங்களை முன்னெடுப்பதற்கு சில பணிகளையும் செய்து வரு கின்றனர். தவிர வடக்கு கிழக்கு தேசியவாத இயக்கங் களின் போக்குகள் மலையகத்தில் செல்வாக்குச் செலுத்தி னாலும் அவையும் வெற்றிப் பெற முடியாத நிலையிலேயே காணப்பட்டது. பேரினவாத அடக்குமுறையின் காரணமாக மலையக மக்கள் சார்பளவில் வடக்கு கிழக்கு இயக் கங்களுடன் இணைந்தாலும் யதார்த்தமானது வெற்றிபெற முடியாத ஒன்றாகிவிட்டது. தமிழ் தேசிய வாதம் தனது விடுதலைக்கான மார்க்கத்தை இந்தியாவிலும் ஏகாதிபத்திய நாடுகளின் உறவுகளிலுமே வழிநடத்திச் சென்றது. ஆனால் மலையக மக்கள் தங்களுடைய பிரச்சினை களுக்கு ஒருகாலமும் இந்தியாவையோ, ஏகாதிபத்திய நாடுகளையோ சார்ந்திருக்கவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத் தின் மூலம் நாடற்றவர்களின் பிரஜாவுரிமை பிரச்சினை தீர்க்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு இலங்கைப் பாராளு

> ***வர்க்க – இனத்துவ வளர்ச்சியைக் கண்டு பொறுக்கமுடியாத இனவாதிகள் 1948ஆம் ஆண்டு இவர்களின் வாக்குரிமையைப் பறித்தனர். இதற்கு யாழ்ப்பாணத்து மேட்டுக் குடி பாராளுமன்ற உறுப்பினரும் துணைபோனார். இவர்கள் அரசியல் அனாதையாக்கப்பட்டாலும் தொடர்ந்தும் தனது இருப்புக்காகப் போராடியே வந்துள்ளனர். இலங்கை – இந்திய கூட்டு சதி சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மலையக மக்கள் சிதைக்கப்பட்டாலும் தொடர்ந்து 1946இல் உருளுவள்ளி போராட்டம் தொடக்கம் 1977ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு போராட்டங்கள் மலையக மக்களை வர்க்க இன அடையாளங்களை உறுதிப்படுத் துவதற்கான ஆவணங்களாக மலையக வரலாற்றுப் பக்கத்தில் பதியப்பட்டுள்ளன.***

மன்றத்தில் மலையக மக்கள் மீது திணிக்கப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் இல்லாதொழிக்கப்பட்டு அனை வரும் இலங்கையரே என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்நிகழ்வு மலையக மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான இன்னொரு பரிமாணமாகக் கொள்ள முடியும்.

மலையகத்தில் மேற்கிளம்பியுள்ள புத்திஜீவிகள் மலையக தேசிய சிந்தனைகளை முன்னிறுத்தி அதற்கான கருத்தியல் தளங்களையும் விரிவுபடுத்தினர். 1960களில் இச்சமூகத்துடன் உருவாகிய மத்தியதர வர்க்கம் மலையக மக்கள் தொடர்பான பல்வேறு கருத்தாடல்களை முன்வைத்தது. இதன் விளைவாக மலையக மக்கள் இயக்கம், மலையக இளைஞர் முன்னணி, மலையக வெகுஜன இயக்கம் போன்ற இயக்கங்களின் வளர்ச்சி புதிய திசைமார்க்கத்தை ஏற்படுத்தியது. "மலையக மக்கள் தேசிய இனத்துக்குரிய அடையாளங்களுடன் வளர்ச்சியடைந்துள்ளனர்" (பி. ஏ. காதர் - சுயம், சுயநிர்ணய உரிமை) "எப்படி ஒரு சமூகம் காடுகளை அழித்து நிலங்களை உருவாக்கி உற்பத்தி கலாசாரத்தை தோற்றுவித்து மனித நாகரிகத்துக்கான இருப்பினை உறுதி செய்ததோ அதனை போல மலையக மக்கள் தனது இருப்பினை உறுதி செய்வதற்கான அடையாளத் தினை பெறுகின்றனர். (எல். சாந்திகுமார் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பருவ இதழ்) "மலையக மக்கள் வர்க்க அடிப்படையில் ஒடுக்கப்படுவதாலும் பேரினவாத அடக்குமுறையின் விளைவாகவும் அவர்கள் தேச இனமாக வளர்ச்சியடைய வேண்டியவர்கள்" (பி. மரியதாஸ் - வீரகேசரி வார வெளியீடு) "மலையக மக்கள் உணர்வு நிலையில் தோட்டப் புறவியல் வாழ்வியலோடு ஒன்றி இருப்பதாலும் தனித்துவமான கலாசார நடைமுறைகளை பிரதிபலிப்பதாலும் அரசியல் ரீதியான அணுகு முறைகளாலும் தேசிய இனத்துக்கான வளர்ச்சியை பெறுகின்றனர். (திரு. அ. லோரன்ஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம் அரசியல்- அரசியல் தீர்வு) "மலையக மக்கள் பேரினவாதிகளால் விசேடமான சூழ்நிலைகளில் அடக்கப்படுவதாலும் அவர்களின் வளர்ச்சியை கண்டு அஞ்சுவதன் மூலம் மலையக மக்கள் தனித்துவமான இனமாக அங்கீகரிக்கப்படுகின்றனர். (இ. தம்பையா – மலையக மக்கள் என்போர் யார்?) இவ்வாறு விஞ்ஞானபூர்வமான காரணிகளை முன்வைத்து மலையக மக்கள் தேசிய இனத்துக்குரிய தேடல்களையும் ஆய்வுகளையும் பல சமூக அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன.

ஏனைய மொழிவழி தேசிய இனங்களின் நிலைப் பாடுகளும் மலையக மக்களின் பேரினவாத ஒடுக்கு முறைகளுக்கு மற்றும் இனமாக அடக்கப்படுவதாலும் சாராம்சத்தில் வர்க்க சுரண்டல்களுக்கு உட்படுத்துவ தாலும் தேசிய இனத்துக்குரிய அடையாளங்களைப் பெறுகின்றனர். எனவே இனம், வர்க்கம், தேசியம் என்பதற்கான அடிப்படை விடயங்களுக்கு உட்பட்டு கனதியான சமூகமாக மேலெழும்புகின்றனர். வடக்கு கிழக்கை பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்து வரும் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மை தேசிய இனங் களிலிருந்து புவியியல் அடிப்படையில் பண்பாட்டு கலாசார வேறுபாடுகள் அடிப்படையிலும் மாறுபட்டு இருப்பதுடன் ஒரே மொழி பேசும் மற்றொரு தேசிய இனமாக வளர்வதற்குரிய வளர்ச்சி நிலையினையும் மலையக மக்கள் தவிர்க்க முடியாதபடி வந்தடைகின்றனர். இலங்கையில் முரணான ஜனநாயக சூழலும் ஏகாதிபத்திய நவ தாராள, பேரினவாத நிகழ்ச்சி நிரலும் தேசிய சிறுபான்மை இனங்களுக்கு அச்சுறுத்தலூட்டுவதாக உள்ளன. இவற்றிற்கு எதிராக இலங்கையில் ஒடுக்கப் படும், அடக்கப்படும் தொழிலாளர்கள், மாணவர்கள், புத்திஜீவிகள் போன்றவர்களுடன் இணைந்து புரட்சிகர மாற்றங்களுக்கு முன்னணிப் படையாக அமைவதற்கு மலையக மக்கள் தேசிய இனமாக வளர்வது அவசிய மாகும். ஒட்டுமொத்தமாக இலங்கையில் ஏற்படுகின்ற வர்க்க அரசியலினூடாக புரட்சிகர மாற்றங்களுக்கு மலையக மக்கள் இயங்குவதற்கான தேசிய இனத்துக் குரிய பண்பு ரீதியான வளர்ச்சி புதிய திசை மார்க்கத்திற்கு இட்டுச் செல்லும்.

## முடிவுரை

உலக நாடுகள் இனத்துவ உரிமைக்காகவும், மானிட நீதிவேண்டியும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. குறிப்பிட்ட இனக்குழுக்கள் தங்களது சுயநிர்ணய உரிமைக்காக போராடும் போது சமூகப்பண்பாட்டு அடிப்படையாளங்களை முன்னிறுத்துவது தவிர்க்க முடியாது. தொடர்ந்து செயற்பாட்டுத்தளத்தில் இயங்கும் போது இனம், தேசியம், வர்க்கம் தொடர்பான கருத்தியல் தளத்திலும் அமைப்பாக்கத் தளத்திலும் காத்திரமான பதிவுகள் முனைப்பு பெறும். அந்தவகையில் இலங்கை யில் இரண்டுகோடியே பதினாறு இலட்சத்து பத்தா யிரத்து எழுபத்தாறு மக்கள் தொகை வாழ்கின்றனர். இதில் 20021 புள்ளிவிபரப்படி சிங்கள மக்கள் 79.4%, இலங்கைத்தமிழர் 11.2%, முஸ்லிம்கள் 9.2%, மலையகத் தமிழர் 4.2% என அடையாளப் படுத்தப்படுகின்றனர். இங்கு சிங்கள மக்கள் தேசியமாக இருக்கின்ற அதே வேளை ஒரு மொழி பேசுகின்ற தமிழர்கள், முஸ்லிம்கள் சிறுபான்மைத் தேசிய இனங்களாக இருக்கின்ற அதே வேளை தேசிய சிறுபான்மை இனங்களுடன் மலையக மக்களும் தேசிய சிறுபான்மை இனமாகப் பரிணாமம் பெறுகின்றனர். இதற்கான வரலாற்று அரசியல் காரணி களும், பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளும் அடிப்படையாகக் காணப்படுகின்றன. தவிர பேரினவாத ஒடுக்குமுறைகள், வர்க்கரீதியான ஒடுக்குமுறைகள் என்பவற்றுக்கு எதிராக மலையக மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அடையாளமாகவும் சுயநிர்ணய உரிமைகளுக்கு உரித்துடையவர்களே. எண்ணிக்கையில் அதிகமான தொழிலாளர்களையும், குறிப்பிடக்கூடியளவு மத்திய வரக்கத்தினரைக் கொண் டுள்ள மலையக சமூகம் தனிநாடோ, சமஷ்டியோ கேட்பது நடைமுறையில் சாத்தியப்படாத ஒன்று. சுயநிர்ண உரிமையில் பிரிந்து போக நினைப்பதும் யாதார்த்திற்கு முரணானது. அவர்கள் வாழும் பகுதிகளில் தேசிய, இன, வர்ககரீதியாக எழும்பும் போது, அவர்களின் காணி, தொழில், மொழி, மதம், கலாசாரம் போன்ற உரிமைகளை வென்றெடுக்கவல்ல சுயாட்சி அமைப்புக்களை நோக்கி, நகர்வதற்கான வழிமுறையாக மலையக மகககள் தேசிய, வர்க்க இன ரீதியான மேற்கிளம்புவது இயங்கியலின் வெளிப்பாடாகும்.

## உசாத்துணை நூல்கள்



- மார்க்ஸ்-எங்கெல்ஸ் தமிழில் அப்பணசாமி (2016) தேசியம் மற்றும் காலனியப் பிரச்சினைகள் குறித்து... - பாரதிப்பதிப்பகம்.
- லெனின். வி.இ (1984) தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை.முன்னேற்றப்பதிப்பகம் மாஸ்கோ
- ஸ்டாலின். ஜே.வி. (1913) மகாராசன்.மாக்சியமொழியில் தேசிய இனப்பிரச்சினை,யாப்பு வெளியீடு.
- சங்கரநாரயணன். கே (2017) மாக்சியமும் தேசிய இனப்பிரச்சினையும், பாரதி பதிப்பகம்
- தணிகைச்செல்வன் (2017) தேசியமும் மாக்கியமும், அலைவெளியீட்டகம்
- இமயவரம்பன். (2007) சுயநிர்ணயம் பற்றி, புதியபூமி வெளியீட்டகம்
- இமயவரம்பன் (1994) சுயநிர்ணய உரிமையில் முஸ்லிம்கள் மலையமகக்கள், சென்னை புதியபூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்.
- மேகன்ராஜ். க, (1884) இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்துவம். ஈழ ஆய்வு வெளியீடு
- ஆய்வு. (1984) எங்கெங்கும் அந்நியமயமாக்கப்பட்ட வர்கள், சிராக் வெளிப்பாடு
- ஏ. எஸ். சந்திரபோஸ், இரா. ரமேஸ் பதிப்பாசிரியர்கள் (2016) இலங்கையில் தேயிலை பெருந்தோட்டச் சமூகம், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட்
- தம்மையா. இ 1995) மலையக மக்கள் என்போர் யார்?, சென்னை புதியபூமி வெளியீட் டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்.
- சிவத்தம்பி. கா (1993) இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும். உதயம் நிறுவன வெளியீடு.
- சரவணன். என். (2019) கள்ளத்தோணி,குமரன் புத்தக இல்லம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கர சுழற்சி

செம்மலர் மோகன்



அரச மரத்தின் இலைகள் கீழ்நோக்கி பரவி கிடந்தன. அதன் கூர்மை பரப்பிய விளிம்புகளிலிருந்து பனித்துளி இடைவிடாது சொட்டுச்சொட்டாய் விழுந்து கொண் டிருந்தது. வழமையான பார்வைக்குட்பட்ட அத்தனை இயக்கங்களையும் கருமையில் போர்த்தி விட்டிருந்தது இருள்.

தூரத்தில் விசாலமாய் உறங்கும் குளத்தின் ஓரங்களிலிருந்து கத்தும் தவளைகள், விட்டில்களின் இடைவிடாத இரைச்சல் இன்னும் தூரத்தில் நரிகள் ஊழையிடும் நெட்டோசை இவைகள் பலகாலமாய் வெளிப்பட்டாலும் தன்னை இடைஞ்சல் படுத்தவில்லை தான் சித்தார்த்தனாய் இருந்த கணத்தில் மாட மாளிகைகளில் இருந்து வெகுதூரத்தில் தெரியும் நிலவொளியும், அது பட்டு அலையலையாய் தெளிந்த குளத்து நீரும் ஏதேதோ பண்ணியதை அதைவிட குதிரைப்பூட்டி ஒருநாள் வெளியில் செல்லும் போது தன்னை பாதித்த பட்டினியால் வாடிய முகங்கள், இறந்து சுமந்த உடலங்கள் ,ஏழ்மையால் வாடிய மண் எல்லாம்

கண்களை மெதுவாக மூடினார். சிறிது நேரத்தில் சயன நிலைக்கு சென்றார்... அரசமரம் பனித்துளிகளை இடைவிடாது சொட்டிக் கொண்டிருந்தது. முன்பு போல் தவத்தை தொடர முடியவில்லை போலும் பசியால் வாடிய முகங்களும், வரிசை மரணங்களும் வந்து வந்து போயின.... முன்னொரு காலத்தில் தவம் கலைந்து நிம்மதியிழந்து கிடங்குகளில் கிடந்த மனிதப் பிண்டங்கள் மூளையை குடைந்து சென்றன. தான் இளவரசனாய் இருந்த கால கிராமத்தின் சாயல்.... இல்லை அதிலும் ஒருபடி மதிலேறிய துயரங்கள் தன் மனக் கண்ணில்...

தியான நிலையில் முழங்கால்களை மடித்து இரு தொடைகளின் மேல் போட்டு இடது கையின் மேல் வலது கையை தாங்கியவாறான நிலை கால்கள் வலிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல ஒரு பிரமை. மனம் இருப்புக் கொள்ளவில்லை

விடியற்காலையில் குருவிகளின் கீச்சிடும் சத்தம் அருகில் உள்ள அருவியின் சலசலப்பு... வழமையான தன் கடமைகளை செய்ய தூண்டியது விழித்து கொண்டார். தன் உடல் கிடந்த இடம் தவிர்ந்த மற்றைய இடங்கள் பனித்துளிகளால் கழுவப்பட்டிருந்தது. மனம் தூங்கிபோன போது தெளிவாய் இருந்திருக்க வேண்டும்... மீண்டும் ஏதோ உடலை மெதுவாக நிமிர்த்தி அமர்ந்தார். தன் இடது கையின் இருவிரல் இடுக்கில்; நெற்றியை நுழைத்து நான்கைந்து தடவைகள் தடவிக் கொண்டார். வயோதிப சுருக்கம் பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையில் அகப்பட்ட தசையை நொளு நொளுப்பாக்கியது மெதுவாக கண்களின் புருவங்களை விரல்களால் தடவிக் கொண்டார். வலது புறம் பரவிக் கிடந்த காவியை எடுத்து சுருட்டிக் கொண்டார்.

குளக்கரை அமைதியாய் கிடந்தது அதன் மத்தியில் தன் உடல் முழுவதையும் அமிழ்த்திக் கொண்டார். தன் கச்சையை ஒரு பக்கவாட்டிலிருந்து மறு பக்கவாட்டிற்கு மூன்று நான்கு முறை நீரின் அமிழ்த்தி அமிழ்த்தி பிழிந்து பிழிந்து உதறினார்.இன்று நீண்ட நேரமாய் குளத்துக்குள் அமர்ந்தே விட்டார். கண்களை விழித்த போது மெதுவாக வெளிச்சம் படர்ந்திருந்தது இடுப்பில் சொருகப்பட்டிருந்த காவியின் மறுமுனை நீரை அலம்பிக் கொண்டிருந்தது அதை எடுத்து மீண்டும் பிழிந்தார் தன் இடது பக்க தோளில் சுமத்திக் கொண்டார். காவியும் பாரமாய் இருந்தது. மெதுவாக எழுந்து கரையை அடைந்து அரசமரத்தை நோக்கி நடந்தார். சருகுகளை தட்டி விட்டு அமர்ந்தார். மீண்டும் கண்களின் மத்தியில் கிராமங்கள் உலா வந்தன. அவை வடுக்கள் சுமந்த மேற்றோல்களையும் தாண்டி காயாத காயங்களையும், அதன் மத்தியில் சீழ் வடிவது போன்றதுமான காட்சிகளை கொண்டு சேர்ந்தது. மீண்டும் தன் உபதேச பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என அடிக்கடி மனதில்பட எழுந்து நடந்தார்.

முன்பு போல்.... நீண்ட காடுகளை சுமந்த மண்ணை காணவில்லை

இரு கைகளிலும் கமண்டலத்தை ஏந்திய வாறு ஊருக்குள் கால்களை பதித்தார். செழிப்பம் தொலைந்த மண்ணும் வரண்ட முகங்களும் அவரின் பசியை விட வருத்தத்தை கூட்டியது மெது மெதுவாக நடந்தார்... வாட்டமும் வசைகளும் வரிசைப் போல் நீண்டு போனது. கைகளில் பலதரப் பட்ட கொள்கலன்களுடன் சிறுவர்கள் வயோதி பர்கள் வரிசையில் அதில் ஒருவரின் நெஞ்சு மேலும் கீழும் ஏறி இறங்கி சத்தத்தை பரப்பியது. அங்கே நிலவிய சத்தத்துள் அது தொலைந்தும் மீண்டும் மேல் வந்தும் போனது. கமண்டலம் இன்னும் வெறுமை யால் நிரம்பி வழிந்தது. மிக நீண்ட காலங்களுள் முன்னிலிருந்து உருவெடுத்த ஊற்றின் மையங்களில் மண்டி கிடந்த பசுமையை இழந்த மலைகள் முண்டியடிக்க முயன்றும் தன்னை தொலைத்து கொண்டிருந்தது.

முடியாத சூழல் அவரில் இன்னும் தொய்வை ஏற்படுத்தியது போலும் தாகமெடுத்தது தன் தாகம் எவருக்கும் புரியவில்லை. இல்லை புரிந்துக் கொள்ளும் தூரம் கடந்து கால பேதம் முற்றிவிட்டது. அரசமர நிழல் தேவைப்பட்டது. நீண்ட தூரம் நடக்கவியலாது கண்கள் இருட்டிக் கொண்டது. கால்கள் தடுமாறி ஒரு சந்தியை அடைந்தார். சந்தியில் மூன்று பக்கங்களுக்கும் பிரியும் பாதை... பாதையின் நடுவில் நின்றது தான் தேடிய மரம்...

நீண்ட நேரம் சென்றிருக்க வேண்டும். ஏதோ கூக்குரல் தன் அகன்ற செவியில் விழுகின்றது விழித்தார். தீப்பந்தங்களின் ஒளி அங்குமிங்கும் அசைந்தப்படி சந்தியை நோக்கி வேகமாக வந்தது. 'இளவரசன் ஒழிக....' என்ற குரல்கள் ஒருவரின் பின் பலரது கோரசாக கேட்ட வண்ணம்..... அசோக சக்கரவர்த்தியை நோக்கி அவன் உயிர்ப்பழி, துயரத்தேரின் சில்லுகளில் நெடியதாய் சென்ற உயிர்களில் ஒலித்த எதிரொலி. முச்சந்தி நிறைந்தது சிலர் மண்வெட்டிகளை மறுகையில் ஏந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியும் இருவர் இளவரசரின் முகத்தை யொத்த... துணியால் வேயப்பட்ட பொம்மையுடன் மறுகையில் தேய்ந்த செருப்புடன்... அவர்கள் கண்களில் ஏக்கம் கலந்த கிரேக்க லகூன் சிற்பத்தின் துயருடனான வலியும் வெளிப்பட்டது. அடுத்த நாள் இளவரசர் மாளிகை நோக்கிய பயணம் அவர்களின் கதைச்சாற்றின் சாரமாய் ஊறியது. மெதுவாக எழுந்தார். தன் காவியை சரிசெய்ய முனைந்து முடியாமல் சந்தியின் ஒரு தெருவழியாக இழுப்பட்டபடி அது. முன்பொரு காலத்தில் பசிக்கு பால் கொடுத்த இடைச்சிறுவனை ஒத்த ஒருவன் பின் சென்றார்..... இழப்பின் துயரம் அன்றைய இரவு முழுவதும் இதயத்தை உரசிப்போனது.

காலை.... சூரியனின் இயல்பு மீறிய சூடு கறுத்த பாதையெங்கும் தெறிக்கும் கதகதப்பை தாங்கிக் கொண்டு நடந்தார்.நடக்கும் இரு புறங்களிலும் மரங்களை போல் பரம்பிக் கிடந்தன கட்டடங்கள். சுவாசிப்பதற்கான ஏதுக்கள் குறைந்து போனது சந்திக்குச் சந்தி நிமிர்ந்து நின்ற அரசமரங்களின் கீழ் அமர்ந்து அமர்ந்து சென்றார் தூரத்தில் இளவரசர் மாளிகை தென்பட்டது.

இளவரசர் மாளிகை

உயர்ந்த மதில்கள், நெடிய இயந்திர வாகனங்கள். தன் மாட மாளிகை அவர் மனதில் எதிர்ப்பட்டது ஆனால் உள்ளே போக முடியவில்லை முதல் நாள் இரவு முச்சந்தியில் சந்தித்த மக்கள் மதிலைத் தாண்டி செல்ல பலமுறை முயன்றனர். எனினும் முடியவில்லை. இறுதியாக இன்னும் சில முச்சந்தி சந்திப்புகளால் இணைந்தோர் மதிலை தகர்த்துவிட்டனர். 'அகிம்சை..... அகிம்சை...' எத்தனையோ தடவைகள் மனம் கூறியும் அது யார் ஞானத்திலும் வெளிப் படவில்லை மீண்டும் இளவரசர் மாளிகைக்குள் செல்வதா?

சில நொடிகள் சிந்திக்கும் முன் ஆயிரமாயிரமாய் மாளிகைக் கதவுகளைத் தாண்டி மக்கள் செல்வது தெரிந்தது. படி களில் ஏறி ஏறி மாளிகைகளுக்குள் சென்று விட்டார். சன நெரிசலில் அகப்பட்ட கமண்டலம்... அவர் கைகளிலிருந்து எப் போது காணாமல் போனதோ தெரிய வில்லை. மடிப்பு விட்ட பகுதியை சரிசெய்ய முயன்று முடியவில்லை. காவியை இறுகப் பற்றிக் கொண்டார்

மாளிகை மிகவும் விசாலமாயிருந்தது.... படுக்கையறை வரவேற்பறை இதனையும் தாண்டி குளியலறை... இருபக்கமும் வாசப்படி கடந்தவுடன் நேராக பெரிய தொலைகாட்சி வைக்கப்பட்டுள்ள கண் ணாடி போத்தல்கள்... தான் வாழ்ந்து துறந்த மாளிகையுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது அப்பாடா... தன் போதனைகளின் முழுமையும் பயனற்று போயுள்ளதா..... ஒரே யோசனை. மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து கொண்டிருந்தனர். மாடிப் பகுதிக்கு சென்றார். இளவரசரின் குடும்பம் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. நான்கு பேர்..... சிரித்தப்படி ஒரே மாதிரியாய் ஆடை யணிந்தப்படி இப்படி கொடிகள் தங்க நிறங்களாலான வாள் வகை வகையான ஆடை அணிகலன்கள் பொன்பொருள்... தலைசுற்றியது. மெதுவாய் தரையில் அமர்ந்தார். அது பழகிப் போன ஒன்று.

விழிக்கும் போது அந்திப்பட்டிருந்தது. சன நெரிசல் குறையவில்லை தான் இளவரசரின் கதிரையில் உறங்கியிருப்பதை புரிந்து கொண்டார்... யாரோ தான் அறியாமலேயே தூக்கி கதிரையில் அமர்த்தி விட்டிருக்கின்றனர்.

தலை பாரமாய் தெரிந்தது..... அந்த அகன்றுவிரிந்த மாளிகை தன்னை ஏதோ செய்வதை உணர்ந்தார். மெதுவாக எழுந்து யன்னலருகில் சென்றார். வெளியில் மக்கள் கூட்டம் கூட்டமாய் உரையாடிக் கொண டிருந்தனர். முதல் நாள் இரவுப்போல... பந்தங்களுடனும் சிவப்பு கொடிகளுடனும்

மெதுவாக இறங்கி கூட்டத்துள் கலந்தார் புத்தர்...

❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுங்கிய ஓ...நாய்

சத்தமின்றி ஒரு நாய் ஓஓஓஓ... நாய்
பொந்தொன்றில் நுழைந்து
கச்சிதமாய் கன நேரம் காத்துக் காத்து நின்றதுவே..
கண்விட்ட நோட்டமெல்லாம்
கண்ணெதிரே தோன்றியதும் - அதன்
விழியே ஒரு வழியை
நாடி மனம் - ஓஓஓ....
நாயின் மனம் போனதுதான்

முன்னங்கால் ஓர் அடியை
வலப்பக்கம் தான் வைத்து
ஓரடியை ஈரடியாய்
நாலடியை ஏழடியை
ஏழடியை காலடியாய்
தலை சொன்ன சொல் கேட்டு
ஏழடியை காலடியாய்

காதுக்குள்ளே ஓரிரைச்சல்
விட்டு விட்டுப் பேரிரைச்சல்
இடப்பக்கம் கொஞ்சம்
தந்திரமாய் நோட்டம் விட
பேரிரைச்சல் தான் கொண்டு
புறப்பட்டதுவே எலிக்கூட்டம்
விழி பிதுங்கி முழி உருட்டி
பெருமூச்சி தான் வாங்கி
பவ்வியமாய் பதுங்கியே பார்த்துதான் இருக்குதோ....!

மரத்தினிலே வெடித்து வந்த பஞ்சையெல்லாம்
கத்தையாய் மெத்தையாய் ஒட்டிக் கட்டி
திரைக்கு முன்னால் ஓர் கதிரை
அக்கதிரைதனில் குரட்டையோடு தனி உறக்கம்
பேரிரைச்சல் கேக்காத வெள்ளை நிற கிழட்டுப் பூனை
கொஞ்சம் செவிட்டுப்பூனை...
மலை மலையாய் குரட்டை....!!!!!!!

ஒரு நாளா இரு நாளா
பல நாள் பேரிரைச்சல்
அப்பப்போ ஈக்களுமே ரீங்காரம் தான் போடும்
வண்டுகளும் ஓடி வந்து பாட்டுகளும் படித்துப்போகும்
அணில் கூட ஆடி வந்து அனலாய் ஓலமிடும்
எறும்புகளும் ஏரிவந்து ஏற்றபலம் தான் கொடுக்கும்

பூனைக்கும் ஓநாய்க்கும் என்னென்ன வித்தியாசம்
கருவென்றா உருவென்றா நிறமென்றா அளவென்றா
6 வித்தியாசம் யார் யாரோ கூறிடுவார்
பட்டென்று பார்க்க பலநூறு வித்தியாசம்
பவுசாய்தான் தெரியும்
உற்று, உரசிதான் பார்க்க வேண்டும்
உருவம் மட்டுமே வித்தியாசம்
பதுங்கியே வந்த ஓ....நாயும்
பற்றிப் பிடித்துதான் விட்டதே..!
கழுத்தை அல்ல கௌரவமான கதிரையை...
ஏன் இனி கூச்சல்...!
என் வேலை நான் பார்ப்பேன்
உன் வேலை...?



விஜயகுமார் சுதர்சன், கந்தப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் 200

# தனியான ஒரு தொலைக்காட்சி அலைவரிசையின் அவசியம் சில குறிப்புகள்

மொழிவரதன்

மலையகம் 200 குறித்து பல கோணங்களில் கருத்துக்களும் ஆலோசனைகளும் முன் வைக்கப்பட்டு வருகின்றன. அவை பாராட்டுதலுக்குரியனவாகும். அதிலும் குறிப்பாக தகவல் பரிமாற்றத்தின் அவசியம் குறித்து சில உரையாடல்கள் தொடங்கப்பட்டுள்ளன. மக்களுக்கு தகவல் வழங்கும் நோக்குடன் இலங்கையில் பல வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் காணப்படுகின்றன. எனினும் சில நிலையங்கள் மட்டுமே மலையகத்தின் மீது கரிசனையுடன் செயற்படுகின்றன என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். அவற்றின் செயற்பாடுகளும் வரையறைக்குட்பட்டதாகவே காணப்படுகின்றன.

இத்தகைய சூழலில் மலையகத்துக்கான தனியான ஒரு தொலைக்காட்சி அலைவரிசை குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. மலையக மக்கள் இந்நாட்டிற்கு வந்து இரு நூறு வருடங்கள் ஆகின்றன. இவ்வேளையில் இம்மக்களின் கலை, கலாசாரம், கல்வி மற்றும் அடிப்படைத் தேவைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய ஒளி பரப்புகள் மற்றும் செய்தி ஆகியவற்றை உள்ளடக்கிய தொலைக்காட்சி ஒளி ஒலி பரப்பு ஏற்படுத்தப்படின் அதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் பலவாகும்.

மலையக மக்களின் எதிர்காலம் தேயிலைத்துறையில் மட்டும் தங்கியுள்ளதா? என்பது வினாவாக முன் வைக்கப்படுகின்றது. இன்று ஏறத்தாழ ஒன்றரை அல்லது இரண்டு இலட்சம் பேர் மட்டுமே தேயிலைத் துறையில் தொழிலாளர்களாக உள்ளனர். இத்துறையை விட்டு வெளியேறி சென்றவர்கள் எண்ணிக்கை அதிகமாகும். குறிப்பாக அரச துறை, தனியார் துறை, கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் காணப்படும் தனியார்; வர்த்தக நிலையங்களிலும் மேலும் ஒழுங்கமைக்கப்படாத நிலையில் உதிரிகளாக சாரதிகளாக, வீட்டுப் பணிப்பெண்களாக, ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களாகப் பணி புரிகின்றனர். நாடு முழுவதும் பல்வேறு தொழில்களில் மலையக மக்கள் பணி புரிகின்றனர்.

இந்நிலையில் புதிய சந்ததியினருக்கான தொழில் வழிகாட்டல், திசை முகப்படுத்தல் போன்ற விடயங்களில் தொழில் வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெறக்கூடிய வகையில் மலையகத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பு செய்ய முடியும். இவ்விடயத்தில் அரசாங்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் கடந்த காலங்களில் என்ன செய்தார்கள் என்பதை சகலரும் தெளிவாக அறிந்துள்ளனர். எனவே மாற்று நடவடிக்கைள் மிகவும் அவசியமாகின்றன.

மலையக மக்களின் இளம் சந்ததியினர் கல்வியில் புத்துயிர் பெற்று மேலுயர பிரயத்தனங்களை மேற் கொண்டு வருகின்றனர். அது பொருளாதார நிலை மற்றும் கொள்கையுடன் தொடர்புடைய அம்சமாகும். மக்கள் சுய உழைப்பில் தங்களை தகவமைத்துக் கொள்ள மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்தும் தொடர்பாடலூடாக உரையாடுவது அவசியமாகின்றது. சுய பொருளாதாரத்தை விருத்தி செய்தல் மற்றும் உறுதிபடுத்தல், விரிவாக்குதல் போன்றன முன்னுரிமையளிக்க வேண்டிய அம்சங்களாக உள்ளன.

மலையகம் 200 வருடங்களுக்குப் பின்னரும் மக்கள் விரோத போக்குடையவர்களின் தேவைகளுக்கான பகடைக்காய்களாக செயற்பட முடியாது என்பதை அறிவுபூர்வமாக உணர வேண்டும். இதற்காக புதிய சிந்தனையும் செயற்பாடுகளும் மிகவும் அவசியமாகின்றன. குறிப்பாக மக்களின் வாழ்வாதராத்துக்கான அடிப்படைகள் என்ன என்பதை தெளிவாக முன் வைத்து செயல்கள் மூலமான வெற்றிகளைக் காணக்கூடிய நிகழ்ச்சிகள் மலையக ஒளி பரப்பின் மூலமாக முன் வைக்கப்படல் பொருத்தமானதாக அமையும்.

எல்லா துறைகளிலும் தத்தமது சுய உழைப்பால், உறுதியான நம்பிக்கையால் மேலுயர்ந்தவர்களின் முன்னுதாரணங்களை வாழ்க்கை முறைமை இளம் சமுதாயத்தினருக்கு வழங்குவதன் மூலமாக சுய நம்பிக்கையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி வளர்க்க முடியும். இத்தகைய உதாரண மாதிரிகளை நமது சமூகத்தில் காண முடியும். கடுமையான உழைப்பின் மூலமாக சாதனைகள் புரிந்தவர்கள். சோரம்போகாத கொள்கைவாதிகள் என பலரையும் வரலாறு படைத்துள்ளது. இத்தகைய ஆற்றல்களை நேர்காணல் மூலமாகவும் நேரடி சந்திப்புகள் மூலமும். விசேட கலந்துரையாடல்கள் மூலமும் முன் வைக்க முடியும்.

இவ்வொளி பரப்பின் மூலமாக மலையகத்தின் வரலாற்று பொக்கிசங்களை பாதுகாப்பதோடு, உல்லாச பிரயாண கைத்தொழிலையும் வளர்க்க முடியும். இரு நூறு வருட வாழ்வின் சாதனைகளை வெளிக் கொணர முடியும். திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ள தகவல்களை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் ஏற்படும்.

இந்த நோக்கங்களுக்காக உருவாக்கப்படும் தொலைக் காட்சியின் மூலமாக மலையக படைப்பாளர்கள், கலை இலக்கிய செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் போன்றோரும் பயன் பெற முடியும். மலையக மக்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் கலைகளான நடனம், இசை, கூத்துகள், கட்டிடக்கலை, ஓவியம், உழைப்பு சார்ந்த படைப்புகள் போன்றனவற்றை வளர்த்தெடுக்கவும் முடியும். மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் இவ்வம்சங்கள் பெரிதும் முக்கியம் பெறுகின்றன.

மேலும் மலையக வரலாறு விரிவான ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தப்படல் முக்கியமானதாகும். அந்த வரலாற்றுக் கடமையினை மலையக தொலைக்காட்சி வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். இதற்கென அனைத்து வளங்களும் ஒருங்கிணைப்பு செயயப்படல்; சிறந்த பயன்களைத் தரும்.

மலையக மக்களை நேசிக்கும் தொழில் அதிபர்கள், முதலீட்டாளர்கள் இதற்கான அடித்தளத்தை உடனடியாக அமைத்தல் என்பது மலையகம் 200 என்பதை அர்த்தமுள்ளதாக மாற்றும் என்பதில் ஐயமில்லை. அந்த செயலுக்கென ஓர் அமைப்பு தொடங்கப்படுவதுடன் அதில் பொது மக்களையும் ஒன்றிணைத்து பலமான, சக்திமிக்க செயற்பாடுகளை முன்னெடுத்தல் முக்கியமான தாகும். இரு நூறு வருட வாழ்வின் வெற்றிகளை மீட்டுப் பார்ப்பதும் அந்த அனுபவங்களிலிருந்து மேலெழுவதும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும். இந்த முன்னேற்றத்தைச் சாத்தியப்படுத்துவதில் மலையகத் தொலைக்காட்சி பிரதான பங்கினை ஆற்ற முடியும். ❑

---

## அஞ்சலி

## தேவா



*அம்பரய, நீண்ட காத்திருப்பு, என் பெயர் விக்டோரியா, குழந்தைப் போராளி போன்ற நூல்களைத் தமிழுக்கு கொண்டு வந்த மொழி பெயர்ப்பாளர், எழுத்தாளர் தேவா (திருச்செல்வம் தேவதாஸ்) அவர்கள் அண்மையில் மன்னாரில் காலமானார்.*

*ஒரு இலக்கியச் செயற்பாட்டாளராக, விமர்சகராக, தமிழ்ச் சூழலில் படைப்புகளை மொழிபெயர்த்தவராக, நல்ல மனிதப் பண்புகள் கொண்டவராக வாழ்ந்த அன்னாருக்கு தாயகம் இதழ் தனது அஞ்சலியை செலுத்துகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகம் 200

# தமிழ்நாடு- இந்தியாவிலிருந்து ஒரு செய்தி

### தோழர் சி.சிங்கராயர்

தாயகம் சஞ்சிகையின் மலையக சிறப்பிதழ் வெளியீட்டு முயற்சிக்கு எனது மகிழ்வினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேசபக்த வாலிப இயக்கம் மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவை ஆகியவற்றின் செயற்பாடுகள் குறித்த எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை ஆளுமை மிக செயற்பாட்டாளனாக மாற்றுவதில் இவ்வமைப்புகளின் பங்களிப்பு மகத்தானவையாக இன்று வரை நிலைத்துள்ளன.

நான் சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடம் பெற்ற கட்டாய நாடு கடத்தலுக்கு உட்பட்டவனாவேன். மனித நாகரீகத்துக்கு எதிரான இந்த நடவடிக்கை காரணமாக 1984 பெப்ரவரி மாதம் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்து சேர்ந்தேன். தற்போது சேலம் மாவட்டத்தில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றேன். எங்களது குடும்பதில் உள்ள அனைவரும் இலங்கையின் மலையகப் பகுதிலுள்ள தலவாக்கலை நகருக்கு அண்மையிலுள்ள பணிய ஸ்கல்பா தோட்டத்தில்; வாழ்வதற்கே விரும்பி இருந்தோம். ஆனால் அதற்கான வாய்ப்பை இலங்கை அரசங்கம் தரவில்லை. பலர் பலவந்தமாக வெளியயேற்றப்பட்ட சம்பவங்களை நான் அறிவேன். இறுதி நாட்களில் நாங்கள் அனுபவித்த வேதனைகளை நினைத்துப் பாரக்கின்றேன். தோழர்கள் தம்பையா, ராஜேந்திரன், சதாசிவம் ஜோன்சன் போன்றவர்களின் அன்பை, தோழமை உணர்வை இன்றும் உணர முடிகின்றது. 'அழுகைக் கோச்சியில்' ஏற மனமின்றி அழுத பொழுதுகள் நினைவுக்கு வருகின்றது. என்னை கௌரவப்படுத்தவதற்காக அட்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம், அதில் நான் ஆற்றிய உரை நினைவுக்கு வருகின்றது.

தலவாக்கலை பணிய ஸ்கல்பா தோட்டத்தில் தான் நாங்கள் வாழ்ந்து வந்தோம். 1980 ம் ஆண்டு முதல் தேசபக்த வாலிப இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினேன். இதன் மூலமாக மலையக மக்களின் வரலாறு, பொதுவுடைமை சித்தாந்தம் போன்றவற்றைக் கற்றுக் கொள்ள முடிந்தது. நாங்கள் இளைஞர்களாக இருந்தமையால் எதனையும் துணிவுடன் முன்னெடுத்துச் செல்லும் ஆற்றல் மிகுதியாகக் காணப்பட்டது. மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை அன்று நாங்கள் வெளிப்படுத்தினோம். மக்களுக்கு இருபது பேர்ச்சஸ் காணி வழங்க வேண்டும், கிராம அடிப்படையல் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட வீடமைப்புத்திட்டம் அமுலாக்கப்பட வேண்டும். காணி மற்றும் வீடுகளுக்கான உறுதிப் பத்திரம் வழங்க வேண்டும், அரச வேலைவாய்ப்புகள் இன விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. தலவாக்கலையில் இதற்கான மகாநாடு கூட்டப்பட்டது. மலையகத்தின் பல்வேறு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் கலந்துக் கொண்டனர்.

அக்காலப்பகுதியில் மலையக மக்கள் விவசாயம் செய்து வரும் பகுதிகளை அரசாங்கம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தது. அதற்கு தோட்டத் துரைமார்களும் துணை போனார்கள். தேயிலைத் தோட்டங்களை அண்மித்துக்காணப்பட்ட அடாத்தான நிலங்களில் பலர் மரக்கறித் தோட்டங்ளை செய்து வந்தனர் சிலர் அப்பகுதிகளில் மாடு வளர்ப்புக்கான புல் வளர்ப்பை மேற் கொண்டனர். நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்ட இந்நிலங்களை கைவிட்டு வெளியேறுமாறு பலவந்தப்படுத்தினார்கள். பணிய ஸ்கல்பா தோட்ட இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொண்டோம். அதில் வெற்றியும் பெற்றோம்.

தோட்ட மக்கள் எங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினர். மாலை நேரங்களில் இளைஞர் யுவதிகளுக்கு இலவசமான வகுப்புகளை நடத்தினோம். அரசியல், தத்துவம், வரலாறு, புவியியல், தமிழ் மொழி, ஆங்கிலம் போன் றபாடங்கள் கற்பிக்கப்பட்டன. நம்பிக்கையான சூழல் காணப்பட்டது. விளையாட்டுப் போட்டிகள், பாரதி விழா போன்றனவும் ஒழுங்கமைக்கப்பட்டன. இளைஞர்கள் புதிய அரசியல் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம்.

மக்கள் அரசியலை முன்னெடுத்தல் தொடர்பாக சில எதிரப்புகளும் வந்தன. அவை குறித்து தாபன அடிப்படையல் பரிசீலனை செய்ததோடு தொடர்ந்து பணிகளை முன்னெடுத்தோம். எக்காரணம் கொண்டும் பின் வாங்கவில்லை.

சிறிமா சாஸ்த்திரி உடன்படிக்கையின் படி எங்களை வெளியேற்றினார்கள். 1960 காலப்பகுதி வரை இலங்கையின் இரண்டாவது தேசிய இனமாக வாழந்த மலையக மக்களின் தொகை குறைந்து விட்டது. மக்கள் மீதான வன்முறைகளும் அதிகரிக்கத் தொடங்கி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் உருவாக்கிய மலையக பூமி எமக்கானது. அதனை போராடி வெல்வது மக்களது கடமையாகும். நாங்கள் தொடங்கி வைத்த அந்தப் பாதையில் தொடர்ந்து பயணம் செய்வீர்கள் எனக் கருதுகின்றேன். எமது ஒத்துழைப்பு என்றும் நிலைத்திருக்கும். இரு நூறு வருடங்களின் சபதம் இதுவாகத்தான் இருக்க முடியும். வளம் மிக்க மலையகத்தை மேலும் சிறப்பானதாக மாற்றுவதற்கு இலங்கையில் வாழும் ஏனைய இனத்தவர்களும் பங்களிப்பு செய்ய வேண்டும்.

தேசிய கலை இலக்கியப் பேரவை, இளைஞர் அமைப்பு ஆகியவை மேலும் வளர வேண்டும். அதற்கு உளப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❑


---

# கோச்சிப் பாடல்

*சிக்கு புக்கு நீலகிரி தொப்பித் தோட்டம்*
*நாங்க போற கோச்சியில சனக்கூட்டம்*
*இரும்பு ரோட்டு போட்டதெல்லாம் எங்க கூட்டம்*
*எல்லாம் இங்க மறந்து போச்சி மோடக் கூட்டம்*

*சிங்க மலை சுரங்கத்த பார் உழைப்பின் ஊட்டம்*
*செங்கமலை ஆக்கித் தந்தார் பெரும் பாலம்*
*பாறையோடு பேசிப் பாரு கேட்கும் ஓலம்*
*பாதை போட்ட கதைகள் கூறும் இரும்பின் நாதம்*

*கருங்கல்லை குடைந்ததை பார் கண்ணீர் வரும்*
*கடுகன்னாவ பாதையெல்லாம் பெரும் போராட்டம்*
*தெமோதரை வளைவைப் பாரு அறிவின் உச்சம்*
*சேர்ந்துழைத்த மக்கள் எங்கே எல்லாம் மாயம்*



*ஓராயிரம் உளிகள் சத்தம் இன்றும் கேட்கும்*
*ஓரமெல்லாம் உத்துப் பாரு உழைப்பின் வேகம்*
*அறுவதடி பாலத்த பார் தலையும் சுத்தும்*
*ஆஹா என்ன சாதனைகள் கைகள் மூலம்*

*நன்றி கெட்ட நாட்டினிலே வாழும் கூட்டம்*
*நாங்கள் தந்த சுரங்கத்திலே ஊளைச் சத்தம்*
*கோச்சி ரோட்ட போட்டது யார் சிந்தனை செய்வோம்*
*குனிந்து நன்றாய் வணக்கம் சொல்வோம் நாளும் பொழுதும்*

**இராகலை கமல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழ் சமூகம்

## எம்.முத்துவேல்

மலையகம் என்பது ஓரெண்ணக்கருவாகும். இவ்வெண்ணக்கரு தனக்கேயுரிய பௌதீக, மானுட பண்பாடடுக் குணாதிசயங்களைக் கொண்டு விளங்குகின்றது. பௌதீக குணாதிசயங்கள் என நாம் கருதுவது மலையகம் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புடைய புவியியலம்சங்களையும் காலநிலையும் உள்ளடக்குகின்றது என கருதிவிட முடியாது. மாறாக மலையகம் எனும் நிலப் பிரதேசத்தை வாழிடமாகக் கொண்டு சீவியம் நடத்தும் மக்களையும் அவர்களது உழைப்பின் திரட்சியையும் அதன் அடிப்படையில் விருத்தியடைந்துள்ள வாழ்வியலையும் பிரதானமாக குறித்து நிற்கின்றது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பல்வேறு சமூக அமைப்புகளும் தத்தமக்கேயுரிய மொழி, கலாசார மரபுகளையும் சமூக அரசியல் குணாதிசயங்களையும் வரலாறையும் கொண்டு நடப்பதைப் போலவே மலையக சமூகமும் இயங்குகின்றது. இதன் விளக்கம் என்னவெனில் மலையக மக்களை ஒரு சமூகமாக இனங்காண்பதற்கான சகல அம்சங்களும் பூரணமாகவே உள்ளன என்பதேயாகும். அத்தகைய பொது அம்சங்களுக்கு மேலாக இதர சமூகங்களிலிருந்து இனம் பிரித்துக் காணக்கூடிய தனித்துவமான சமூகமாக மலையக மக்களை அடையாளங் காண முடியும். மேலும் மலையகம் என்பது பெருந்தோட்ட பயிர்களின் உற்பத்தி பிரதேசத்தை உள்ளடக்கிய, அரசியல பொருளாதார, சமூகப் பின்னணியைக் கொண்ட சகல மக்களையும் உள்ளக்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பௌதீக நோக்கில் கடல் மட்டத்திலிருந்து நூறு மீற்றருக்கும் மேற்பட்ட உயரமுடைய நிலப்பிரதேசம் மலையகமாகும் என்ற வரையறையும் கூறப்படுகின்றது. இப்பிரதேசம் உயர்ந்த மலைத் தொடர்களையும், குன்றுகளையும், சமவெளிகளையும், பள்ளத்தாக்குளையும், கணவாய்களையும், மேட்டுநிலங்களையும், இவற்றோடு கூடிய புவியியல் கூறுகளையும் உள்ளடக்குவதாகும். மேலும் இரு வேறுபட்ட காலநிலையைக் கொண்டதாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெப்ப நிலையும் மழை வீழ்ச்சியும் இரு வேறு பிரதேசங்களுக்கிடையேயும் மாறுபட்டமைவதோடு நிலத்தின் இயல்பாலும் வளங்களின் அடிப்படையிலும் வேறுபட்ட தன்மையுடையதாக காணப்படுகின்றமை பிரதேசத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. நமது வசதிக்காக உயரம் கூடிய மலைப்பிரதேசமென்றும் உயரத்தால் தாழ்ந்து செல்லும் பிரதேசங்கள் என்றும் இரு வகைப் பிரதேசங்களாகப் பாகுபடுத்திக் கொள்ளலாம். 1200 மீற்றருக்கு மேற்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய மலைப்பபிரதேசம் மற்றும் 100 மீற்றர் வரை தாழ்ந்து பரந்திருக்கும் தாழ் நிலப் பிரதேசம் என இவற்றைக் குறிப்பிடலாம். இதற்கேற்பவே தேயிலை மற்றும் றப்பர் செய்கை இடம் பெறுவது கவனிக்கத்தக்தாகும்.

நுவரெலியா பிரதேசம் உயர் நிலப்பகுதியின் கொடுமுடியாக விளங்குகின்றது. மஸ்கெலியா, அட்டன், வட்டவளை, டயகம, தலவாக்கலை, பூண்டுலோயா, புசல்லாவை, கொத்மலை, கந்தப்பளை போன்றன இந்த கொடு முடியின் கீழமைந்து காணப்படுகின்றன.

வெளிமடை, பண்டாரவளை, பதுளை, பசறை, பலாங்கொடை, இரத்தினபுரி, கேகாலை, நாவலப்பிட்டி, கண்டி, மாத்தளை போன்ற பகுதிகள் உயர் மலைப் பிரதேத்திலிருந்து கீழ் நோக்கிய சரிவில் காணப்படுகின்றன. மேலும் களுத்துறை, காலி ஆகிய பகுதிகளும் மலையகம் என்ற வகுதிக்குள்ளடங்குகின்றது. மலையக மக்கள் வாழும் குருநாகல் பகுதியும் இதனோடு இணைக்கப்பட வேண்டிய பகுதியாகும்.

தோட்டம் Estate என்பது தேயிலை மற்றும் றப்பர் உற்பத்தி செய்யப்படும் சிறு கூறுகளை உள்ளடக்கியதாகும். ஏனைய விவசாயப் பிரதேசங்களை கிராமங்களாக அடையாளங் காண்பது போல தோட்டங்களும் அதற்கே உரித்தான தன்மைகளோடு அமைந்து காணப்படுகின்றமை நோக்கத்தக்கதாகும். இத்தோட்டங்கள் குறைந்து இரு நூற்றறைம்பது ஏக்கர் பரப்பைக் கொண்டதாகவும் பெரிய தோட்டங்கள் ஐநூறு முதல் எழுநூறு வரையிலான ஏக்கர்; பரப்பினையும் கொண்டமைந்துள்ளன. தோட்டங் களுக்குத் தெளிவான எல்லைகள் காணப்படுகின்றன. ஒரு தோட்டத்தின் சனத்தொகை சராசரியாக ஐநூறு என குறிப்பிடலாம்.

ஆங்கிலேயரின் குடியேற்ற ஆட்சி காலத்தில் நூறு மீற்றருக்கும் மேற்பட்ட மலைப்பிரதேசங்கள் துண்டங் களாகப் பிரிக்கப்பட்டு பிரித்தானிய நிலப் பிரபுகளுக்கு விற்கப்பட்டன. இவ்வாறு விற்கப்பட்ட போது தோட்டங் களுக்கான எல்லைகளும் வரையறுக்கப் பட்டன. இவ் வாறு எல்லைகள் வகுக்கப்பட்ட போது ஏலவே அங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக்கிடந்த கிராமங்களின் பெயர்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இப்பகுதியில் காணப்பட்ட நகரங்களின் பெயர்களும் தோட்டங்களின் பெயர்களாக கருதப்பட்டன. தலவாக்கலை, நுவரெலியா, நானுஓயா, நாக சேனை, லுனுகல, மஸ்கெலியா, நோர்வூட் போன்றன இதற்கான சில உதாரணங்களாகும். சிங்கள மொழியில் வழங்கப்படும் கெலே (காடு) சேன (சேனை) கந்த (மலை) வத்த (தோட்டம்) ஓயா (ஆறு) போன்ற இன்னோரன்ன சொற்கள் தோட்டங்களின் பெயர்களில் விகுதியாக அமைந்திருப்பதைக் காணலாம். கல்கந்தவத்த, டிக்ஓயா, கந்தசேன, மடுல்கெலே போன்றனவற்றை இதற்கான உதாரணங்களாகக் கூறலாம்.

மேலும் புதிய பெயர்களும் தோட்டங்களுக்கு வழங்கப்பட்டன அட்டன் Hat on – Hatton என்பதாக நிலை பெற்றதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். ரொக்வுட் (Rockwood) ஸ்பிரிங்வெளி (Spring Velley) மவுண்ட வேர்ணன் (Mountvernon) சென் லெனாட்ஸ் (St.Leonards) போன்றன இவ்வாறு அமைந்தவையே. இங்கிலாந்தில் உள்ள இடங்களும் தோட்டங்களுக்கு பெயராக இடப்பட்டன. வேறு சில பெயர்கள் ஆங்கில பிரபுக்களின் பெயராக அமைந்தன கிளரெண்டன் (Clarendon) சென் ஜோன்ஸ் (St. Johns) போன்றன சில உதாரணங்களாகும். தோட்டங்களது உருவாக்கத்தின் பின்னரே பெயர்கள் இடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தககது.

எந்த நிகழ்வும் ஒன்றன் பின்னொன்றாய் நிகழ்வதான ஒரு படிமுறை சமூகப் பண்பாடு மற்றும் வரலாற்று தளத்தில் காணப்படுவில்லை. பெருந்தோட்டத்துறையின் நிர்மாணம் இலங்கையின் மொத்த வரலாற்றுடன் எவ்வாற இயைபுபட்டிருக்கின்றதோ அவ்வாறே பெருந்தோட்டங் களின் பெயர்கள் குறித்த பிரதேசத்தின் வரலாறோடும் தேசிய வரலாறோடும் இயைபுடைய தொடர் நிகழ்வாக அந்த சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தன என்பது மனங் கொள்ளத்தக்கது. தோட் டங்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் வேறாகவும் தமிழில் வேறாகவும் காணப்படுகின்றன. அவை தொழிலாளர் வாழ்க்கை மற்றும் உழைப்பு போன்றனவற்றோடு தொடர்புபடுகின்றது.

2

பிரித்தானியரது ஆதிக்கத்தினடிப்படையில் உருவாக்கப்பட்ட தோட்டங்களில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதற்கு பாரிய உழைப்புச் சக்தி தேவைப்பட்டது. காலனித்துவ ஆட்சியாளர்களே இந்தியா வையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இந் நிலமை அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. தென்னிந்திய தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை அடக்குமுறையின் அடிப்படையில் பெறுவ தனூடாக அதிக இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட முதல் தோட்டமே சிங்ஹாபிட்டிய கோப்பித்தோட்டம் ஆகும். கம்பளை நகருக்கு அண்மையில் இத்தோட்டம் அமைந்தது. இந்த தோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட முதற் குடியேற்றம் 1823ம் ஆண்டு இடம் பெற்றதற்கான சான்றுகள் உள்ளன.

இதன் பின்னர் உருவாக்கப்பட்ட தேயிலைப் பெருந் தோட்டங்கள் பெருமளவு தொழிலாளர்கள் கூலி களாக கடத்தி வரப்படுவதற்கு காரணமாகியது. வறிய விவசாயிகளை கண்டி சீமைக்குக் கடத்தி வந்தவர்கள் தமிழ் நாட்டு நிலப்பிரபுக்களே ஆவர். ஆங்கிலேயரிடமிருந்து அதற்கான பணத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து வருகைத் தந்த வறுமைமிகுந்த கூலி விவசாயிகள் இந்நாட்டில் (கண்டி சீமையில்) குடியேறுவதை மனதார ஏற்று வந்தனரா? என்பது ஐயத்திற்கிடமான ஒனறேயாகும். தமிழ் நாட்டில் அக் காலப்பகுதியில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூக நிலமைகளே மக்கள் பெருமளவில் இடம்பெயர்வதற்கான பிரதான காரணங்களாகும். நிலப்பிரபுக்களின் கொடுரமான சுரண்டல். பிரிட்டிஸ் ஆட்சியாளர்களின் அடக்குமுறை போன்றன மேலதிக அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிலப்பிரபுத்துவ சுரண்டலும் காலனித்துவ அடக்கு முறைகளும் தாங்கவியலாத நிலமைகளைத் தோற்றுவித்தது போலவே காலநிலையும் பாதகமாக அமைந்தமையால் வறிய விவசாயிகளின் நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்தது. வறுமை பிணி மேலோங்கியது. இத்தகைய காரணங்களால் கிராமங்களிலிருந்து வெளி யேறிய மக்களின் பயணம் ஜீவமரண போராட்டமாகவே அமைந்தது. கிராமங்களிலிருந்து கால் நடையாகவே பயணித்து இராமேஸ்வரத்தை அடைந்தனர்.

மன்னார் கடற்கரை முதல் வன்னி பெரும் காட்டினூடே அமைந்த பயணமானது எவ்வளவு கடுமையானதாக அமைந்திருக்கும் என்பதை கற்பனை செய்ய முடியாது. மனிதர் நடந்து சுவடுபட்டுப் போன தடங்களும் ஒற்றையடிப் பாதைகளுமே அவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன. "அரிய வழி நடை" என மக்கள் வாய் திறந்து பாடியமை பயணத்தின் கொடூரத்தைக் காட்டி நிற்கின்றது. காட்டு வழியூனூடாக அமைந்த பாதை அதனூடாக இடம் பெற்ற பயணம் உயிரைப்பணயம் வைத்த ஒன்றாகவே அமைந்தது. பயணத்தின் இலக்கை அடையும் முன்னரே பலர் இறந்து போன வரலாறு பதிவாகின்றது. வறுமையையும் இயற்கை இடர்களையும் எதிர்த்துப் போராடி வென்றவர்களே தோட்டங்களை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வாழ்க்கையில் கண்டிராத கொடிய ஜுரத்தனாலும் மலேரியா மற்றும் கொலரா போன்ற நோய்களாலும் பலர் மரணித்தனர். வன்னி அனுராசபுரம் மாத்தளை என்ற பயணத்தில் சில நாட்களில் வெய்யில் சுட்டெறிக்கும் வேறு சில நாட்களில் புயலுடன் அடை மழை சீறியடிக்கும் இவற்றை எதிர் கொள்ள முடியாத உயிர்கள் வனாந்தரங்களில் மரணிக்க நேர்ந்தது. வீட்டையும் சுற்றத்தையும் ஊரையும் துறந்து கண்காணாத நாட்டில் நீண்ட தூரத்துக்கு சாரை சாரையாக நடந்து வந்தவர்களில் எஞ்சியோர் தோட்டங்களைச் சென்ற டைந்து உழைப்பின் சாதனையால் வளம் கொழிக்கும் சோலைகளை ஆக்கினர். கற்பனை செய்து பார்க்க முடியாத இடங்களில் தேயிலை எனும் பச்சைத் தங்கத்தினை நடுகை செய்தனர். போக்குவரத்துப்பாதைகள், பாலங்கள், வீதி ஓர கட்டிடங்கள் என புதிய உலகத்தைப் படைத்தனர்.

வெள்ளைத் துரைமார்கள் ஒழுங்கமைத்துக் கொடுத்த தற்காலிக குடில்கள் அவர்களின் குடியிறுப்புகளாயின. இவர்களைக் கடத்திக் கொண்டு வந்த கங்காணிமார்கள் துரைமார்களின் செயலாளர்களைப் போல செயற்பட்டனர். இவர்களில் முதற் சந்ததியினரை கடத்தி வந்தவர்கள் பெரிய கங்காணி என அடையாளப்படுத்தப்பட்டனர். கங்கணிகளின் மேலாதிக்க கட்டுப்பாட்டு அமைப்பிலேயே தொழிலாளர்கள் தோட்டங்களில் அமர்த்தப்பட்டனர். கங்காணிகளின் நேரடி கண்காணிப்பிலேயே தொழி லாளர்கள் வாழ நேர்ந்தது. அவர்களின் மாதாந்த வருமானத்தில் ஒரு தொகையினை கப்பமாக செலுத்த வேண்டிய நிலையும் காணப்பட்டது. இவ்வாறு பெரிய கங்காணிமார்களுக்கு தொழிலாளர் செலுத்திய கப்ப மானது 'பென்ஸ்' காசு என வழங்கப்பட்டது. தோட்டத்தில் வேலை செய்தல், குடியிறுப்பதற்கான லயக்காம்பிராக்கள் பெறுதல், தோட்டத்தை விட்டு நீங்குதல், மீளவும் குடியேறுதல், உணவுப் பொருள் பங்கீடு, உடுதுணி விநியோகம் போன்ற சகல அம்சங்களிலும் கங்காணிமார்களின் ஆதிக்கம், அடக்குமுறைகள் மிகவும் அழுத்தமாகவே காணப்பட்டது.

இவ்வாறான ஒரு அமைப்பினை அடிப்படையாகக் கொண்டே 'கணக்கு' என்ற சொல் அறிமுகமானது. ஒரு தொழிலாளி தன்னை அறிமுகப்படுத்தும் போது அல்லது பதிவினைக் குறிக்கும் போது குறித்த கங்காணியின் கணக்கில் இருந்தவர் அல்லது இருப்பவர் என குறிப்பிடுதல் வழக்கமாயிற்று. தொழிலாளர்களின் உயர்ந்த மதிப்பு பெற்ற கடவுளின் அவதாரம் போன்ற நிலையில் பெரிய கங்காணிமார் தொழிலாளர்களால் கருதப்பட்டனர். இவர்களை விட சில்லறை கங்காணி களும் தோட்டப்பகுதிகளில் காணப்பட்டனர். பெரிய கங்காணிகள் சில்லறை கங்காணிகள் துரைமார் ஆகியோரின் அடக்குமுறைகளுக்கும் கொடூரங்களுக்கும் உட்பட்டது மான அடிமை வாழக்கையையே தொழிலாளர்கள் முன்னெடுக்க நேர்ந்தது.

இத்தகைய வாழ்வியலை நிலைபேறாக பேணும் வகையில் தொழிலாளர்களுக்கான குடியிப்புகளும் நிர்மாணிக்கப்பட்டன. 'லயம்' எனப்படும் தொடர் வீடமைப்பு தொகுதிகளில் மக்கள் மந்தைகள் போல அடைக்கப்பட்டிருந்தனர் என்றே குறிப்பிடலாம். ஒரு 'லயம்' பத்து முதல் நாற்பது வரையிலான சிறு அறைகள்க கொண்டு அமைந்திருந்து. இவ்வறைகள் மலையக வழக்கில் 'காம்பரா' என் அழைக்கப்பட்டது. காம்பரா என்பது பத்து அடி நீளம் மற்றும் எட்டு அடி அகலம் கொண்ட பகுதியாகும். உள் காம்பராவுடன் மிகச்சிறிய வராந்தாவும் காணப்பட்டது. அதனை மலையக வழக்கில் 'இஸ்தோப்பு' என குறிப்பிடுவர். இந்த பத்தடி காம்ராக்குள்ளேயே குடும்பத்தினர் அனைவரும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இத்தகைய லயத்துக் காம்பிராக்களுக்குள்ளேயே சமையல் பொருட்களை வைப்பதற்கும் உடு துணிகளைப் பராமரிப்பதற்கும் பயன்படுத்த வேண்டிய நிலை காணப்பட்டது. அந்த அறைக்குள்ளே பரண் அமைத்து விறகுகளை சேமித்து வைக்க நேரிட்டது. அதனை மக்கள் 'அட்டாள்' என குறிப்பிட்டனர். இவ்வாறு சேகரித்து வைக்கப்படும் விறகுகளே மழை காலத்தில் பயன்படுத்தப்பட்டது.

குறித்த இந்த பத்தடி காம்பிராக்களுக்குள்ளேயே குடும்ப தாம்பத்தியம், இதர உறவினர்களுடனான தொடர்புகளைக் பேணுதல், விருந்தினர் வரவேற்பு, திருமணப் பேச்சு போன்ற அனைத்தும் இடம் பெற்றன. குடும் சண்டைகளும், சச்சரவுகளும் அவற்றுக்கான தீர்வுகளும் அதற்குள்ளேயே இடம் பெற்றன. மரபுசார்ந்த சடங்குகள் தெய்வ வழிபாடு உள்ளிட்ட அனைத்தும் அங்கு இடம் பெற்றன.

இந்த லயத்து வாழ்க்கை முறை தொழிலாளர்களை அடிமை நிலையில் வைத்திருப்பதற்கும், சுரண்டலை இடையீடின்றி நடத்துவதற்கும் சாதகமாக அமைந்தது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் அடிப்படை வசதிகளற்ற குடியிறுப்பகளில் தொழிலாளர்களை குடியேறச் செய்ததன் நோக்கம் சுரண்டலை, அடக்குமுறையைத் தொடர்ந்து பேணிக்கொள்வதேயாகும். இத்தகைய வாழ்க்கை முறையே பிற்காலத்தில் தொழிலாளர்கள் விழித்தெழவும் தொழிற்சங்கங்களை அமைத்தமைக்கும் காரணமாகியது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

லயத்து குடியிருப்பானது சாதியமைப்பின் ஆதிக்கத்தை படிப்படியாக தகர்ப்பதற்கும் ஏதுவானது. உயர்சாதி எனப்பட்டோரும் தாழ்த்தப்பட்டவர்கள் என கருதப் பட்டவர்களும் அடுத்தடுத்து அமைந்த லயக்காம் பிராக்களில் குடியிறுக்கும் கட்டாயத்தினை ஏற்படுத்தி யிருந்தது. இந்திய கிராமங்களில் போல ஒரு சாதியினருக்கு ஒரு தெருவென காணப்பட்து போன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையணிவது முதற் கொண்டு தலைப்பாகை அணிதல், தெருக்களில் நடமாடுதல் வீடுகளை அமைத்தல் போன்றவற்றில் காணப்பட்ட சாதிய வன்மங்கள் மற்றும் கொடூரங்கள் போன்ற நிலைமைகளை இங்கும் முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியது. அடுத்தடுத்து அமைந்த லயன்கள், தொழில் செய்யும் இடம் போன்றன ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு செயற்படும் நிலையைத் தோற்றுவித்திருந்தது. பிரச்சினைகள் எழும் போதும், நோயுற்ற போதும் அயலவர்கள் உதவுதல் என்ற நிலை பண்பாட்டின் அடிப்படையில் வளர்ந்தன. இதைவிட திருமணம், இறப்பு, பிறப்பு திருவிழாக்கள், தொழில் செய்யும் இடங்களில் உதவி ஒத்தாசை போன்றன இத்தகைய உறவினை பலப்படுத்தின. இலங்கையின் ஏனைய சமூகத்தினரோடு அல்லது இந்திய சாதிய அமைப்போடு ஒப்பிடும் போது மலையகத் தொழிலாளரிடையே சாதிய முறையிலான அழுத்தம் குறைவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாதியமைப்பு முறையிலான இறுக்கமான முரண்பாடுகள் வீழ்ச்சி கண்டு மனித நேய உறவுகள் நிலைபேறடைவதற்கும் வளர்வதற்கும் மூலமாக அமைந்த காலனித்துவம் தொடங்கி வைத்த முதலாளித்துவஞ் சார்ந்த வர்க்க அடிப்படையிலான உறவேயன்றி வேறல்ல. லயத்தில் வாழ்ந்த யாவரும் (பெரிய கங்காணி தவிர்ந்த) கூலித் தொழிலாளர்களானதால் அவர்களிடையே ஒற்றுமை உணர்வு மேலோங்கியமை மற்றும் உறவு கொள்ளுதல் இத்தகைய வர்க்க அடையாளம் வளர்ந்தமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை காலனித்துவ ஆட்சியின் முகாமைத்துவ வரக்கம் மற்றும் இதர சிறு முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை தரம் குறைந்தவர்களாக நோக்கியமையும் அடக்குமுறை நடவடிக்கைகளும் தொழிலாளர்கள் ஒரு வர்க்கமாக ஒன்றிணைவதற்குரிய நிலமைகளை ஏற்படுத்தியது. மேலும் தொழிலாளர்கள் முகங் கொடுத்த பிரச்சினைகள் முதலாளித்துவத்தின் கூறுகளான உழைப்பு, சுரண்டல், அடக்குமுறை ஆகியவற்றைச் சுற்றியதாகவே அமைந்தமையும் அவர்களை ஒன்றிணையச் செய்தது எனலாம்.

மலையகத்தின் பிரதான முரண்பாடு முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான உழைப்புச் சுரண்டல், அடக்குமுறை ஆகியனவற்றைச் சார்ந்திருந்தமையே சாதிய வலு குறைவதற்கு பிரதான காரணமாகியது என்பது குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் வலுவான தொழிற்சங்க இயக்கம் உருவாவதற்கும், பாரிய போராட்டங்களைத் தொழிலாளர் முன்னெடுத்துச் சென்றமைக்கும் வர்க்க ஒற்றுமையே பிரதான பங்காற்றியது எனலாம். ❑






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தலைவர்களை மறுபரிசீலனை செய்யத் தூண்டும்

# 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' எனும் சி.வி.வேலுப்பிள்ளையின் நூல்




சு.முரளிதரன்

மிகப்பெரும் வியப்பையையும் விந்தையையும் ஏற்படுத்தும் விதமாகவும் மலையகத்தில் வேர்விட்டு வளரும் சிவியியலுக்கு (சி.வி.வேலுப்பிள்ளையியல்) ஆழ்ந்த கனதியை ஏற்படுத்தம் விதமாகவும் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும் எனும் சி. வி. வேலுப்பிள்ளையின் கட்டுரைகளை தாங்கிய நூல் சென்னை தாய் வெளியீடாக திரு மு.நித்தியானந்தன் மற்றும் திரு எச். எச். விக்கிரமசிங்க அவர்களின் பெரும் முயற்சியினால் வாசகர் கைகளுக்கு கிட்டியுள்ளது.

பேராசிரியர் சோ. சந்திரசேகரனுக்கு காணிக்கையாக செலுத்தப்பட்ட இந்த நூலுக்குள் நுழையும் மலையகம் குறித்த தேடல் முயற்சியில் மலையக வரலாற்றின் விட்டுப்போன பக்கங்களை தேடுபவர்களும் அல்லது இதுவரை கிடைத்த ஆதாரங்களை வைத்து சிந்திப்பவர்களும் தமக்குள் தாமே சிலிர்த்துப்போகும் வண்ணம் மலையகம் சார்ந்த ஆளுமைகளை தனது சொல்லோவியங்களால் தகவல்களாலும் முன் அனுமானங்களாலும் நாம் காணாத ஒரு மலையக வரலாற்றை சி. வி படைத்துள்ளார் எனலாம்.

1959யில் தினகரனில் பேராசிரியர் கைலாசபதியின் உந்ததலிலால் தமிழில் எழுதும் முயற்சியை ஆரம்பித்த சி. வி. வேலுப்பிள்ளையின் இந்த ஆளுமைகளின் சிறு சரித தொகுப்பு அவரின் உச்சம் தொட்ட முயற்சிகளில் ஒன்றாக கருதப்பட வேண்டியிருக்கின்றது. மலைநாட்டு மக்களின் தலைவர்களாக 12 பேரும் உரிமைப் போர் தளபதிகளாக 14 பேரும் இதில் அச்சொட்டாக 1959 ஆம் ஆண்டில் படம் பிடிக்கப்பட்டுள்ளார்கள்.

சி. வி அவர்கள் அவர் காலத்தே மறைந்த நடேசய்யர், சாராநாதன், சிவனடியான் போன்றோர்களையும் அவரின் சமகாலத்தவர்களையும் குறித்த பதிவு மற்றும் அவர்களின் நிகழ்காலம் குறித்த விமர்சனம் எதிர்காலம் குறித்த ஆருடம் என்பவைகள் ரசனையூட்டும் வண்ணமும் அவர்கள் பால் அபிமானம் கொள்வதோ அல்லது அலட்டிக்கொள்ளாமல் விடுவதா என்பதை பூடகமாக வாசகர்களுக்கு சொல்வதில் எழுத்தாளர் எவ்வளவு சாமார்த்தியமாக செயற்பட்டிருக்கின்றார் என்பதை வாசிப்பவர்கள் புரிந்து கொள்வார்கள்.

யாராலும் அலட்சியம் செய்யப்பட முடியாத நடேசய்யர் ஏன் தேர்தலில் தோல்வி அடைந்தார் என்பதற்கு காரணமாக அவரோடு ஆமாம் போடுபவர்கள இருந்தார்களே அல்லாமல் ஆலோசனை சொல்ல யாருமில்லை என்பதை பதிவு செய்கின்றார். 1927 ஆண்டு நடேசய்யர் சுல்தானின் இடத்துக்கு சட்டசபைக்கு தெரிவு செய்யபட்டார் என சி. வி குறிப்பிடுகின்றார். ஐயரவர்கள் இலங்கையில் இல்மனைட் கனிம சுரங்க வேலை ஆரம்பிக்க குரல் கொடுத்ததும் நீர்கொழும்பில் இந்து மதத்தினருக்கு தேரிழுத்துச்செல்ல இருந்த தடையை நீக்கியதும் சொல்லப்பட்டுள்ளது. சாரல்நாடன் எமக்குக்காட்டிய நடேசய்யர் ஒரு நாயக வழிபாட்டு தலைவராக இருந்தார். ஆனால் சி. வி காட்டிய ஐயரின் எழுச்சி, வளர்ச்சி, வீழ்ச்சி மற்றும் மரணம் என்பன ஒரு நடுநிலை நோக்காக அமைவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகானை தலைவராக கொண்ட கோஜா முஸ்லிமான அசீஸ் ஒரு வர்த்தகராக இருந்து மலையக தலைவராக இருப்பதை எப்படி வர்ணிக்கின்றார் தெரியுமா? அரசியல்வாதிகள் அவரை வர்த்தகர் என்று சொல்லலாம்- வர்த்தகர்கள் அவரை அரசியல்வாதி என்று சொல்லலாம் என அவரின் இரு தனித்திறமைகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதோடு உல்லாசப் பிரியரான அவருக்கு மக்கள் மீது ஏற்பட்ட மோகத்தையும் தொண்டமானோடு ஏற்பட்ட இணக்கத்தையும் பின்னர் பிணக்கையும் நிதானமாக கையாண்டு எழுதி காங்கிரஸ் என்ற ஒரு மக்கள் இயக்கம் 1955 ஆண்டின் பின் ஒரு மகுடத்தை தரிக்க இரு தலைகளுக்கிடையிலான போட்டி தொண்டமான் காங்கிரஸ் மற்றும் அஸீஸ் காங்கிரஸ் எனும் இரு பிரத்தியேக சொத்துகள் தோன்ற காரணமானது என சிவி சொல்லி இருப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றது.

தொண்டமானின் அரசியல் நுழைவுக்கு அவரின் தந்தை எப்படி அடிப்படை அமைத்துக் கொடுத்தார் அதன் பின் அவரின் நுழைவும் ஸ்தாபத்தை தனது மூலதனமாதக்கிக்கொள்ள கையாண்ட யுத்திகளை பட்டும் படாமலும் சொல்பவராக சிவியின் தனித்துவம் சரியாக வெளிப்பட்டுள்ளது. தொண்டமான் தொடர்ந்து தலைவராக இருக்கும் வல்லமையை எப்படி ஏற்படுத்திக் கொண்டார்? 14 வருடங்கள் பெரி. சுந்தரம் பெற்றுக் கொண்ட பட்டறிவின் பின்னணியில் எப்படி தொண்டமான் ஒரே பாய்ச்சலில் அவருக்கு சமதை யானார்? தொண்டமான் வாசிப்பதால் தனது அறிவை பெருக்கிக்கொள்ளாவிட்டாலும் அறிவுள்ளவர்களை ஊதுகுழலாக்கி இலங்கையின் பொருளாதாரத்தை தாங்கும் 7 லட்சம் இந்திய வம்சாவளி மக்களின் தலைவர் என்பதை எங்கு யாராருக்கு எப்படி எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதை தீர்மானிக்கும் தொண்டாவின் சாணக்கியத்தை வஞ்சப் புகழ்ச்சி செய்கின்றார்.

மலையக தொழிற்சங்க அரசியல் துறையில் கனவான் களாக கொள்ளத்தக்க பலரை நேர்த்தியாக நிறுவிக் காட்டும் போது சி. வி அவர்களால் கண்ணியமிக்கவர் களாக போற்றப்படும் அவர்களை கண்களில் ஒற்றிக் கொள்ள வெண்டும் போல் தோன்றுகின்று. ஆர். மோத்தா. பெரி. சுந்தரம், கே. இராஜலிங்கம், ஐ.எக்ஸ். பெரோரா எள்.பி.வைத்திலிங்கம் ,குஞ்சிபொறி சண்முகம், ஏ. எஸ். ஜோன், எஸ் சேமசுந்தரம் போன்றோர்கள் பெயரளவிலேனும் சாதாரண மக்களிடம் வாழாவிட்டாலும் அவர்கள் மலைநாட்டு மக்களுக்காக செய்த பணிகள் இன்று அம்மக்களின் மேம்பாட்டுக்கு வழிவகுத்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

1890 யில் நெல்லுமலை தோட்டத்தில் பிறந்து இங்கிலாந்து சென்று சட்டத்தரணியாகி மகாத்மா காந்தியை சந்தித்து மக்கள் சேவைக்காக உந்தப்பட்டு இலங்கை சுதந்திர போராட்ட வீரர்களில் ஒருவராகவும் ஹட்டன் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வென்று பின் கைத்தொழில் வர்த்தக அமைச்சராகி இலங்கை வங்கி உருவாக்கத்துக்கும் காரணமாகிய பெயர் புகழ் விரும்பாத பெரி.சுந்தரம் மலையக மக்களின் சரித்திரம் எழுதப்படும் போது ஒரு புதிய இனத்தின் ஒரு புதிய சமுதாயத்தின் பிதா என புகழப்படுவது திண்ணமென சி.வி அவர்கள உறுதி உரைக்கின்றார். ஆனால் பெரி. சுந்தரத்தின் மேதாவிலாசம் ஏனோ இன்ற தலை முறையினருக்கு எடுத்துச் செல்லப்படவில்லையோ என்ற கவலையை அவரின் கூற்று ஏற்படுத்தி விடுகின்றது.

புசெல்லாவ சங்குவாரியில் பிறந்த கே.இராஜலிங்கம் 1927 காந்தியின் இலங்கை வருகையின் பின்னர் மக்கள் சேவைக்கு தயாராகி காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் கரடு முரடான பயணத்தை அனுபவித்து மக்கள் அபிமானம் வென்றவராக கல்விக் கண் திறப்பவராக செயற்பட்ட விதத்தை அப்பழுக்கின்றி சி.வி வெளிப்படுத்துகின்றார்.

தோட்ட அரசியலில் முன்னோடியான ஏ.எஸ். ஜோன் பின் அரசியலிலிருந்து விடுபட்டு ஓய்வு பெற்று காலம் கழிப்பதை அவரை பேட்டி காணுவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தும் ஆளுமைக்கான உரைச்சித்திரத்திலிருந்து கற்றுக் கொள்ள எவ்வளவோ இருக்கின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றார்.

டி. சாரநாதன் மற்றும் டி. இராமனுஜம் எப்படி நடேசய்யரின் மருமகன் என்ற உறவு என்பது பற்றி பரிந்து கொள்ளவும் பின்னர் ஐயரை விட்டு பிரிந்து அவர்கள் தனிப்பயணம் சென்று நயத்தக்க ஆளுமைகளாக உருவெடுத்தார்கள் என்பதை திருத்தமாக புரிந்து கொள்ள இந்த நூலில் போதிய தகவல்கள் உள்ளன. சாரநாதன் அவர்ளோடு ஒப்பிடும் போது மற்ற இருவரும் மைல் கணக்கில் பின்னால் இருந்தார்கள் எனச்சொல்கின்றார். எழுத்துத்துறையிலும் போராட்டத்தீ வளர்ப்பதிலும் தீவிரம் காட்டிய சராநாதன் 1940 முற்பகுதியில் ஏக்கமும் ஏமாற்றமும் கொண்டு சென்னை திரும்பினார் என்று குறிப்பிடுவதோடு ஆசை தீர பியர் அருந்தி அகால மரணத்தை தழுவிக் கொண்டார் என்கிறார். நடேசய்யரை விட்டு விலகிய இராமனுஜம் தன்னை நிலைநிறுத்தி தனி ஆளுமையாக ஜொலிக்க கண்டிக்கு வந்ததும் அங்கு எல்லோரினதும் அபிமானத்தை பெற்று நகர சபையில் உறுப்புரிமை பெற்று பின் அளுத்நுவர தொகுதியில் சுயேட்சையாக வெற்றி பெற்று முதலாவது பாராளுமன்றத்தில் நுழைந்த வரலாற்றின் உண்மைகள் சிவியின் பதிவில் இருக்கின்றன.

தொண்டமான் குடும்பத்தில் பிறந்த கே. குமாரவேல் எப்படி காங்கிரஸ் இயக்கத்தின் தனாதிகாரியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தான் ஒரு பக்திமானாக இருந்து எப்படி காலம் தள்ளினார் என்பதை வர்ணித்து கொட்டகலை தொகுதியில் வெற்றி பெற்று மக்கள் பிரதிநிதியானதையும் பின்னர் அவர் காங்கிரஸில் இருந்து விலகி தனது எண்ணப்படி சுயமாக தன்னை கட்டமைத்தக் கொண்டதை மற்றவர்கள் பரிதாபமாக பார்த்த போது சி.வி அவர்கள் அதனை "பெரிய முதலாளிகளாயுள்ள அரசியல்வாதிகள் தங்களை அடக்குமுறையிலிருந்தும் சுரண்டலிலிருந்தம் விடுவித்துவிடுவார்கள் என்ற பிரமையிலிருந்த மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள்" என முத்தாய்ப்பு வைக்கும் போது சி.வி உள் குத்தை யார் தான் புரிந்து கொள்ள முடியாது?

தனது சகாவான வி.கே. வெள்ளையனையும் சி.வி விட்டுவைக்கவில்லை. காங்கிரஸிலிருந்து வெளியேறிய வெள்ளையன் அட்டன் கோட்டையில் தன்னை கட்டியெழுப்பிக் கொண்டதையும் வாலிபத்தலைவரென்ற முறையில் வெள்ளையன் தமது நடவடிக்கைகளை உருவாக்குவதற்குரிய சிந்தனை செய்வதற்கு போதிய அவகாசமிருந்துள்ளது என்பதையும் காத்திருந்து, தவிர்க்க முடியாத உண்மையைக் கண்டு கொள்ளவும் அவருக்கு அவகாசமிருந்துள்ளது என்பதையும் கூறி மனிதர்கள உண்மையைக் காணும் போது, ஏகாந்த மலைகளுகளுக்குச் சென்று விடுகின்றனர் என்கிறார். ஆனால் கடவுள் தமக்குத தாமே கூறியுள்ளதைக் கவி சிரேஷ்டர் இரவீந்திரநாத் தாகூர் உலகத்துக்கு சொல்கின்றார்: "எனது விமோசனம் துறவறத்தில் தங்கியிருக்கவில்லை: படைப்பின் பந்தங்களை நான் மேற்கொண்டுள்ளேன்." எனக்கூறி வெள்ளையன் பற்றிய விவரணத்தை முடிக்கின்றார். வெள்ளையன் பிரம் மசரியத்தை கடைப்பிடித்தமையை பிடிக்காமல் இப்படி சொன்னாரோ தெரியவில்லை.

போஸ் சங்கம் அமைத்த செல்லையா, நாவலப்பிட்டியில் மறக்க முடியாத பணியாற்றிய கே. சுப்பையா, ஊவாவில் தன்னை மக்கள் தலைவனாக நிறுவிக்கொண்ட எஸ்.எம். சுப்பையா, யட்டியாந் தொட்டையை தளமாகக் கொண்டு களனி பள்ளத்தாக்கில் கோட்டை அமைத்த கே .ஜி. எஸ். நாயர், மடக்கும்புறவில் பிறந்த 2ஆம் உலக யுத்தில் போர் வீரராக இருந்து பின் காங்கிரஸில சேர்ந்த எஸ்.மாரியப்பா எப்படி ஊவாவில் சுப்பையாவும் தலவாக்கொல்லையில் சி.வி. வேலுப்பிள்ளையும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட தெரிவு செய்யப்பட அவர்களின் வகிபாகம், மலைநாட்டு சரித்திரத்தை நல்ல முறையில் உருவாக்க நடேசன் போன்ற சிலர் இருந்தால் போதும் எனப்பாராட்டப்படும் எஸ். நடேசனின் கல்வி மற்றும் அரசியல் பிரவேசம், இன்றும் எமக்கு வழிகாட்டியாக திகழும் பி. பி தேவராஜ் பற்றியெல்லாம் நற்பதிவுகள் இந்நூலில் உண்டு. தூரத்துப் பச்சை நாவலாசிரியாக நமக்கு அறிமுகமான காங்கிரஸ் மாதர் சங்கம் ஊடாக சேவை ஆற்றிய கோகிலம் சுப்பையா அம்மையார், அது போன்ற சிவபாக்கியம் குமாரவேல் எனும் பெண் ஆளுமைகள் இருவரும் சி.வியின் கவனத்தை ஈர்த்துள்ளது கவனிக்கத்தக்கது.

ஆளுமைகளின் புகை பிடிக்கும் பழக்கம், ரோஜா சூடும் விருப்பம், ஆடையணிகளில் ஒவ்வொருவருக்கும் தனித்துவ ஈடுபாடு, தலைவர்கள மேற்கொண்ட வெளி நாட்டுப்பயணங்கள், ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஆன்மீக ஈடுபாடுகள், இந்தியாவோடு கொண்டுள்ள உறவுகள் என பலரைப்பற்றி பல்வேறு கொசுறு தகவல்கள் நூலுக்கு சுவாரஸ்யம் சேர்ப்பதாக இருக்கின்றது.

மலையக மக்களின் தலைவர்களை இளைய தலைமுறை மறுபரிசீலனை செய்ய ஒரு கைந்நூலாக கொள்ளத்தக்க இந்த நூலை வெளிக்கொணர முழுப்பங்களித்த மு .நித்தியானந்தனுக்கும் எச். எச். விக்கிரமசிங்கவும் செய்த இந்த வரலாற்றுப் பங்களிப்பு அபரிமிதமானது என்றால் அது மிகையல்ல.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலை நோக்கியே பயணிக்கின்றோம்

நாங்கள் அனுதினமும் எல்லாவற்றையுமே
விட்டுக் கொடுத்துக் கொண்டே போகிறோம் என்பதற்காக
தியாகம் செய்வதற்காகவே உதித்த தியாகிகள் என்று
அர்த்தமில்லை......

எங்களின் உள்ளங்களும் முகங்களும்
அனுதினமும் புன்னகையோடு
கொண்டே இருக்கின்றன
என்பசிரித்துக்தற்காக
வாழ்வில் வலிகளே இல்லை என்று
அர்த்தமில்லை......

சகிப்புத் தன்மையோடு வெளி
சமுகத்தின் ஒவ்வொரு கேலி கிண்டல்களையும்
அனுதினமும்
பொறுத்துக் கொண்டு வாழ்கின்றோம்
என்பதற்காக கோபப்படவே தெரியாது என்று
அர்த்தமில்லை....

அனுதினமும் பலபேர் பலவிதமாக
விவாதிக்காமல்
அத்தனையையும்
வலக் கையின் மேல் இடக் கையை வைத்து
வாயினை துல்லியமாக அடைத்து
மௌனமாக கடந்து செல்கின்றோம்
என்பதற்காக
எங்களிடம் பதிலுக்கு - பதில் சொல்லும்
திறமை இல்லை என்று
நினைத்துவிடாதீர்கள்!!!

மனசாட்சியே இல்லாத முகங்களை எப்படி
உங்களால் காட்ட முடிகிறதோ!
தேவை ஏற்படும் போது இன்னுமொரு முகத்தையும்
எங்களாலும் காட்டமுடியும்.
அதுவரை
எங்களின் கைகளாலே கண்களை
இடைவெளியின்றி மூட
முயற்சி எடுத்து வருகின்றோம்!!!
எங்கள் உறவுகளின் இரத்தம் உதிரும்
கொடூரங்களில்
ஏதேனும் ஒரு அவலமாவது
விரலினிடையில்
நுழைந்து உங்களை கேள்வி
கேக்காத என்று...

குட்டக்குட்ட குனிவார்கள் என்றோ,
பிறரை எதிர்த்து
தைரியமாக பேச முடியாதவர்கள் என்றோ
அர்த்தப் படவே படாது...

நாங்கள் யாருக்கோ கட்டுப்பட்டு வாழ்கிறோம்
என்பதற்காக
அடிமைப்பட்டுக் கொண்டு கோழைகளாக
இருக்கின்றோம் என்று
அர்த்தமில்லை...

நிர்வாணமாக்கப்பட்ட - அந்த
நாலடிச் சுவருக்குள்ளே
கர்ப்பத்தில் வளர்ந்த
குழந்தையைப் போல!!

எமது சமுகமும் - இங்கே
கருவாகி உருவாகி- பலரது
காலடியில் மிதிப்பட்டுச்
சிதைக்கப்பட்டே சின்னாப்பின்னமாகி
அலங்கோலமாகச் செதுக்கப்பட்டுள்ளது...

ஓர் நாள் அத்தனை
கைகளும் மேலோங்கும்
அன்று நீங்க கொடுக்காத சுதந்திரத்தை
நாங்களே பெற்றுக் கொண்டு உங்களுக்கு
நிகராய் நிற்போம்!

பயம் வேண்டாம் உங்களை போன்று
நாங்கள் இனவாத போர்வையில்
அழியும் அற்பர்கள் அல்ல
அன்பர்களே!
உங்களோடு கைக்கோர்த்து
சுதந்திர கீதம்
பாட -முட்டிமோதும்
சாதாரண மானிட பிறவிகள் தான்
நாமும்...

மா. ஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பௌர்ணமி தினங்களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் கட்சிகள்



தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 வது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மாதாந்த ஆய்வரங்கத் தொடரின் காட்சிகள்



2023 பெப்ரவரி 24. 25. 26 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட புத்தக அரங்க விழாவின் காட்சிகள்



2023 மார்ச் 24. 25. 26 ஆம் திகதிகளில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெற்ற புத்தக அரங்க விழாவின் கட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.03.2023 அன்று களுத்துறை மில்லகந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற "தாயகம்" சஞ்சிகை வெளியீடு மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு



19.03.2023 அன்று பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் மாத்தளையில் இடம்பெற்ற சர்வதேச பெண்கள் தினக் கூட்டத்தின் காட்சிகள்



26.03.2023 அன்று நுவரெலியா - இராகலையில் இடம்பெற்ற சர்வதேச பெண்கள் தினக் கூட்டம்



26.03.2023 அன்று வவுனியாவில் இடம்பெற்ற சர்வதேச பெண்கள் தினக் கூட்டம்



6.03.2023 அன்று பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் கவிஞர் சி.சிவசேகரத்தின் பெண் விடுதலைக் கவிதைகளின் தொகுப்பான "கல்லாகவே ஆனாள்" கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வு



வவுனியாவில் இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் காட்சிகள்



23.03.2023 அன்று வவுனியா ஸ்ரீ நகர் சனச[illegible] சர்வதேச பெண்கள் தினக் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org